# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டம் வழங்கும் அதிகாரமுள்ள நிறுவனம்

## ஆண்டறிக்கை - 2019

**உள்ளடக்கம்**


| | பக்க எண் |
|---|---|
| வருடாந்த அறிக்கை 2019 | 01 - 69 |
| இறுதிக் கணக்கு 2019 | 70 - 90 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 91 |
| இறுதிக் கணக்கு தொடர்பான கணக்காய்வு கருத்து | 92 - 97 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் அவதானிப்பு | 98 - 100 |

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## தொலைநோக்கு

"சமூகப்பணிக் கல்வி பயிற்சி மற்றும் ஆய்வு என்பவற்றை வழங்குவதில் உள்நாட்டு, சர்வதேச மட்டத்தில் கேந்திர நிலையமாக ஆகுதல்."

## பணித்திட்டம்

“இலங்கையில் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரியில் எல்லா மட்டத்திலும் வேண்டிநிற்கின்ற சமூகப்பணி நிபுணத்துவமிக்க மனித வளத் தேவையை பூர்த்திசெய்வதும் சமூகப்பணி தொடர்பான தேவையான அறிவு மற்றும் நுட்பங்களை பயன்படுத்தி சமூகத்திற்கு சிறப்பான சேவையினை வழங்குவதுமாகும்”.

# பொழிப்புரை

ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது சமூகப்பணிக் கல்வியினை (Social Work) வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு கல்வி நிறுவனமாகும். 1992ம் ஆண்டு 41ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உயர் கல்வி நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 25 ஏ உறுப்புரையின் கீழ் பட்டம் வழங்கும் அதிகாரமுள்ள நிறுவனமாக 2005ம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டது. சமூக அபிவிருத்திக்காக சமூகப்பணி, சமூக நலன்புரி, சமூக அபிவிருத்தி, உளவியல் உளவளத்துணை எனும் துறைகளுடன் தொடர்பான கல்வியினையும், பயிற்சியினையும் ஆய்வுகளையும் மற்றும் பல்வேறு பாடநெறிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றது. மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு சமூகப்பணிக் கல்லூரி, பயிற்சிப் பிரிவு, மற்றும் ஆய்வுப் பிரிவு என தற்போது மூன்று கல்விப் பிரிவுகள் நடாத்தப்பட்டு வருவதுடன் அது தவிற நிதி மற்றும் நிருவாகப் பிரிவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய சமூக அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படும் சான்றிதழ் கற்கைநெறி, டிப்ளோமா, உயர் டிப்ளோமா, பட்டப் பாடநெறி, பட்டப்பின் பாடநெறி ஆகிய அனைத்தும் நாட்டின் தேவைக்கு பொருந்தும் வகையில் தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தைக் கொண்டுள்ளது. இப்பாட விதானம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கேற்ப (SLQF) தொழில்வாண்மையாளர்கள், கல்விமாண்கள் மற்றும் உள்ளக உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமூகப்பணிக் கல்லூரியினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுள் தொழில்வாண்மையான சமூகப்பணி முதுமாணி மற்றும் சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறிகள் முக்கியம் பெறுகின்றன. இது தவிற சைகை மொழி உரைபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறியும் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சிப்பிரிவினால் ஏராளமான டிப்ளோமா பாடநெறிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு உளவளத்துணை, முதியோர் பராமரிப்பு, சமூக பாதுகாப்பு சமுதாயஞ்சார் சீர்த்திருத்தம் போன்ற டிப்ளோமா பாடநெறிகள் முக்கியமானவை. அவ்வாறே உளவளத்துணை உயர்டிப்ளோமா பாடநெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பட்டப்பாடநெறி வரை முன்னேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தவிற சான்றிதழ் பாடநெறி மற்றும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகளை நாடுபூராகவும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் வேண்டுகோளின்படி நடாத்துவதோடு இதனூடாக சமூக அபிவிருத்தி துறையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் திறனை விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. சீதுவை லியனகேமுல்லையை மையமாகக்கொண்டு கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, அம்பாறை, வவுனியா, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மேற்குறித்த பாடநெறிகளை நடாத்திவருகின்றது.

ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் இலங்கையில் சமூக கொள்கைகளை கட்டியெழுப்புவதற்கான பல்வேறு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வுகளை மையமாகக் கொண்டு இப்பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கைகள் மற்றும் நூல்கள் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி துறைகளின் அபிவிருத்திக்கு பெரிதும் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.

நிறுவனத்தின் நான்கு பிரதேச பயிற்சி நிலையங்கள் அநுராதபுரம் - தலாவை, அம்பாறை, ஹம்பாந்தோட்டை - ரண்ண மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேங்களில் ஆரம்பிகப்பட்டுள்ளன. சீதுவை லியனகேமுல்லையை மையமாகக்கொண்டு நடாத்தப்படும் நிறுவனத்தின் நிகழ்ச்சிகளை நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் கொண்டு செல்வதனை நோக்கமாகக்கொண்டு இப்பிராந்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே இந்நிறுவனத்திற்கான நிலையான கட்டடத்தொகுதியானது சீதுவை பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்டு வருவதுடன் அதில் முதலாம் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் என இரு பகுதிகளைக் கொண்டதுடன் அதில் முதலாம் கட்ட நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டு நிறுவுனத்தினை அவ்விடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன. இக் கட்டடத்தொகுதிக்காக 01 பில்லியன் ரூபா பெறுமதியான நிதி தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிறுவனமானது தேசிய மற்றும் சர்வதேச நிறவுனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் சேர்ந்து பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளை நடாத்தி வருவதுடன் பெல்ஜியம் நாட்டின் லின்ங்பர்க் லியுவின் பல்கலைக் கழகத்துடன் இணைந்து கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன் ஊடாக நிறுவனத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு அதிகரித்து வருகின்றது. தற்போது நிறுவனத்தினால் மக்களுக்கு பாரியதொரு சேவையாற்றி வருவதுடன் 67 வருட வரலாற்றில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற இச் சமூகப்பணியானது பாராட்டத்தக்கதென குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**எம்.ரீ.ஆர். சாமினி அத்தனாயக்க**
**பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை)**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.**

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## வருடாந்த அறிக்கை - 2019

## 01. அறிமுகம்

1992ம் ஆண்டு 41ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆரம்பம் 1952ம் ஆண்டில் தொண்டு நிறுவனங்கள் சிலவற்றின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட ''சமூகப்பணிக் கல்விக்கான நிறுவனமாகும்''. 1964ம் ஆண்டு இந்நிறுவனம் அரசினால் உடமையாக்கப்பட்டதுடன் அது ''இலங்கை சமூகப்பணிக் கல்லூரியாக'' பெயரிடப்பட்டது. அதன் பின்னர் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஏ, பந்தியின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவனமாக முன்னேற்றமடைந்தது.

1992 இன் 41ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தின் நோக்கங்களாவன,

01. தொழில்வாண்மைக் சமூகப்பணிக் கல்வி, சமூக நலன்புரி முகாமைத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான உயர் கல்வியை நடாத்துதல், முன்னேற்றுதல் மற்றும் அதனை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு கொண்டுசெல்லல்.
02. பயிற்சிப் பாடநெறிகளை விரிவுபடுத்தல், அவற்றை பலமிக்கதாக்கல், சமூக நலன்புரிக்கான மனித வள அபிவிருத்தியினை மேற்கொள்ளும் வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளுதல், புறந்தள்ளப்பட்டவர்களை வலுவூட்டுதல், மனித ஆற்றல் மற்றும் தொழில்வாண்மையான ஆற்றல் அபிவிருத்தியினூடாக நபர்களுக்கு மிகச்சிறந்த வாழ்க்கைத்தரத்தினை பெற்றுக்கொடுத்தல்.
03. சமூகப்பணிக் கல்வி, பயிற்சி மற்றும் சமூக நலன்புரி மற்றும் அபிவிருத்தியோடு தொடர்புபட்ட ஆய்வுகளை மேற்கொள்ளுதல், முன்னேற்றுதல் மற்றும் அவற்றை நடாத்திச் செல்வதன் ஊடாக சமூக அபிவிருத்தித்துறையை முன்னேற்றுதல்.
04. சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தியுடன் தொடர்பான கொள்கைகளை தயாரிப்பதற்கு, திட்டமிடுவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான விசேட பங்களிப்பினை வழங்குதல்.
05. மேற்குறித்த அனைத்து நோக்கங்களையும் வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்கு தேவையான நிதி, கல்விசார், கல்விசாரா மனித வளம் மற்றும் குறிப்பாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கென நிலையான ஓர் இடத்தினை நிர்மானித்தல் போன்ற அடிப்படை வசதிகள் உட்பட ஏனைய வளங்களை பெற்றுக்கொள்ளுதல்.

**மேற்படி நோக்கங்களை சாத்தியமாக்கிக்கொள்வதற்கு இந்நிறுவனத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

01. தொழில்வாண்மையிலான சமூகப்பணி கல்வியினை வழங்குதல்
02. சமூகப்பணி தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நெறிகளையும் நடாத்துதல்.
03. சமூகப்பணி, சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் ஆய்வுகள் மற்றும் ஆக்கங்களை வெளியிடுதல்
04. சமூக நலன்புரி துறைகளில் உளவளத்துணை சேவைகளை நடாத்துதல்.

05. சமூக நலன்புரி துறையில் ஈடுபடுகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களின் முகாமைத்துவம் வினைத்திறனை முன்னேற்றுதல்.

06. சமூக நலன்புரி கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்குவதுடன் அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை கௌரவ அமைச்சருக்கு வழங்குதல்.

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு**

01. சமூகப்பணி முதுமாணி, பட்டப் பாடநெறி, டிப்ளோமா, தொழில்வாண்மையான டிப்ளோமா பாடநெறி மற்றும் ஏனைய பயிற்சிப் பாடநெறிகளுக்கான பாடவிதானங்களை தயாரித்தல், ஒழுங்குபடுத்தல், நடாத்துதல், மற்றும் களப்பயிற்சி ஒருங்கிணைப்பு.

02. சமூக நலன்புரி மற்றும் சமூக கொள்கை பற்றிய ஆய்வுகளை நடாத்துதல், முன்னேற்றுதல், மற்றும் நடைமுறைபடுத்தல்

03. சமூகப்பணி தொடர்பான படைப்புக்கள் மற்றும் சஞ்சிகைகள் வெளியிடல்.

04. சமூக நலன்புரி செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் உத்தியோகத்தர்களின் தொழில்வாண்மையான முகாமைத்துவரீதியான திறன்களை விருத்திசெய்துகொள்வதற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் பயிற்சிப் பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் நடாத்துதல்.

05. கௌரவ அமைச்சருக்கு சமூக நலன்புரி கொள்கை தயாரிப்பதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும் உதவுவதற்காக அவரது கலந்துரையாடல்கள் மற்றும் உத்தியோகத்தர்களது கூட்டங்களில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கு உதவுவதும் அதற்கான எழுத்துமூல ஆலோசனைகளை முன்வைத்தலும்.

06. அரச மற்றும் அரசசார்பற்ற பிரிவுகளில் சமூக நலன்புரி திட்டங்களை நடைமுறைபடுத்தும் போது சமூகப்பணி மாணவர்களை அவர்களின் செயற்திட்டம் ஊடாக அந்நிறுவனங்களில் இணைக்கப்படுதல், அவர்களின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தேவையான வழிகாட்டலை வழங்குதல், அவர்களின் சேவைகளை காத்திரமாக மேற்கொள்வதற்கு ஆலோசனை சேவை கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

## 02. ஆளும் சபை

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் 7 (1) ஆம் உப பிரிவின் படி 2018 ஆம் ஆண்டில் ஆளும் சபையில் அங்கம் வகித்தவர்களின் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. அசோக்கா அலவத்தை (தவிசாளர் உத்தியோகப் பூர்வமாக) | - | செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு 2018.12.21 முதல் ஒக்டோபர் வரை |
| 02. | திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ் அத்தனாயக்க | - | பணிப்பாளர் நாயகம் (ப.க) 2019.01.01 முதல் இதுவரை |
| 03. | பேராசிரியர் பீ.எஸ்.எம். குணரத்ன | - | உறுப்பினர் 2015.03.03 முதல் 2019.10.30 வரை |
| 04. | திரு ஈ.கே. கணிகம | - | உறுப்பினர் 2015.03.03 முதல் 2019.10.30 வரை |
| 05. | செல்வி. விசாக்கா அமரசேக்கர | - | உறுப்பினர் 2019.02.08 முதல் 2019.10.30 வரை |
| 06. | திரு. எல்.வீ.ஐ. லியனரத்ன | - | உறுப்பினர் 2019.03.28 முதல் 2019.10.30 வரை |
| 07. | சங். தம்பர அமில தேரர் | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |
| 08. | பேராசிரியர். ஏ.பீ.என்.டீ.எஸ் அபேசுந்தர | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |

| | | |
|---|---|---|
| 09. பேராசிரியர். குசுமா எதிரிவீர கருணாரத்ன | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |
| 10. பேராசிரியர். ஐ.திஸ்ஸாநாயக்க | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |
| 11. பேராசிரியர். டீ.ரீ. கிங்ஸ்லி பர்னாட் | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |
| 12. பேராசிரியர். சந்திமா விஜேகுணவர்தன | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |
| 13. பேராசிரியர். பீ.ஜே. குமாரசிங்ஹ | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |
| 14. பொறியியலார் பந்துல விக்ரமாராச்சி | - | உறுப்பினர் 2019.02.11 முதல் 2019.10.30 வரை |

**03 கல்விசார் பீட சபை**

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின்படி1993.12.09ம் திகதி அரச சுற்றுநிருபத்தினால் எடுத்துக்காடடப்படும் நியமங்களுக்கு ஏற்ப நியமிக்கப்பட்ட கற்றல் நடவடிக்கைகளுக்கான கல்விசார் பீட சபை வருமாறு.

| | | |
|---|---|---|
| 01. திருமதி. அசோக்கா அலவத்தை (தவிசாளர் உத்தியோகப் பூர்வமாக) | - | செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு 2018.12.21 முதல் 2019.10.30 |
| 02. திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ் அத்தனாயக்க | - | பணிப்பாளர் நாயகம் (க.ஆ) 2018.07.09 – 2019.01.01 வரை பணிப்பாளர் நாயகம் (ப.க) 2019.01.01 முதல் |
| 03. பேராசிரியர். டப்.ஏ. தனபால | - | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 04. பேராசிரியர். தயா எதிரிசிங்ஹ | - | சிரேஷ்ட பேராசிரியர், களனிப் பல்கலைக்கழகம் |
| 05. பேராசிரியர். உபாலி பன்னிலகே | - | பீடாதிபதி, மானிடவியற் பிரிவு, ருஹுணு பல்கலைக்கழகம் |
| 06. பேராசிரியர். பிரேமகுமாரத சில்வா | - | பீடாதிபதி, சமூக விஞ்ஞானப் பிரிவு கொழும்பு பல்கலைக்கழகம் |
| 07. கலாநிதி. ஏ.டப்.கே.டப். சுபசிங்ஹ | - | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்லைக்கழகம் |
| 08. கலாநிதி எஸ்.எம்.ஏ.கே. சமரகோன் | - | துறைத் தலைவர் வணிக – முகாமைத்துவ பீடம் களனி பல்கலைக்கழகம். |
| 09. திருமதி. கௌரி வாசுதேவன் | | பணிப்பாளர் (பயிற்சிப் பிரிவு) |
| 10. திரு. கே.எம்.வை. கருணாரத்ன | - | பணிப்பாளர் (சமூகப்பணிக் கல்லூரி) |
| 11. திரு. எம்.எஸ்.எம். அஸ்மியாஸ் | - | பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி, கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீடு) |
| 12. திருமதி. சீ.எச்.டீ. ஹெட்டியாராச்சி | - | பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் |

### 04. கல்விசாரா பணிக்குழுவினர்

### (அ) நிர்வாக பணிக்குழுவினர்

2019ஆம் ஆண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிருவாகப் பிரிவில் உள்ளடக்கம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ் அத்தனாயக்க | - | பணிப்பாளர் நாயகம் (ப.க) 2019.01.01 முதல் இது வரை |
| 02. | திருமதி. எல்.கே. புஷ்பகாந்தி | - | பணிப்பாளார் (நிதி மற்றும் நிர்வாகம்) 2017.03.01 முதல் இது வரை |
| 03. | திரு.கே.எஸ்.டப். விக்ரமசிங்ஹ | - | கணக்காளர் 2015.12.03 முதல் 2019.07.03 வரை |
| 04. | திருமதி. எம்.கே. பலிஹக்கார | - | நிர்வாக உத்தியோகத்தர் 2005.07.01 முதல் 2019.11.16 வரை |
| 05. | திருமதி. சீ.எச்.டீ. ஹெட்டியாராச்சி | - | பதிவாளர் 2013.09.16 முதல் இது வரை |
| 06. | திருமதி. யு.டீ.டீ.டீ. உஸ்ஹெட்டி | - | உள்ளக கணக்காளய்வாளர் 2011.10.17 முதல் இது வரை |

**நிருவாகப் பிரிவில் ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமையும்**

| இல | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | நிரந்தரம் | இணைப்பு அடிப்படையில் | தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| 1. | கணக்கீட்டு உத்தியோகத்தர் | 01 | 01 | - | - |
| 2. | உதவிப் பதிவாளர் | 01 | 01 | - | - |
| 3. | கணினி நிகழ்ச்சித்திட்ட இயக்குனர் | 01 | 01 | - | - |
| 4. | நிகழ்ச்சித்திட்ட இயக்குனர் | 01 | 01 | - | - |
| 5. | முகாமைத்துவ உதவியாளர் | 34 | 34 | - | - |
| 6. | விடுதி பராமரிப்பாளர் | 01 | 01 | - | - |
| 7. | கட்புல செவிப்புல நுட்பவியலாளர் | 01 | - | - | - |
| 8. | கட்புல செவிப்புல உதவியாளர் | 01 | 01 | - | - |
| 9. | மொழி பெயர்ப்பாளர் | 02 | 01 | - | - |
| 10. | வரவேற்பாளர்/தொலைபேசி இயக்குனர் | 01 | 01 | - | - |
| 11. | சாரதி | 09 | 09 | - | - |
| 12. | அலுவலக உதவியாளர் | 15 | 13 | - | - |
| 13. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (நிலைய பொறுப்பு) | 04 | 03 | - | - |
| 14. | காவல் உத்தியோகத்தர்கள் | 01 | 01 | - | - |

## (ஆ) கல்விசார் உத்தியோகத்தர்கள்

2019ஆம் ஆண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ் அத்தனாயக்க | - | மேலதிக பணிப்பாளர் நாயகம் கல்வி 2017.01.16 முதல் |
| | **சமூக பணிக் கல்லூரி** | | |
| 01. | திரு. கே.எம்.வை. கருணாரத்ன | - | பணிப்பாளர் (சமூகப்பணிக் கல்லூரி) 2017.01.24 முதல் |
| 02. | திரு. வரதராஜா ஜெயரூபன் | - | விரிவுரையாளர் II 2006.07.03 முதல் 2012.07.02 வரை விரிவுரையாளர் I 2012.07.03 முதல் 2017.07.31 வரை<br>சிரேஷ்ட விரிவுரையாளர் 2017.08.01 முதல் இது வரை |
| 03. | திருமதி.ஈ.ஏ.எம்.எஸ்.ஜீ. விஜேசேக்கர | - | விரிவுரையாளர் II 2006.07.03 முதல் 2012.07.06<br>விரிவுரையாளர் I 2012.07.07 முதல் 2017.07.31<br>சிரேஷ்ட விரிவுரையாளர் 2017.08.01 |
| 04. | திரு. யு.எல்.எம். அஷ்கர் | - | விரிவுரையாளர் II 2009.03.02 முதல் 2015.03.01 வரை<br>விரிவுரையாளர I 2015.03.02 முதல் இது வரை |
| 05. | திருமதி. எஸ். சிவகுமாரன் | - | விரிவுரையாளர் II 2013.09.16 முதல் 2019.03.15 வரை |
| 06. | திருமதி. எம்.கே.பீ.ஐ.யூ குணரத்ன | - | விரிவுரையாளர் II 2013.09.16 முதல் இது வரை |
| 07. | திருமதி. சீ.எம். முனசிங்ஹாரச்சி | - | விரிவுரையாளர் II 2013.09.16 முதல் இது வரை |
| 08. | திருமதி. வீ. பாலமதி | - | விரிவுரையாளர் II 2013.09.16 முதல் இது வரை |
| 09. | திருமதி. எச்.எம்.எஸ். ஹேரத் | - | விரிவுரையாளர் II 2014.05.02 |
| 10. | செல்வி. எல் ஆர் அபேவிக்ரம | - | விரிவுரையாளர் II 2014.05.02 2019.03.23 வரை |
| 11. | திருமதி. எச்.எம்.எஸ் நிரோஷனி | - | விரிவுரையாளர் II 2014.05.02 |
| 12. | திருமதி. எல்.சீ. இனோக்கா ஜயசேன | - | விரிவுரையாளர் II 2015.12.01 |
| 13. | திருமதி. வை.எச்.சமுத்ரிக்கா சில்வா | - | விரிவுரையாளர் II 2015.12.01 |
| 14. | திருமதி. ஏ.எம். மானாமுதலி | - | விரிவுரையாளர் II 2018.08.01 |
| 15. | திருமதி ஏ.பி.எல் புத்தி நிருக்ஷிக்கி | - | விரிவுரையாளர் II 2018.08.01 முதல் இது வரை |
| 16. | திரு. டி.எம்.டப்.கே.சந்திரசிரி | - | நூலகர் 2015.06.01 முதல் இது வரை |

**(2) பயிற்சி பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. கௌரி வாசுதேவன் | - | பணிப்பாளர் (பயிற்சி) 215.05.05 முதல் இதுவரை |
| 2. | திருமதி. தீப்தி நிரோஷிகா | | பயிற்சி உத்தியோகத்தர் II 2007.03.01 முதல் 2013.02.28 வரை |
| | | - | பயிற்சி உத்தியோகத்தர் I 2013.03.01 முதல் 2018.07.31 வரை |
| | | | சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் 2018.08.01 முதல் இதுவரை |
| 3. | திருமதி. குமுதுனி வெதிசிங்ஹ | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2012.05.01. முதல் 2019.09.30 வரை |
| | | | சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் 2019.10.01 முதல் இதுவரை |
| 4. | திரு. பீ.கே.எஸ் கருணாரத்ண | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 5. | திரு. பீ.சீ. ஹெட்டியாராச்சி | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 6. | திருமதி. ஏ.எம்.கே.எல் அதிகாரி | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 7. | திரு. ஏ.எச் உபைதுல்லாஹ் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 8. | திரு. ஜே. இரோன் பிரசாத் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 9. | திரு. ரீ. தர்சன் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.09.02 முதல் இதுவரை |
| 10. | திரு. வை.எம். நிம்சாத் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2017.07.03 முதல் இதுவரை |
| 11. | திருமதி. பீ.ஜீ.ஐ மதுஷானி சமரசிங்ஹ | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2017.07.03 முதல் இதுவரை |

**(3) சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப்பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எம்.எஸ்.எம். அஸ்மியாஸ் | - | பணிப்பாளர், ஆய்வுப் பிரிவு 2017.05.01 முதல் இதுவரை |
| 2. | திரு. ஜே.கே.பீ.யூ கீர்த்தி | - | ஆய்வு உத்தியோகத்தர் 2013.08.01 முதல் 2018.08.01வரை |
| | | | சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் 2018.08.01 முதல் இதுவரை |
| 3. | திரு. ஹரிஹரதாமோதரன் | - | சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் 2018.08.01 முதல் இதுவரை |
| 4. | திருமதி. நிலுகா விஜேபண்டார | - | ஆய்வு உத்தியோகத்தர் 2017.01.16 முதல் இதுவரை |
| 5. | திருமதி.எச்.கே.எஸ்.கே. சிரிகுமார | - | ஆய்வு உத்தியோகத்தர் 2014.05.02 முதல் இதுவரை |
| 6. | செல்வி. கே.டப்.ரீ.கே. கரந்தவல | - | ஆய்வு உத்தியோகத்தர் 2017.07.03 முதல் 2019.04.23 வரை |
| 7. | ஏ. எச். இந்திக்க சஞ்ஜீவ | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் இதுவரை |
| 8. | திருமதி. கே.சீ.கே. த தாப்ரோவ் | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் இதுவரை |
| 9. | செல்வி. ஏ. எரந்தி ஜயவர்ன | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் இதுவரை |
| 10. | திருமதி. எஸ்.எச்.என். மதுசானி சில்வா | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் இதுவரை |
| 11. | திரு. என்.டப்.எப் சிந்த்தக்க | - | உதவி ஆய்வாளர் 2017.07.10 முதல் 2019.06.30 வரை |

**வெளிநாட்டு புலமை பரிசில் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்ற உத்தியோகத்தர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. சீ.எம்.முனசிங்ஹாரச்சி | - | 25th Asia pacific joint regional Social work Conference 2019.09.17-20 இந்தியா |
| 02. | திருமதி. எம்.கே.பீ.ஐ.யூ குணரத்ன | - | அதே - |
| 03. | செல்வி. எச்.எம்.டீ. எஸ். ஹேரத் | - | அதே - |
| 04. | திருமதி. எச்.எம்.எஸ். நிரோசனி | - | அதே - |
| 05. | திருமதி. கே.எஸ். வெதிசிங்ஹ | - | அதே - |
| 06. | திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ். அத்தனாயக்க | - | 4th Edition of the social work International conference 2019.11.07-08 UNkdpah |

**உள்நாட்டு பயிற்சிகளில் பங்குபற்றியோர்**

1. வீதி ஒழுங்கிற்கு அமைவாகவும் பாதுகாப்பாகவும் வாகனம் ஓட்டுதல் மற்றும் பொதுசன தொடர்பாடலை முன்னேற்றி சிறந்த மனப்பாங்கு மாற்றத்தினை அபிவிருத்தி செய்தல் தொடர்பான ஒருநாள் பயிற்சி – 2019.02.08 – 04 உத்தியோகத்தர்கள்.
2. தேசிய போதைப்பொருள் தவிர்ப்பு நிகழச்சியை ஒட்டியதாக அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களையும் விளிப்பூட்டும் நிகழச்சி 2019.02.26 – 06 உத்தியோகத்தர்கள்.
3. அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு சிறந்த சுகாதார பழக்கங்களை பேணுவதற்கும் பல்வேறு தொற்றா நோய்களிலிருந்து விடுபடுவதற்கு உணவுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளம் விதமும் சீனி பயன்பாடு தொடர்பான விளிப்பூட்டலுக்கான வைத்திய ஆலோசனை – 019.03.05 31 உத்தியோகத்தர்கள்.
4. 2018ம் ஆண்டு 19ம் இலக்க கணக்காய்வுச் சட்டம் தொடர்பாக அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களையும் விளிப்பூட்டும் நிகழ்ச்சி 2019.04.01 – 30 உத்தியோகத்தர்கள்.
5. தாபனக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு தொடர்பான 2 நாள் விளிப்பூட்டல் நிகழ்ச்சி – 2019.05.02ம் 3ம் திகதிகளில் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 10 உத்தியோகத்தர்கள்.
6. அலுவலக உதவியாளர்களின் மனப்பாங்கு மற்றும் தொழில்வாண்மை அறிவினை மேம்படுத்துவது தொடர்பான இரு நாள் விளிப்பூட்டல் நிகழ்ச்சி வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 07 உத்தியோகத்தர்கள்.
7. உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கினை நடைமுறைப்படுத்தல் பற்றிய ஒருநாள் பயிற்சிப்பட்டரை- 2019.05.30 வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 07 உத்தியோகத்தர்கள்.
8. தற்போதுள்ள அலுவலக முறைமை மற்றும் அலுவலக முகாமைத்துவம் தொடர்பான விளிப்பூட்டல் நிகழச்சி- 2019..05.15 – செத்சிரிபாய 2ம் கட்டம் 1ம் மாடிக் கேட்போர்கூடம் - 06 உத்தியோகத்தர்கள்.
9. அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு தொற்றா நோய்களிலிருந்து விடுபடுவதற்கு நடாத்தப்படும் வைத்திய பரிசோதனை – செத்சிரிபாய 2ம் கட்டம் 1ம் மாடியில் அமைந்துள்ள கேட்போர்கூடம் 10 உத்தியோகத்தர்கள்.
10. ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பான விளிப்பூட்டல் நிகழ்ச்சி ரூபா. 14,000/= திருமதி. டீ.எம்.பீ திஸ்ஸாநாயக்க மற்றும் செல்வி என்.எச். ஹேவாபத்திரன்ன – PRAG நிறுவனம் - 2019.06.13

11. மிகவும் வினயமுள்ள அரச பணிக்காக அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தப்படும் இசை கலந்த விமர்சனரீதியான களிப்பூட்டும் நிகழச்சி - செத்சிரிபாய 2ம் கட்டம் 1ம் மாடி கேட்போர்கூடம் - 13 உத்தியோகத்தர்கள். வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 2019.06.17 - 07 உத்தியோகத்தர்கள்.
12. நிருவாக உத்தியோகத்தர்களது பொருப்புக்களும் கடமைகளும் பற்றிய 3ன்று நாள் பயிறசி வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் 2019 ஜுன் மாதம் 17,18,19 – 02 உத்தியோகத்தர்கள்.
13. பெறுகை ஆணைக்குழுவும் முன்மொழியப்பட்டுள்ள புதிய பெறுகை வழிகாட்டல் தொடர்பான இருநாள் பயிற்சிப்பட்டறை 2019.06.27,28ம் திகதிகளில் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 04 உத்தியோகத்தர்கள்.
14. 2018ம் ஆண்டு 19ம் இலக்க கணக்காய்வுச் சட்டம் தொடர்பாக அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களையும் விளிப்பூட்டும் நிகழ்ச்சி செத்சிரிபாய 2ம் கட்டம் 2ம் மாடியில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குறிய கேட்போர்கூடம் 2019.07.05ம் திகதி – 07 உத்தியோகத்தர்கள்.
15. புதிய செயற்திட்ட முன்மொழிவுப் பத்திரத்தினை அறிமுகப்படுத்தும் பயிற்சிப்பட்டறை – அமைச்சின் கேட்போர்கூடம் - 2019.08.05 - 05 உத்தியோகத்தர்கள்.
16. அமைச்சரவை பத்திரம் தயார்செய்து முன்வைத்தல் தொடர்பான பயிற்சி – 2019.08.22. வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 03 உத்தியோகத்தர்கள்
17. நிறுவனத்தின் வருடாந்த கூட்டம் - திருமதி. யூ.டீ.டீ.டீ ஹெட்டியாராச்சி, (உள்ளக கணக்காய்வாளர்) 12,600/-
18. 2016 ம் ஆண்டு 12ம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக அமைச்சினதும் அதன் இணை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தப்படும் விளிப்பூட்டல் நிகழ்ச்சி. அமைச்சரவைக் கேட்போர்கூடம் - 2019.09.17 - 12 உத்தியோகத்தர்கள்.
19. நவீன சிந்தனை மற்றும் மனப்பாங்கினை கட்டியெழுப்புவதற்கான ஒருநாள் கருத்தரங்கு 2019.10.08 - செத்சிரிபாய 2ம் கட்டம் 2ம் மாடியில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குறிய கேட்போர்கூடம் - 10 உத்தியோகத்தர்கள்.
20. சாரதிகளின் மனப்பாங்கு மற்றும் அறிவினை மேம்படுத்தல் தொடர்பான இருநாள் பயிற்சிப்பட்டறை – 2019.10.24, 25 வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியக் கேட்போர்கூடம் - 01 உத்தியோகத்தர்

1. நிகழ்ச்சிகள் தொடர்பான சாராம்சம் (2019.12.31ம் திகதியிலமைந்த)

**சமூகப்பணிக் கல்லூரி**
**அட்டவனை இல. 01**

**சமூகப்பணிக் கல்லூரிப் பாடநெறிகளின் முன்னேற்றம்**

| செயற்பாடு | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி) | செலவு | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சேவை பெறுனர் | | செயற்திட்ட எண்ணிக்கை |
| | | | பெண் | ஆண் | |
| சமூகப்பணி முதுமாணிபட்டப் பாடநெறி 2018/2019 (ஆங்கில மொழிமூலம்) | 4,086,000.00 | 1,808,994.94 | 7 | 9 | 01 |
| சமூகப்பணி முதுமாணிபட்டப் பாடநெறி 2018/2019 (சிங்கள மொழிமூலம்) | 5,008,000.00 | 1,540,821.51 | 9 | 15 | 01 |
| சமூகப்பணி முதுமாணிபட்டப் பாடநெறி 2018/2019 (தமிழ் மொழிமூலம்) | 3,304,000.00 | 600,000.00 | 2 | 14 | 01 |
| சமூகப்பணி முதுமாணிபட்டப் பாடநெறி 2019/2020 (ஆங்கில மொழிமூலம்) | 4,994,000.00 | 513,241.00 | 9 | 12 | 01 |
| சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறி 2015/2019 | 521,700.00 | 8,633,700.56 | 54 | 31 | 01 |
| சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறி 2016/2020 | 482,880.00 | | 40 | 15 | 01 |
| சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறி 2017/2018 | 662,750.00 | | 47 | 09 | 01 |
| சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறி 2018/2019 | 480,400.00 | | 38 | 17 | 01 |
| சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறி 2019/2020 | 1,933,500.00 | | 29(S)<br>26 (T)<br>17(E) | 25(S)<br>26 (T)<br>14 (E) | 03 |
| சமூகப்பணி உயர்டிப்ளோமா பாடநெறி 2018/19 (சிங்கள, தமிழ் மொழிமூலம் | 342,500.00 | | 24 | 11 | 01 |
| சமூகப்பணி உயர்டிப்ளோமா பாடநெறி 2019/20 (சிங்கள, தமிழ் மொழிமூலம்) | 569,500 | | 16(S)<br>12 (T) | 08 (S)<br>04 (T) | 02 |

சமூகப்பணிக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சமூகப்பணிக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்கான மொத்தச் செலவு அட்டவனை 01 இல் வழங்கப்பட்டுள்ளது.

### பயிற்சிப் பிரிவு

### அட்டவனை 02

### 2019.01.01 முதல் 2019.12.31 வரை செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம்

| | செயற்பாடு | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி) | செலவு | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | சேவை பெறுனர் | | செயற்திட்ட எண்ணிக்கை |
| | | | | பெண் | ஆண் | |
| 01. | தொழில் வழிகாட்டல் தின நிகழ்வுக்காக காலி சவுத்லன்ட் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சி (ரண்ண நிலையம்) | 0.45 | | 400 | | 01 |
| | ஆற்றல் விருத்தி பயிற்சி – சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்கள் (ரண்ண நிலையம்) | | 32,636.00 | 42 | | 01 |
| | ஆற்றல் விருத்தி பயிற்சி – சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்கள் (தலாவை நிலையம்) | | 26,940.00 | 25 | | 01 |
| | ஆற்றல் விருத்தி பயிற்சி – சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்கள் (அம்பாறை நிலையம்) | | 30,305.00 | 37 | | 01 |
| | ஆற்றல் விருத்தி பயிற்சி – சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்கள் (கிளிநொச்சி நிலையம்) | | 31,565.00 | 41 | | 01 |
| 02 | பயிற்சி வழிகாட்டியை தயாரித்தல் | 983,632.00 | 17,825.00 | 12 | | 01 |
| | பயிற்சி நாளேடு | | 491,815.60 | | | 01 |
| 03 | பாடநெறியை நிறைவுசெய்த மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முன்னேற்றம் தொடர்பான நிகழ்ச்சி | 1,000,000.00 | | | | 01 |
| 04 | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகள் (கொழும்பு) | | 46,865.00 | 27 | | 01 |
| | குள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகள் (கிளிநொச்சி) தமிழ் | | 44,172.00 | 19 | | 01 |

| | செயற்பாடு | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி) | செலவு | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | சேவை பெறுனர் | | செயற்திட்ட எண்ணிக்கை |
| | | | | பெண் | ஆண் | |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழச்சிகள் (கிளிநொச்சி) தமிழ் | 0.25 | 68,345.00 | 35 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழச்சிகள் (தலாவை) | | 20,820.00 | 10 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழச்சிகள் (அம்பாறை) சிங்களம் | | 17,415.00 | 11 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழச்சிகள் (ரண்ண) சிங்களம் | | 29,039.00 | 14 | | 01 |
| 05 | சமுதாய விளிப்பூட்டல் - மனநல தின நிகழ்ச்சிகள் (கிளிநொச்சி) | 0.1 | 22,760.00 | 50 | | 01 |
| | சமுதாய விளிப்பூட்டல் -மனநல தின நிகழச்சிகள் (தலாவை) | | 21,903.00 | 55 | | 01 |
| | சமுதாய விளிப்பூட்டல் -மனநல தின நிகழச்சிகள் (அம்பாறை) | | 21,050.00 | 76 | | 01 |
| | சமுதாய விளிப்பூட்டல் -மனநல தின நிகழச்சிகள் (ரண்ண) | | 22,081.00 | 100 | | 01 |

**அட்டவனை 03**

**உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகளின் முன்னேற்றம்**

| எண் | பாடநெறியும் ஆரம்பித்த திகதியும் | பாடநெறிக் காலம் | இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் | பாடநெறிக் கட்டனம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (அம்பாறை) 2017/2019 சிங்கள மொழிமூலம் 2017.10.14 | 21 மாதங்கள் | 34 | 1,734,000.00 |
| 02 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (அம்பாறை - ஏ) 2017/2019 - தமிழ் மொழிமூலம் 2017.01.06 | 21 மாதங்கள் | 45 | 2,295,000.00 |

| எண் | பாடநெறியும் ஆரம்பித்த திகதியும் | பாடநெறிக் காலம் | இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் | பாடநெறிக் கட்டனம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 03 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (அம்பாறை - பீ) 2017/2019 - தமிழ் மொழிமூலம் 2017.03.19 | 21 மாதங்கள் | 50 | 2,295,000.00 |
| 04 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2018/2019 – சிங்கள மொழிமூலம் | சமுர்த்தி திணைக்கள உத்தியோகத் தர்களுக்காக நடாத்தப்பட்ட 01 வருட பாடநெறி ஆரம்பித்த திகதி 2018.07.06 | 38 | 6,456,000.00 |
| 05 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (தலாவை) 2018/2019 - சிங்கள மொழிமூலம் | | 42 | |
| 06 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (ரண்ண) 2018/2019 - சிங்கள மொழிமூலம் | | 40 | |
| 07 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கிளிநொச்சி) 2018/2019 - தமிழ் மொழிமூலம் | | 31 | |
| 08 | முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு டிப்ளோமா பாடநெறி 2018 - சிங்கள மொழிமூலம் 2018.08.03 | 18 மாதங்கள் | 22 | 1,122,000.00 |
| 09 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (திருகோணமலை) 2018/2020 - தமிழ் மொழிமூலம் 2018.04.07 | 21 மாதங்கள் | 44 | 2,244,000.00 |
| 10 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2018/2020 - சிங்கள மொழிமூலம் 2018.04.07 | 21 மாதங்கள் | 40 | 2,040,000.00 |
| 11 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2018/2020 – ஆங்கில மொழிமூலம் 2018.04.07 | 21 மாதங்கள் | 27 | 1,377,000.00 |
| 12 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2018/2020 - தமிழ் மொழிமூலம் 2018.04.07 | 21 மாதங்கள் | 46 | 2,040,000.00 |
| 13 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2019/2021 - சிங்கள மொழிமூலம் 2019.02.17 | 21 மாதங்கள் | 40 | 2,040,000.00 |
| 14 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2019/2021 – தமிழ் மொழிமூலம் 2019.02.17 | 21 மாதங்கள் | 43 | 2,040,000.00 |
| 15 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (குருணாகல்) 2019/2021 - சிங்கள மொழிமூலம் 2019.06.20 | 21 மாதங்கள் | | 7,420,000.00 |

| எண் | பாடநெறியும் ஆரம்பித்த திகதியும் | பாடநெறிக் காலம் | இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் | பாடநெறிக் கட்டனம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 16 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (இரத்தினபுரி) 2019/2021 - சிங்கள மொழிமூலம் 2019.06.17 | | 106 | |
| 17 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (மாத்தறை) 2019/2021 - சிங்கள மொழிமூலம் 2019.06.10 | | | |
| 18 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கிளிநொச்சி) 2019/2021 - தமிழ் மொழிமூலம் 2019.07.15 | 21 மாதங்கள் | 32 | 1,632,000.00 |
| 19 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (யாழ்ப்பாணம்) 2019/2021 - தமிழ் மொழிமூலம் - 2019.06.09 | 21 மாதங்கள் | 51 | 2,601,000.00 |
| 20 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கொழும்பு) 2019/2021 – ஆங்கில மொழிமூலம் 2019.02.17 | 21 மாதங்கள் | 37 | 1,836,000.00 |
| 21 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (மட்டக்களப்பு) 2019/2021 - தமிழ் மொழிமூலம் | 21 மாதங்கள் | 44 | 2,244,000.00 |
| 22 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (மட்டக்களப்பு) 2019/2021 – தமிழ் மொழிமூலம் | 21 மாதங்கள் | 44 | 2,244,000.00 |
| 23 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (அம்பாறை) 2019/2021 - சிங்கள மொழிமூலம் 2019.11.30 | 21 மாதங்கள் | 21 | 866,000.00 |
| 24 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி 2019.01.27 | 21 மாதங்கள் | 28 | 2,128,000.00 |
| 25 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (தலாவை) 2018/2020 2018.05.05 | 21 மாதங்கள் | 35 | 1,785,000.00 |
| 26 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கிளிநொச்சி) 2018/2020 | 21 மாதங்கள் | 40 | 1,984,000.00 |
| 27 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கண்டி) 2019/2020 | 21 மாதங்கள் | 48 | 2,448,000.00 |
| 28 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (கண்டி) 2018/2020 | 21 மாதங்கள் | 55 | 2,805,000.00 |

பயிற்சிப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறிகள் அட்டவனை 02 மற்றும் 03 இன் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது. அதற்கேற்ப உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகளின் முன்னேற்றம், கலந்துகொண்ட மாணவர்கள் எண்ணிக்கை, நிதி முன்னேற்றம் இதில் காட்டப்பட்டுள்ளது.

## சமூக அபிவிருத்தி கொள்கை ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவு

### அட்டவனை இல 04
### ஆய்வுப் பிரிவின் செயற்பாடுகளின் முன்னேற்றம்

| செயற்பாடு | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி) | செலவு | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சேவை பெறுனர் | | செயற்திட்ட எண்ணிக்கை |
| | | | பெண் | பெண் | |
| 01. சமூகப்பணிச் சஞ்சிகை | 250,000.00 | 281000.00 | - | - | 01 |
| 02. இலங்கை சமூக அபிவிருத்தி சஞ்சிகை | 269,000.00 | 264,500.00 | | | 01 |
| 03. சமூகப்பணி மின்னியல் சஞ்சிகை | 300,000.00 | 296,000.00 | | | 01 |
| 04. செய்தித்தாள் | 320,000.00 | 302,500.00 | | | 01 |
| 05. மாணவர் சமூக அபிவிருத்தி சஞ்சிகை | 220,000.00 | 213,000.00 | | | 01 |
| 06. மே மாதம் 12 மற்றும் 13ம் திகதிகளில் மேற்கொண்ட தாக்குதலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பான ஆய்வு | தேசிய கொள்கை பொருளாதார நடவடிக்கை, மீள் குடியேற்றம், புனருத்தாபம் வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் இழப்பீட்டிற்கான அலுவலம் **951,500.00** | **855,324.00** | 1186 | 1380 | 01 |
| 07. முதியோர் பாதுகாவல் மற்றும் பராமரிப்பாளர்களின் பயிற்சித் தேவைகள் தொடர்பான ஆய்வு - 2019 | **320,000.00** | **320,514.53** | | | 01 |
| 08. ரண்ண கல்வி, பயிற்சி மற்றும் ஆய்விற்கான பிரதேச வள நிலையத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு பற்றிய ஆய்வு | **36,000.00** | **7,200.00** | | | 01 |
| 09. கல்வி ஆக்கங்கள் வெளியிடுதல் | **125,000.00** | **97,507.00** | | | 01 |
| 10. இலங்கையில் வறுமை நிலவுவதற்கான காரணங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான ஆய்வு (சமுர்தி அபிவிருத்தி நிகழ்ச்சி ஊடாக) | **400,000.00** | **338,260.00** | 236 | 264 | 01 |
| 11. கொட்டாவை நகரத்திலிருந்து செயற்படும் பொதுப் போக்குவரத்து பேருந்துகள் சிலவற்றை மாக்கும்புற பல்நோக்கு பேருந்து நிலையத்திற்கு கொண்டு செல்வதன் காரணமாக கொட்டாவை பயணிகள் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடும் சமூகத்தினருக்கு ஏற்படக்கூடிய சமூக பொருளாதார தாக்கம் தொடர்பான ஆய்வு | மா நகர மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சு **267,850.00** | **282,150.00** | 47 | 33 | 01 |
| 12. 2019 ஏப்பிரல் 21ம் திகதி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பான ஆய்வு | தேசிய கொள்கை பொருளாதார நடவடிக்கை, மீள் குடியேற்றம், புனருத்தாபனம் வடமாகாண அபிவிருத்தி மற்றும இளைஞர் விவகாரம் அமைச்சின் இழப்பீட்டிற்கான அலுவலம் **581,000.00** | **551,370.00** | | | 01 |
| 13. உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | **180,000.00** | **150,841.11** | | | 01 |

மேற்குறித்த அட்டவனை 04 இன் கீழ் சமூக அபிவிருத்தி கொள்கை மற்றும் வெளியீட்டுப் பிரிவின் ஊடாக நடாத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரங்களும் அதற்கு செலவிடப்பட்ட நிதி முன்னேற்றமும் இதில் காட்டப்பட்டுள்ளது.

**நூலகம்**

1. நூலகத்திற்கென 2019ம் ஆண்டு 50,000 ரூபா பெறுமதியான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது.
2. நூலக பயன்பாட்டு முறை தொடர்பாக புதிய வாசகர்களை அறிவூட்டும் நிகழ்வு நடாத்தப்பட்டது.

## சமூகப்பணிக் கல்லூரி

சமூகப்பணிக் கல்லூரியானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள மிகப் பெரியதும் பழையதுமான பிரிவாகும். அது தொழில்வாண்மையான சமூகப்பணி பட்டப் பாடநெறியினை வழங்குகின்றது. தற்போது நாட்டில் சமூகப்பணியில் பட்டப் பின் படிப்பினை முடித்த அதிகளவான கல்வியாளர்களை கொண்டுள்ளது. தற்போது சமூகப்பணிக் கல்லூரியினால் பிரதான மூன்று கல்வி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

**நோக்கமும் இலக்கும்**

**இலக்கு**

இலங்கையில் சமூகப்பணிக் கல்வியில் சிறப்பு மையமாக விளங்குதல்

**நோக்கம்**

1. சமூகப்பணிக் கல்வி தொடர்பான புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல்
2. தற்போதுள்ள கல்வி நிகழ்ச்சிகளை தரமுயர்த்துதல்
3. சமூகப்பணி கல்வியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில் மொழியினை பயன்படுத்துதல்
4. தொழில்வாண்மையான அங்கீகாரத்தினை அடைந்துகொள்ளல்
5. தொழில்வாண்மை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல்
6. தொழில்வாண்மையான சமூகப்பணியாளர்களை உருவாக்குதல்

**சமூகப்பணிக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற சமூகப்பணி தொழில்வாண்மை பாடநெறிகள்**

1. சமூகப்பணி முதுமாணி - ஈராண்டு, தமிழ் சிங்கள மற்றும் ஆங்கில மொழிமூலம்.
2. சமூகப்பணி இளமாணி – நான்காண்டு, ஆங்கில மொழிமூலம்.
3. சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறி - ஈராண்டு, தமிழ், சிங்கள, மொழிமூலம்.
4. சமூகப்பணி சான்றிதழ் பாடநெறி – ஆறு மாதங்கள், தமிழ் மொழிமூலம்.

# சமூகப்பணி முதுமாணி

**அறிமுகம்**

சமூகப்பணி தொடர்பான முதுமாணி பட்டத்தின் நோக்கமாக தொழில்வாண்மை தகைமை மற்றும் முகாமைத்துவ திறனுடன் கூடிய பயிற்றப்பட்ட மனிதவளத்தினை சமூக நலன்புரிக்காக உருவாக்குவதும் அதன் ஊடாக சமூக அபிவிருத்தியினை ஊக்கப்படுத்துவதும் ஆகும். இந்நிகழ்ச்சிகள் சமூகப்பணி தொடர்பான உயர் அறிவினையும், செய்முறைப் பயிற்சி என்பவற்றினையும் அடிப்படையாகக் கொண்டு பங்குபற்றுனர்களின் மனப்பாங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக அவர்கள் சமூக அபிவிருத்தி துறையில் முன்னோடிகளாக கொள்கை வகுப்பின்போது அவர்களின் செயற்திறனான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. அது தொழில்வாண்மையான பரிட்சயத்தில் ஈடுபடுபவர்களுக்கும் முகாமைத்துவ பதவி வகிப்பவர்களுக்கும் தெளிவான தலைமைத்துவத்தினையும் தேர்ச்சியினையும் வழங்கும்.

**சமூகப்பணி முதுமாணி பட்டப் பாடநெறியின் ஆரம்பநிகழ்வு (ஆங்கில மொழிமூலம்)**

ஆங்கில மொழி மூலமான 2019/2020 கல்வியாண்டிற்கான முதுமாணிப் பட்டப் பாடநெறி 2019 யூலை மாதம் 05ம் திகதி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஆரம்பமானது. இந்நிகழச்சித்திட்டமானது அறிவினை பெற்றுக்கொண்டு அதனை பகுப்பாய்வுத் திறன், தர்க்கரீதியான மதிப்பீடு மற்றும் தர்க்கரீதியான விசாரணை மூலம் அறிவினை உறுவாக்குதல் எனும் பண்புரீதியான மாற்றத்தினை உள்ளடக்கிய சமூகப்பணியில் உயர்தர அறிவினை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அது தொழில்வாண்மையான தகைமை வாய்ந்த மற்றும் முகாமைத்துவ ரீதியில் ஆற்றல் கொண்ட மனித வளத்தினை சமூக நலன்புரி முறைமைக்கு வழங்வதன் ஊடாக சமூக அபிவிருத்தியினை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டது.

இப்பாடநெறியில் விரிவுரை, கலந்துரையாடல், மாணவர் முன்வைப்புக்கள், கருத்தரங்கு கலந்துரையாடல், தெரிவுசெய்யப்பட்ட சமூக மற்றும் தொர்புபட்ட நிறுவங்கள் தொடர்பாக கற்றுக்கொளளும் நோக்கிலான அவதானிப்பு தரிசிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய வகுப்பறை அமர்வுகள் உள்ளடங்கியுள்ளது. தொழில்வாண்மையான பரீட்சயத்தில் ஈடுபடுபவர்களுக்கும் முகாமைத்துவ பதவிகளை வகிப்பவர்களுக்கும் பொருத்தமான தலைமைத்துவம் தொடர்பான பாடங்களும் உள்ளடக்கியுள்ளன.

**களச் சுற்றுலா**

களப்பணிச் சுற்றுலா சமூகப்பணி முதுமாணியில் ஒது முக்கியமான அங்கமாகும். சமூகப்பணி முதுமாணி 2018/2019 சிங்களம்/தமிழ் மொழிமூலம் பட்டத்தினை பயிலும் மாணவர்கள் 2019 ஜனவரி மாதம் 08ம் 09ம் திகதிகளில் பல்லேக்கலேயில் உள்ள திறந்த சிறைச்சாலை, அம்பேபுஸ்ஸ மதுபொருள் பாவனை சீர்த்திருத்த நிலையம், மற்றும் அம்பிட்டிய செவிப்புல குன்றியவர்களுக்கன பாடசாலை என்பவற்றிற்கு விஜயம் செய்தனர். இதில் 27 மாணவர்களும் 03 கல்விசார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## சமூகப்பணி இளமாணி பட்டப் பாடநெறி

### அறிமுகம்

சமூகப்பணி பட்டப்பாடநெறியானது 4 வருட முழுநேர பாடநெறியாகும். அது 8 தவனைகளை கொண்டுள்ளதுடன் வகுப்பறை விரிவுரைகளையும், களத்திலான கற்றல் கற்பித்தல் முறைகளையும் வழிகாட்டலுடனான களப் பரீட்சயத்தினையும் கொண்டுள்ளது. நான்கு வருட கற்றல் காலப் பகுதியில் இரண்டு களப்பயிற்சிகளையும் (2 மற்றும் 4 வருடங்களில்) கொண்டுள்ளது. இந்த களப்பயிற்சியின் போது பயிற்றப்பட்ட தொழில்வாண்மை சமூகப்பணியாளர்களின் நெருங்கிய மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் சமுதாயத்திலும், நிறுவனத்திலும் சமூகப்பணிப்பணியினை கற்றுக்கொள்வார்கள். களப்பரீட்சயமானது முழுநேரமாவதுடன் 24 வார மொத்த காலப்பகுதியில் இது நடைபெறும். இத் தொழில்வாண்மை பாடநெறி மூலம் தேவையுடன்கூய மக்களுடன் பணிபுரியும் அர்ப்பணிப்புடன் கற்பவர்களாக மாணவர்களாக ஆக்குவதனை எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பட்டப் பாடநெறியின் பாடவிதானமானது சமூகவிஞ்ஞான பாடங்களை உள்ளடக்கியுள்ளதுடன் சமூகப்பணி விசேட நுட்பமுறைகள் உள்ளடகியுள்ளதுடன் அது தொடர்பான பரந்த அறிவினை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கிறது. அவ்வாறே களப்பயிற்சியூடாக சமுதாய செயற்பாடுகள் மாணவர்களினால் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அச்செயற்பாடுகளை ஒட்டியதாக அறிக்கைகள் கட்டாயமானதாகும். இது தவிற மாணவர்களினால் ஆய்வு அறிக்கையும் அதிலிருந்து தயாரிக்க வேண்டும்.

கோட்பாட்டு ரீதியான அறிவினை பெற்றுக்கொடுக்கும் மணித்தியாலங்களை விட அதிகளவு மணித்தியாலங்கள் களப்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை இப்பட்டப் பாடநெறியின் விசேடத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. அடிப்படைத் தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகள் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற இணைத்துக் கொள்வதற்கான பரீட்சையில் தோற்றி அதில் உயர் புள்ளிகள் பெற்றுக்கொண்ட மாணவர்களை பட்டப் பாடநெறியில் உள்வாங்கப்படுவர்.

சமூகப்பணி இளமாணிப் பட்டப்பாடநெறியானது 2013ம் ஆண்டிலிருந்து சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மும்மொழிகளில் நடாத்தப்படுகின்றனர். முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தத்தமது சொந்த மொழியில் அல்லது ஆங்கிலத்தில் பட்டத்தினை தொடரலாம். தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் பாடநெறியினை பயிலும் மாணவர்கள் ஆங்கில மொழிப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன் உயர் புள்ளிகளை பெறும் மாணவர்கள் மூன்றாம் ஆண்டிலிருந்து ஆங்கில மொழியில் தொடரலாம்.

### அனுமதிக்கான தகைமைகள்

சமூகப்பணி முதலாம் வருட நுழைவுக்காக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்படும்.

அ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை மற்றும்

ஆ) ஆங்கில மொழியில் தேர்ச்சி

சமூகப் பணி டிப்ளோமா நிறைவு செய்த விண்ணப்பதாரிகள் பாடநெறியில் இரண்டாம் வருடத்திற்கு தெரிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதற்காக

அ) சமூகப் பணி டிப்ளோமாவில் திறன் விருத்தியில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

ஆ) ஆங்கிலத்தில் நல்ல அறிவு

ஆட்சேர்ப்பு முறைகள் இரண்டிலும் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் நுழைவு பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு ஆட்சேர்ப்பு கமிட்டி மூலம் அனுமதி வழங்க முடியும். இந்த நுழைவு பரீட்சைக்கு தகுதி பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இறுதி தெரிவு விண்ணப்பதாரிகளின் திறமைக்கு ஏற்ப இடம்பெறும்.

### சமூகப் பணி இளமாணி பட்ட பாடநெறி செயற்பாடுகள் 2019

#### வருடாந்த பட்டமளிப்பு விழா – 2019

2019ம் ஆண்டிற்கான வருடாந்த பட்டமளிப்பு விழாவானது 2019ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இலங்கையின் பிரதமரான மேன்தகு ரனில் விக்ரமசிங்ஹ அவர்களை அதிதியாகக் கொண்டு ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் தயா கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர் கௌரவ அலிசாஹிர் மௌலானா செய்யித் அவர்களினதும் அவ்வமைச்சின் செயலாளரும் தேசிய சமூக அபிவிருத்த நிறுவனத்தின் ஆழும் சபைத் தலைவருமான திரு. திரு. எச்.எம் காமினி செனவிரத்ண அவர்களினதும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் (ப.க) திருமதி. சாமினி அத்தனாயக்க அவர்களினதும் ஏனைய அதிதிகளின் பங்களிப்புடனும் நடைபெற்றது. பட்டமளிப்பு உரையானது அவுஸ்திரேலியாவின் கர்டைன் பல்கலைக்கழக சமூகப்பணிக் கல்லூரியின் பேராசிரியர் டொனால்ட் சந்திரரத்ன அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. இதில் சமூகப்பணி இளமாணி மற்றும் சமூகப்பணி முதுமாணி பட்டப்பாடநெறியினை பூர்த்திசெய்த பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கப்பட்டது.



### உலக சமூகப் பணி தினம் 2019 – "நடைபவணி'

2019 உலக சமூகப்பணி தினத்தின் பிரதான தொணிப்பொருளாக "மனித உறவுகளின் முக்கியத்துவததினை ஊக்குவித்தல்" என்பது காணப்பட்டது. இது உலகம் பூராகவும் உள்ள சமூகப்பணியாளர்கள் ஒன்றாக நின்று தொழில்வாண்மையின் அடைவுகளை கொண்டாடுவதுடன் அவர்களின் சமுதாயத்திற்கும் வேலைத்தளங்களுக்கும் அவர்களின் அரசாங்கத்திற்கும் சமூகபபணியின் பங்களிப்பினையும் எதிர்காலத்தின் அதன் தேவை பற்றியும் விளிப்பூட்டுகின்ற ஒரு முக்கிய நாளாகும்.

இலங்கையில் சமூகப்பணியினை வழங்கும் முதன்மை நிறுவனமான தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் உலக சமூகப்பணி தினத்தினை கொண்டாடுவதற்காக 18.03.2019ம் திகதி நடைபவணியினை ஒழுங்குசெய்திருந்தது. இந்த நடை பவணியானது கொழும்பில் அமைந்திருக்கும் விகார மகா தேவிப் பூங்காவிலிருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பக் கை த்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் தயா கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர் கௌரவ அலிசாஹிர் மௌலானா செய்யித் அவர்களினதும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் (ப.க) திருமதி. சாமினி அத்தனாயக்க அவர்களினதுமஇலங்கை தொழிலவாண்மை சமூகப்பணியாளர்களின் அமைப்பின் தலைவர் திரு. ஏ. ரணவீர் பங்களிப்புடனும் ஆரம்பித்தது.

சமூகப்பணி மாணவர்கள், தேசிய சமூகப்பணி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், சமூகப்பணி பரீட்சயத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் வேறு துறைகளில் பணியாற்றும் தொழில்வாண்மையான சமூகப்பணியாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந் நடைபவணி மு.ப. 11.00 மணியளவில் இலங்கை மன்றத்தில் (SLF) அடைந்தது. அதனைத் தொடர்ந்து ஒரு ஊடக மாநாடும் வெற்றிகரமான கதைகளை முன்வைப்பும் நடைபெற்றது.

### கிராமிய பாசறை 2019

சமூகப்பணிக் கல்லூரியின் கல்விசார் நடவடிக்கையில் கிராமியப் பாடசாலை மாணவர்களை களத்தில் ஈடுபடுத்துவதுடன் மானிட வாழிடங்களில் சேவை வழங்கள் தொடர்பான அனுபவங்களை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இது ஒழுங்கு செய்யப்படுகின்றது. 2016/2020 கல்வியாண்டில் சமூகப்பணி இளமாணி பட்டத்தினை பயிலும் மாணவர்கள் தெகிஓவிட்ட பிரதேச செயலகப்பிரிவில் 10 நாள் கிராமிய பாடசாலை நிகழ்ச்சியினை பூர்த்தி செய்தனர். இதில் 32 இளமாணி பட்டத்தினை பயிலும் மாணவர்கள் 18 கிராம சேவகர் பிரிவுகளில் தேவை மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக இணைக்கபட்டனர். அவர்களின் முன்வைப்புக்களை அவர்கள் 2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ம் திகதி அனுராதபுர மாவட்ட ஈநச்சதூவ பிரதேச செயலகத்தில் பிரதனா அதிகரிகளுக்கு முன்வைத்தனர். மேலும் சமூகப்பணி தொழில்வாண்மையின் வகிபாங்கினையும் அவர்களால் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. செயற்திட்ட திட்டமிடலானது மாணவர் கையேட்டில் வழங்கப்பட்டுள்ளது.

### தண்டவாளமும் பசுமையும்

2018/2019 ம் கல்வியாண்டு சமூகப்பணி மாணவர்கள் அவர்களது தண்டவாளமும் பசுமையும் என்ற செயற்திட்டத்தினை 23.02.2019ம் ஆண்டு காலை 9.00 மணிமுதல் நண்பகள் வரை வெற்றிகரமான முன்னெடுத்தனர். பசுமையான சமூகப்பணியின் ஊடாக சுத்தமான பொதுச் சேவையினை அடைதல் என்பது இச்செயத்திட்டத்தின் நோக்கமாக இருந்துது. பசுமை சமூகப்பணி தொடர்பாக விளிப்பூட்டலை மேற்கொள்ளும் வகையில் அணிதிரட்டல், நாடகம் மற்றும் சுவரொட்டி காட்சிப்படுத்தல் என்பன கோட்டை புகையிரத நிலையத்தில் நடைபெற்றது. அதற்கு அப்பால் **தண்டவாளமும் பசுமையும்** என்ற பின்னூட்டல் பக்கத்தினையும் நடாத்திவந்தனர்.

### உதவும் கரங்கள்

இந்த செயற்திட்டமானது பொலன்னறுவை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாடசாலையை மையமாகக் கொண்டு சமூகப்பணிக் கல்லூரி மாணவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாணவத் தலைவர்களின் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துவதனை மையமாகக் கொண்டு இருநாட்களைக் கொண்ட இந்த செயற்திட்டம் எத்துல்வெவ மத்தியக் கல்லூரியில் நடைபெற்றது. பாடசாலை நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன் குறைந்த வருமானத்தைக் கெண்ட குடும்பங்களிலிருந்த தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்தோடு பாடசாலை வலாகத்தில் மரம் நடுகை முன்னெடுப்பும் இடம்பெற்றது. சமுதாயத்துடனும், ஆசிரியர்களுடனும் மற்றும் மாணவர்களுடனும் உறவினை வலுப்படுத்துவதற்காக பாடசாலை சமுதாய உறவுமுறை அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது.

## சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறி

**அறிமுகம்**

சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறியானது நாட்டில் செயற்திறனான சமூகப்பணி இடையீட்டுத் தேவையினை பூர்த்திசெய்துகொள்வதற்கான தொழில்வாண்மையான சமூகப்பணி பரீட்சயத்தில் ஈடுபடுபவர்களை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டது. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப்பணிக் கல்லூரி ஊடாக பல்வேறு டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறி (இரு வருட, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்), சமூகப்பணி டிப்ளோமா – ஒரு வருட (சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்) பெண்கள் மற்றும் அரசியல் வலுவூட்ட்ல் - ஒரு வருடம் (சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலம்), சைகை மொழி உரைபெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி, - ஒரு வருடம் (சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலம்) ஆகிய பாடநெறிகள் வகுப்பறைக் கற்றல் மற்றும் களப் பயிற்சிகள் ஊடாக கற்பிக்கப்படுகின்றன. இந்த களப்பயிற்சியின் போது பயிற்றப்பட்ட தொழில்வாண்மை சமூகப்பணியாளர்களின் நெருங்கிய மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் சமுதாயத்திலும், நிறுவனத்திலும் சமூகப்பணிப்பணியினை கற்றுக்கொள்வார்கள். இத் தொழில்வாண்மை பாடநெறி மூலம் தேவையுடன்கூய மக்களுடன் பணிபுரியும் அர்ப்பணிப்புடன் கற்பவர்களாக மாணவர்களாக ஆக்குவதனை எதிர்பார்க்கப்படுகிறது.

**நுழைவிற்கான தகைமை**

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி எய்தியிருத்தல் அதே ஆண்டில் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான அடிப்படைத் தகமையை கொணடிருத்தல் அல்லது
- அதற்கு சமமான ஏனைய உயர் கல்வித் தகைமை
- அரச துறையில் 03 வருடங்களுக்கு நிரந்தர பதவிவகிப்பவர்.

## சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறியின் செயற்பாடுகள் 2019

### சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறியின் ஆரம்ப நிகழ்வு (2019/2020)

சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறியின் ஆரம்ப நிகழ்வு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவுனத்தின் பணிப்பாளர் நாயகம் (ப.க) மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வி) திருமதி. சாமினி அத்தனாயக்க அவர்களின் பங்களிப்போடு 2019 யூன் மாதம் 11ம் திகதி தேசிய சமூக அபிவிருத்தி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப்பாடநெறியானது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடாத்தப்படவுள்ளது.

இப்பாடநெறியானது அரச துறையில் பணியாற்றுபவர்கள் மற்றும் சமூகப்பணித் துறையோடு தொடர்புபடுகின்ற ஏனைய தொழில்வாண்மையில் ஈடுபடுபவர்கள் அவர்களின் சேவை வழங்கள் தொடர்பான கல்வி மற்றும் பரீட்சயத்தை மேம்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்ட மாணவர்கள் பெரும்பாலானோர் சமூகப்பணித் துறையோடு தொடர்புபடுகின்ற அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களாவர். தற்போது வகுப்பறை விரிவுரைகள் தொடர்கின்றன.

**கிராமிய பாசறை**

சமூகப்பணி உயர் டிப்ளோமா (2018/2019) மாணவர்கள் கிராமிய பாசறையை (மனித குடியிருப்புக்களில் சேவை வழங்கள்) ஹத்தரலியத்த பிரதேச செயலகப்பிரிவில் 2019 ஆகஸ்ட் 03ம் திகதி நிறைவுசெய்தனர். இரு மொழிமூலமும் (சிங்களம், தமிழ்) கல்வி பயிலும் 48 மாணவர்கள் இதில் கலந்துகொண்டு 10 நாட்கள் களச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். மாணவர்களின் இறுதி முன்வைப்பானது ஹத்தரலியத்த பிரதேச செயலகப்பிரிவில் கண்டி மாவட்டத்தின் உதவி மாவட்ட செயலாளர், ஹத்தரலியத்த பிரதேச செயலகப்பிரிவின் பிரதேச செயலாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் (ப.க) மற்றும் சமூகப்பணிக் கல்லூரி பணிப்பாளர் முன்னிலையில் நடாத்தினர்.

**கல்விச் சுற்றுலா**

சமூகப்பணி உயர் டிப்ளோமா 2019/2020 பாடநெறியினை பயிலும் மாணவர்கள் தனமது களச்சுற்றுலாவினை அநுராதபுரம் மற்றும் வவுனியாவிலுள்ள நலன்புரி நிறுவனங்களுக்கு விஜயம் செய்து நிறைவுசெய்தனர். இரு மொழிமூலமும் (சிங்களம், தமிழ்) கல்வி பயிலும் மாணவர்கள் பீட உறுப்பினர்களுடன் இதில் கலந்துகொண்டனர். இது 2019ம் ஆண்டு ஒக்டோம்பர் 06ம் திகதி முதல் 11ம் திகதிவரை இடம்பெற்றது.

## சமூகப்பணிக் கல்லூரியின் ஏனைய செயற்பாடுகள்

- **நாளேடு எழுதுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை Journal Writing**

"நாளேடு எழுதும் பயிற்சிப் பட்டறை" 2019ம் ஆண்டு யூன் 04ம் திகதி நடைபெற்றது. இதனை RMIT பல்கலைக்கழகத்தைச் சேரந்த பேராசிரியர் ரோணி அவர்களால் நடத்தப்பட்டதுடன் அதில் சமூகப்பணிக் கல்லூரி கல்வி உத்தியோகத்தர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். அதில் திருமதி. ஜெஸ்மின் பெரேரா அவர்கள் நெறிப்படுத்துபவராக செயற்பட்டார்.

- **சமூகப்பணி தொடர்பான ஆசிய பசுபிக் மாநாடு**

சமூகப்பணி தொடர்பான ஆசிய பசுபிக் மாநாடானது 2019 செப்டம்பர் மாதம் 16 முதல் 20ம் திகதி வரை இந்தியாவின் பெங்களூர் நகரில் நடைபெற்றது. சமூகப்பணிக் கல்லூரியைச் சேரந்த 4 கல்வி உத்தியோகத்தர்களும் பயிற்சிப் பிரிவினைச் சேர்ந்த 2 கல்வி உத்தியோகத்தர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டு சமூகப்பணியுடன் தொடர்பான தொணிப்பொருளில் முன்வைப்புக்களைச் செய்தனர்.

**பங்கேற்றோர்**

திருமதி. கௌரி வாசுதேவன் (பயிற்சிப்பிரிவின் பணிப்பாளர்)
திருமதி. இசாரி குணரத்ன (சமூகப்பணிக் கல்லூரி)
திருமதி. மது முணசிங்ஹாரச்சி (சமூகப்பணிக் கல்லூரி)
திருமதி. நிரோசனி ஹேரத் (சமூகப்பணிக் கல்லூரி)
செல்வி சுபோதினி ஹேரத் (சமூகப்பணிக் கல்லூரி)
திருமதி குமுதுணி வெதிசிங்ஹ (பயிற்சிப் பிரிவு)

### ➢ பாடசாலை சமூகப்பணிச் சர்வதேச கூட்டணி மாநாடு – ருமெனியா

தேசிய சமூகப்பணியின் பணிப்பாளர் நாயகம் (ப.க) திருமதி. சாமினி அத்தனாயக்க அவர்கள் பாடசாலை சமூகப்பணிச் சர்வதேச கூட்டணியின் 4வது மாநாட்டில் கலந்துகொண்டார். சமூகப்பணியின் நிலையும் அதன் வகிபாங்கும் 2020ம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் என்ற தொணிப்பொருளில் 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 7 மற்றும் 8ம் திகதிகளில் ருமேனியாவில் நடைபெற்றது.

### ➢ பொதுசன விரிவுரை

சமூகப்பணிக் கல்லூரியினால் “அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் இலங்கையர்கள” எனும் தலைப்பில் 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் திகதி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இவ்விரிவுரையானது அவுஸ்திரேலியாவின் கர்டின் பல்கலைக்கழத்தல் ஓய்வுபெற்ற பேராசிரியர் கலாநிதி. டொனால்ட் சந்திர ரத்ன அவர்களால் நடாத்தப்பட்டது. இதில் கல்வி உத்தியோகத்தர்கள், இத்துறையைச் சார்ந்த செயற்பாட்டாளர்கள், சுயமாக இயங்கும் சமுதாயப் பணியாளர்கள், சமூகப்பணி இளமாணி மாணவர்கள் மற்றும் ஏனைய தொழில்வாண்மை குழுக்கள் இதில் கலந்துகொண்டனர்.

### ➢ சமூகக் கொள்கை தொடர்பான பயிற்சிப் பட்டறை

அவுஸ்திரேலியாவின் கர்டின் பல்கலைக்கழத்தல் ஓய்வுபெற்ற பேராசிரியர் கலாநிதி. டொனால்ட் சந்திர ரத்ன அவர்களால் சமூக கொள்கைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறையினை நிறுவனத்தின் மூன்று பிரிவுகளையும் சேர்ந்த கல்வி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டது. அது 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் திகதி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புக்கள்

அரசாங்கத்துறை- சமூகப் பணி உளவளத்துணை, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

- துறைமுக அதிகாரிகள்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- நன்நடத்தை உத்தியோகத்தர்கள்
- சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்
- உளவளத்துணையாளர்
- இலங்கை ஆசிரியர் சேவை
- ஊள சமூக பணி உளவளத்துணையாளர்

அரச சார்பற்ற நிறுவனங்கள் - அரச சார்பற்ற நிறுவனங்களில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெருமளவு வாய்ப்புக்கள் எமது பட்டதாரிகளுக்கு உள்ளது.

- சேயற்திட்ட முகமையாளர்/உத்தியோகத்தர்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்
- உளவளத்துணையாளர்

தனியார் துறை - சமூக பொறுப்புக்கள் இணைப்பாளர்
- மனித வள முகாமைத்துவ உத்தியோகத்தர்.

இது தவிர எமது பெரும்பாலான மாணவர்கள் நோறாட், யூ எஸ் எய்ட், பொதுநலவாய நாடுகள் மற்றும் இந்திய புலமை பரிசில்களை பல்வேறு கல்வி நடவடிக்கைகளுக்கு சென்றுள்ளனர்.

# பயிற்சிப் பிரிவு



**அறிமுகம்**

2004ம் ஆண்டு தாபிக்கப்பட்ட பயிற்சிப் பிரிவானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள நான்கு பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். இப்பிரிவானது பயிற்சியளிக்கும் பணிப்பாளரின் கீழ் இயங்கிவருகின்றது. 2019ம் ஆண்டில் சிரேஸ்ட பயிற்சி உத்தியோகத்தர்கள் இருவரையும் இரண்டாம் வகுப்பைச் சார்ந்த பயிற்சி உத்தியோகத்தர்கள் 08 பேரையும் கொண்டதாக அமைந்தது. இது தவிர முகாமைத்துவ உதவியாளர் தரம் I சார்ந்த ஒருவரையும் தரம் II சார்ந்த முகாமைத்துவ உதவியாளர்கள் இருவரையும் தரம் III சார்ந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் காரியாலய உதவியாளர் ஒருவரையும் கொண்டுள்ளது.

1992ம் ஆண்டு 41ம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சட்டத்திற்கேற்ப பயிற்சிப் பிரிவின் பொறுப்புக்கள்.

- சமூக நலன்புரி முறைமைகள் மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் தொடர்பான கல்வி நடவடிக்கைகளை நடாத்துதல் மற்றும் அவற்றை முன்னேற்றுதல்
- சமூகப்பணியின்போது தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல் உள்ளடங்களாக சமூகப்பணி மற்றும் சமூக அபிவிருத்தி கல்வி முறைமையில் ஆக்கத்திறன்மிக்க அத்தியாயத்தினை ஆரம்பிப்பதற்கும் முன்னேற்றுவதற்கும்.
- அதற்கு சமமான நோக்கங்கள் உள்ள வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்
- சமூக நலன்புரியில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வேறு கடமைக் குழுவினருக்காக பயிற்சி பாடநெறிகள் மற்றும் நிகழ்சிகளை நடாத்திச் செல்லல்

இப்பிரிவானது சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சினால் அனுப்பப்படுகின்ற உரிய பிரிவுகளின் பணிக்குழுவினர்/சேவைநாடிகளுக்காக அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்ட தொணிப்பொருளில் பயிற்சி வழங்கிவருகின்றது. அது மாத்திரமன்றி அபிவிருத்தி தொடர்பான துறைகளில் பயிற்சிகளை இப்பிரிவு நடாத்தி வருவதுடன் வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்காகவும் பயிற்சிகளை ஒழுங்குசெய்கின்றது. அவ்வாறே தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சி பிரிவிற்கு வெளி நிறுவனங்களிலிருந்து பயிற்சிக்காக விண்ணப்பிக்கப்படுகின்றன. பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி துறைகளில் ஈடுபடுகின்ற

உத்தியோகத்தர்கள் உட்பட வேறு நிறுவனங்களின் வேண்டுகோளுக்கேற்ப பல்வேறு பயிற்சி தொணிகளில் பயிற்சிகளை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினுள்ளும் பிரதேசரீதியிலும் நடாத்தப்பட்டு வருகின்றன.

**பயிற்சிப் பிரிவின் நோக்கங்கள்**

1. பல்வேறு துறைகள் மற்றும் உரிய பிரிவுகளில் பயிற்சித் தேவைகளை அடையாளம் காணல்
2. நாட்டில் பயிற்சித் தேவைகளை அடையாளம் கண்டு அதற்கிணங்க மனித வளங்களை பயிற்றுவித்தல்
3. தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் பயிற்சிகளை வழங்க வேண்டிய துறைகளை அடையாளம் காணல்
4. சேவைநாடியின் தேவைகளுக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சிகளை திட்டமிடுதலும் செயற்படுத்தலும்
5. பயிற்சி நடவடிக்கைகளில் பாடவிதானங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாடநெறிகளை புதுப்பித்தல்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் பல்வேறு துறைகளை அடிப்படையாகக்கொண்டு பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து வருகின்றது. அங்கு நீண்டகால மற்றும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பாடநெறிகளும் ஏனைய தொழில்வாண்மையான பாடநெறிகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவற்றுள் நீண்டகால பயிற்சிநெறிகள் பின்வருமாறு அமைகின்றன.

- உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி
- உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி
- முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு டிப்ளோமா பாடநெறி
- சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறி
- சமூக பராமரிப்பு உயர் டிப்ளோமா பாடநெறி
- சமுதாயஞ்சார் சீர்த்திருத்த டிப்ளோமா பாடநெறி
- உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி
- சமூகப்பணி சான்றிதழ் கற்கைநெறி
- சிறுவர் மையமாகக்கொண்ட சமுதாய அபிவிருத்தி சான்றிதழ் கற்கைநெறி
- விசேட கல்வியினை கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி

**பயிற்சிப் பிரிவினால் தேவையின் நிமித்தம் நடாத்தப்படும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள் பின்வருமாறு**

- உளவளத்துணையில் மதிப்பிடல் முறைமை
- நெருக்கீடு மற்றும் உளவியல் உளவளத்துணை
- எதிர்பாராத கர்ப்பம் தரித்தலுக்கான உளவளத்துணை
- சமூக பீதி முகாமைத்துவம்
- உளவளத்துணை இடையீட்டிற்கான நுட்பமுறைகள்
- சீர்த்திருத்தம் தொடர்பான உளவளத்துணை
- போதைப்பொருள் பாவனைக்கான உளவளத்துணை
- பாதிப்பை எதிர்நோக்கியவர்களுக்கு வீட்டின் ஊடாக வழங்கக்கூடிய ஒத்துழைப்பு

- மெண் திறன்கள்
- பசுமை சமூகப்பணி
- சமூகப்பணியின் ஆரம்ப திறன்கள்
- விடய முகாமைத்துவத்திற்கான ஆரம்ப திறன்கள்
- குடும்பங்களுடன் பணிபுரிவதற்கான ஆரம்ப திறன்கள்
- குழுக்களுடன் பணிபுரிவதற்கான ஆரம்ப திறன்கள்
- சமுதாயத்துடன் பணிபுரிவதற்கான ஆரம்ப திறன்கள்
- தலைமைத்துவம
- கைத்தொழில்துறையுடன் தொடர்பான சமூகப்பணி
- மோதல் முகாமைத்துவம்
- சமூக பராமரிப்பு
- தொழில் சூழுலையும் அன்றாட வாழ்க்கையையும் சமநிலையில் வைத்துக்கொள்வதற்கான வாழ்க்கைத் திறன்.
- சிறுவர் அபிவிருத்தி
- விசேட தேவையுடைய சிறுவர்களுக்காக மேற்கொள்ளப்படும் இடையீட்டிற்கான சமூகப்பணி இடையீடு
- செயற்திட்ட வரைபுக்கான பயிற்சிப் பட்டறை
- சமுதாய செயற்திட்ட முகாமைத்துவத்திற்கான பயிற்சிப் பட்டறை
- முதியோர் பராமரிப்பிற்கான உளவளத்துணை இடையீடு
- வறுமை ஒழிப்பிற்கான நுட்பமுறைகள் மற்றம் நிலையான வாழ்க்கை அபிவிருத்தி
- முரண்பாடு களைதலுக்கான சமுதாய அபிவிருத்தி மற்றும் சமுதாயத்தினை அடிப்படையான முகாமைத்துவம்

அவ்வாறே பின்வரும் விதத்திலான இணைத் தொழில்வாண்மை பாடநெறிகள் இப்பிரிவினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

- சமுதாயசஞ்சார் அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான ஆற்றலை விருத்திசெய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சிகள்.

## 2019 ம் ஆண்டில் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

**டிப்ளோமா பாடநெறிகள்**

### 1. உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி

**அறிமுகம்**

உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால வார இறுதி பயிற்சி நெறியாக செயற்படுத்தப்பட்டுவருகிறது. இந்த டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கினங்க கொழும்பு நிலையத்தினை மையமாகக்கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது.

**இலக்கு:**

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலை மேம்பாட்டுடன்கூடிய தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்

**நோக்கம்:**

- உளவளத்துணைத் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- உளவளத்துணையாளர்களின் உயர் தொழில்வாண்மை திறன்களை விருத்தி செய்தல்
- உளவளத்துணையாளரின் இடையீட்டு திறனை மேம்படுத்தல்

**மொழிமூலம்**

சிங்களம் மற்றும் தமிழ்

**காலம்**

21 மாதங்கள். இப்பாடநெறியில் 03 மாத கால உளவளத்துணை பயிற்சி உள்ளடங்கும். (வார இறுதியில் நடாத்தப்பட்டுவரும் பாடநெறியாகும்.)

**பாடநெறிக் கட்டமைப்பு**

இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 150 மணித்தியாளங்கள் களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 555 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறியானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது

- பாட அலகுகள் 09
- களப்பயிற்சி

**2019ம் ஆண்டில் உயர் டிப்ளோமா நடாத்தப்பட்ட நிலையங்கள்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கொழும்பு பிரதான காரியாலயத்தினை மையமாகக்கொண்டு 2019.01.27ம் ஆண்டில் இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

## 2. உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி

**அறிமுகம்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் வார இறுதி பயிற்சி நெறியாக உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இந்த டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கினங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

**இலக்கு:**

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலையுடன்கூடிய உரிய பிரயோக அனுபவத்தினை கொண்ட தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்

நோக்கம்:

- உளவளத்துணைத் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- உளவளத்துணையாளர்களின் உயர் தொழில்வாண்மை திறன்களை விருத்தி செய்தல்
- உளவளத்துணையாளரின் இடையீட்டு திறனை மேம்படுத்தல்

**மொழிமூலம்**

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்

**காலம்**

21 மாதங்கள். இப்பாடநெறியில் 03 மாத கால உளவளத்துணை பயிற்சி உள்ளடங்கும். (வார இறுதியில் நடாத்தப்பட்டுவரும் பாடநெறியாகும்.)

**பாடநெறிக் கட்டமைப்பு**

இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 135 மணித்தியாள களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 540 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறியானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது

- பாட அலகுகள் 09
- களப்பயிற்சி
- களச் சுற்றுலா

**2019ம் ஆண்டு டிப்ளோமா பாடநெறிகள் நடாத்தப்பட்ட நிலையங்கள்**

1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கொழும்பு பிரதான காரியாலயம்
2. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கொழும்பு, தலாவை மற்றும் ரண்ண பிரதேச நிலையம் (சமுர்தி உத்தியோகத்தர்களுக்கானது)
3. தலாவை பிரதேச நிலையம்
4. அம்பாறை பிரதேச நிலையம்
5. அம்பாறை (காரைத்தீவு) பிரதேச நிலையம்
6. மட்டக்களப்பு மாகாண சபை பரிபாலன மத்தியநிலையம்
7. கண்டி தேசிய கூட்டுறவு நிலையம்

8. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் காரியாலயம்
9. கிளிநொச்சி பிரதேச நிலையம்
10. திருகோணமலை சமூக சேவைகள் திணைக்கள பிரதேச காரியாலயம்
11. ரத்னபுர, மாத்தறை, குருநாகலை (சமுதாய சீர்த்திருத்த திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான)

## 3. மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறி

**அறிமுகம்**

மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறியானது மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்புத்துறையில் தமது தொழல்வாண்மையான அபிவிருத்தியினை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்ற அல்லது தற்போது அத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற மற்றும் அதனுடன் தொடர்பான தொழில்களில் ஈடுபடுகின்ற நபர்களை இலக்காகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. முதுமையடையும் சமூகத்தினால் உருவாக்கப்படும் புதிய வாய்பபுக்களுக்கு இணைவாக அர்த்தமுள்ள தொழில்வாண்மை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் இப்பாடநெறி முன்வைக்கப்படுகின்றது. இப்பாடநெறியினை பூர்த்திசெய்யும்போது மாணவர்களினால் நீண்டகாலம் ஆரோக்கியமான வாழ்க்கையினை வாழும்போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் திறன்களை உருவாக்குவதற்கும் தேவையான அவசியமான தொழில்வாண்மையை கட்டியெழுப்புவது நோக்கமாகும். முதியோர் பராமரிப்புச் சேவை துறையில் மாணவர்கள், தனிநபர் தொழில்வாண்மை பாதையினை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு இது உதவுகின்றது.

மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கினங்கவும் மற்றும் உயர் கல்வி அமைச்சின் தராதங்களை (Quality Assurance Unit) கவனத்திற்கொண்டு பகுதிநேர பாடநெறியாக இருப்பதுடன் இலங்கையில் வழங்கப்படும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளபட்ட தகைமைகளை உருவாக்கும் நோக்கில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

**இலக்கு:**

அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உள நிலை மேம்பாட்டுடன்கூடிய மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு தொடர்பாக செயற்பட எதிர்பார்க்கும் அறிவுப்பூர்வமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதலும் இத்துறையில் பணிபுரிவதற்கு விருப்பமுள்ள நபர்களின் தொழில்வாண்மை ஆற்றலை விருத்தி செய்வதும்.

**நோக்கம்:**

- பராமரிப்பாளர் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- முதியோர் தொடர்பான துறையில் ஈடுபடும் தொழில்வாண்மையாளர்களின் தொழில்வாண்மை திறன்களை முன்னேற்றிக்கொள்ளல்.
- தொழில்வாண்மையாளர்களின் இடையீட்டு திறனை மேம்படுத்தல்

**மொழிமூலம் :** சிங்களம்

**காலம்** : 18 மாதங்கள்

**பாடநெறிக் கட்டமைப்பு**

இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 135 மணித்தியாள களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 540 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

மூப்பியல் மற்றும் முதியோர் பராமரிப்பு டிப்ளோமா பாடநெறியானது பின்வருவனவற்றை கொண்டுள்ளது

- பாட அலகுகள் 10
- களப்பயிற்சி

2019ம் ஆண்டு இந்த டிப்ளோமா பாடநெறி நடாத்தப்பட்ட நிலையங்கள்

1. முதியோருக்கான செயலகம் - கொழும்பு

**சான்றிதழ் பாடநெறிகள்**

## 1. உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி

- **உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி - NAITA**

**அறிமுகம்**

உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறியின் மூலம் இலங்கையில் உளச் சுகாதாரம் மற்றும் உளநலத்தினை முன்னேற்றுவதற்காக துணை நிலைச் சேவைத் துறைகளைச் சேர்ந்த தொழில்வாண்மையாளர்களின் திறன்களை முன்னேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் SLQF சிபாரிசுகளுக்கினங்க தயாரிக்கப்பட்டு வருகின்றது. இப்பாடநெறியினை 2017ம் ஆண்டாகும்போது முதலாம் குழுவுக்கு நடாத்தியதுடன் இரண்டாம் மற்றும் மூன்றாம் குழுக்களுக்கான சான்றிதழ் பாடநெறி 2018ம் ஆண்டில் நடாத்தப்பட்டது.

**இலக்கு**

உளவளத்துணை மற்றும் சமூக நலன்புரிக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் பயிற்சியுடன் கூடிய தொழில்வாண்மையாளர்கள் மற்றும் துணைநிலைச் சேவைத் தொழில்வாண்மையாளர்களை சமுதாய மட்டத்தில் உருவாக்குவதாகும்.

**நோக்கம்**

- உளவளத்துணைத் துறைக்கு தரமான துணை நிலைச் சேவைத் தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல்
- சேவைநாடிகளுக்கு தேவையான துணை நிலைச் சேவைத் தொழில்வாண்மை திறன்களை விருத்தி செய்தல்
- சிபாரிசு செய்து அனுப்பும் சேவைக்கான உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்கு தேவையான திறனை மேம்படுத்தல்

**மொழிமூலம்** :சிங்களம்

**காலம்:** :06 மாதங்கள் (விரிவுரை 150 மணித்தியாலங்கள், களப்பயிற்சி 100 மணித்தியாலங்கள்) முழுமையாக 250மணித்தியாலங்கள்.

**பாடநெறிக் கட்டமைப்பு:** இச்சான்றிதழ் கற்கைநெறியானது பின்வருவனவற்றைஉள்ளடக்கியுள்ளது.

- பாட அலகு 06
- களப்பயிற்சினையும்

2019ம் ஆண்டு சான்றிதழ் பாடநெறி நடாத்தப்பட்ட நிலையங்கள்

1. தேசிய தொழிற்பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை – ராஜகிரிய

**பயிற்சிப் பிரிவின் மனித வள அபிவிருத்திக்காக நடாத்தப்பட்ட குறுங்கால பயிற்சிகள்**

சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் உளவளத்துணை உதவியாளர்கள் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் தொடரான தொழில்வாண்மை அபிவிருத்திக்கான கடமையின்போதான பயிற்சி – நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி ஆசிய மன்றம்.

சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் உளவளத்துணை உதவியாளர்கள் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் தொடரான தொழில்வாண்மை அபிவிருத்தியின் ஊடாக அவர்களின் சேவைநாடிகளுக்கும், பொதுமக்களுக்கும் தரமான சேவையினை வழங்குவது இச்செயற்திட்டத்தின் நோக்கமாக இருப்பதுடன் அதில் பின்வரும் நோக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- உளவளத்துணை உதவியாளர்கள் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவை வழங்களுக்கு தேவையான அறிவு திறன் முன்னேற்றல்
- இரு அமைச்சுக்களிலுமுள்ள உளவளததுணைத் துறையுடன் தொடர்பான தொழில்வாண்மையாளர்களுக்கு பொதுவான தொழில்வாண்மை தளத்தினை உருவாக்குதல்
- ஆண்களுக்கு உளவளத்துணை சேவையினை வழங்குவதற்கு தேவையான திறன் விருத்தி

இப் பயிற்சியானது 2019ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 09ம் திகதி வரை நாட்டின் அனைத்து பாகங்ளையும் உள்ளடக்கியதாக 13 நிகழச்சிகளை பின்வரும் மாவட்டங்களில் 368 உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது.

**அட்டவனை இல 05**
**மாவட்ட ரீதியான பயிற்சிகள்**

| தொ.இ | மாவட்டம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கொழும்பு | 24 |
| 02 | கொழும்பு | 31 |
| 03 | காலி | 33 |
| 04 | யாழ்ப்பாணம் | 27 |
| 05 | கண்டி | 32 |
| 06 | கண்டி | 34 |
| 07 | ரத்திரனபுரி | 29 |
| 08 | பதுளை | 14 |
| 09 | குருநாகல் | 41 |
| 10 | குருநாகல் | 16 |
| 11 | மாத்தறை | 29 |
| 12 | மட்டக்களப்பு | 41 |
| 13 | ஹம்பாந்தோட்டை | 17 |

பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட கடமையின் போதான பயிற்சிகள் அட்டவனை 05இன் மூலம் காட்டப்படுவதோடு 13 மாவட்டங்களில் இவை நடாத்தப்பட்டுள்ளன.

2. **தொழில்வாண்மையான வழிகாட்டல் தினத்தினையொட்டி காலி சவுத்லன்ட் பாடசாலையி நடாத்திய நிகழச்ச்சி**

2019.01.20 ம் திகதி காலி சவுத்லன்ட் பாடசாலையில் தொழில்வாண்மையான வழிகாட்டல் தினத்தினையொட்டி பயிற்சி நிகழச்சியொன்றினை நடாத்தியதுடன், அங்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தொடர்பாக அறிமுகம் செய்ததுடன் எமது நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற பாடநெறிகள் மற்றும் பயிறசிகள் தொடர்பாக அறிமுகமும் வழங்கப்பட்டது. இதற்காக அப்பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 400 பேர் பங்கேற்றனர்.

**3. கள மேற்பார்வையாளர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி**

### அம்பாறை மற்றும் ரண்ண பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சி

உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியினை பயிலும் மாணவர்களின் களப்பயிற்சியினை மேற்பார்வை செய்யும் கள மேற்பார்வையாளர்களின் திறனை விருத்தி செய்யும் நோக்கில் இந்நிகழ்வு நடாத்தப்பட்டது. கள மேற்பார்வை தொடர்பான விளிப்பூட்டல் நிகழ்வு, உளவளத்துணை உயர் டிப்ளோமா டிப்ளோமா பாடநெறியினை பயிலும் மாணவர்களை மேற்பார்வை செய்யும் சிரேஸ்ட உளவளத்துணையாளர்களுக்கு மாணவர்களை மேற்பார்வை செய்வது தொடர்பாக விளிப்பூட்டுவதும் களக் கற்கைக்கான கையேடு தொடர்பாகவும் விளக்கமளிக்கும் நோக்கிலும் களக் கற்கைக்கான கைடேு தொர்பாக விளக்கத்தினை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் இப்பயிற்சி நடாத்ததப்பட்டது. இப்பயிற்சி 2019.09.26ம் திகதி கொழும்பு மத்திய நிலையத்தில் 35 பேருடைய பங்குபற்றலுடனும் 2019.12.10ம் திகதி ரண்ண பிரதேச வள நிலையத்தில் 14 பேருடைய பங்குபற்றலுடனும் 2019.11.26ம் திகதி அம்பாரை பிரதேச நிலையத்தில் சிங்கள மொழிமூலம் 17 பேருடைய பங்குபற்றலுடனும் 2019.10.24ம் திகதி தமிழ் மொழிமூலம் 35 பேருடைய பங்குபற்றலுடனும் 2019.12.10ம் திகதி தலாவை பிரதேச நிலையத்தில் 20 பேருடைய பங்குபற்றுதலுடன் 219.10.11ம் திகதி கிளிநொச்சி பிரதேச வள நிலையத்தில் தமிழ்மொழிமூலம் 20 பேருடைய பங்குபற்றலுடனும் 2019.10.29ம் திகதி மட்டக்களப்பு வலய அரசாங்க நிலையத்தில் தமிழ் மொழிமூலம் 38 பேருடைய பங்குபற்றலுடனும் நடாத்தப்பட்டது.

வருடாந்தம் இத்தகைய நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் கள மேற்பார்வை தொடர்பான உளவளத்துணை உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு முன்னேறுகிறது என்பது பயிற்சியாளர்களின் கருத்தாகியது. மேலும் மாணவ கள மேற்பார்வையின்போது ஏற்படும் நடைமுறை பிரச்சினைகள் மற்றும் சவால்கள் வெளிப்படையாக கலந்துரையாடுவதற்கு இந் நிகழ்சிகள் ஊடாக வாய்ப்பு ஏற்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். பயிற்சிப் பிரிவின் மூலம் களக் கற்கை கையேடு தொடர்பில் மேற்கொள்ளவுள்ள திருத்தங்கள் தொடர்பாகவும் விளக்கத்தினை பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பாக அமைந்தது.

உளவியல் உளவளத்துணை தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் களச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக நடைபெறும் இப் பயிற்சிப் பட்டரையானது வருடம்தோரும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அங்கு சிரேஸ்ட உளவளத்துணையாளர்களின் அறிவினை மேலும் முன்னேற்றிகொள்வதற்கும் பிரச்சினை காணப்படும் சந்தர்ப்பங்களில் அதனை தீர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்பு கிட்டுகிறது. களச் செயற்பாடுகள் தொடர்பான புதிய அறிவு மற்றும் முறையியல் என்பன விதிமுறைப்படி இந்நிகழ்ச்சியின்போது வழங்கப்படுவதோடு அவ்வறிவினை மாணவர்களின் கள மேற்பார்வையின்போது பயன்படுத்துவதற்கும் ஆலோசனை வழங்கப்படுகின்றது. அதன் ஊடாக உத்தியோகத்தர்கள் களக்கற்கையினை வெற்றிகரமாக நடாத்துவதற்கும் தமது தொழில்வாண்மையை முன்னேற்றிக் கொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

## 4. சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிறுவன தலைவர்களுக்கான திறன் விருத்தி பயிற்சி – சுஹுரு கம்மான நிகழச்சி

2019ம் ஆண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவின் செயற்பாட்டு திட்டத்திற்கேற்ப இந்நிறுவனத்தின் பிரசே வள நிலையங்களான தலாவை, ரண்ண, அம்பாறை மற்றும் கிளிநொச்சி ஆகிய நிலையங்கள் 04 இனை அடிப்படையாகக்கொண்டு இந்த சுஹுரு கம்மான செயற்திட்டம் நடாத்தப்படுகின்றன. கீழ் காணும் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இது நடாத்தப்பட்டது.

### செயற்திட்டத்தின் நோக்கங்கள்

- சமுதாயத்தின் சேவை வழங்களுக்காக சமுதாய பிரதிநிதிகளினதும் சேவை முறைமைகளுக்கிடையில் தொடர்பினை கட்டியெழுப்புதல்.

- ஒருங்கிணைந்த சேவை வழங்களுக்காக சமுதாய பிரதிநிதிகளினதும் சேவை முறைமைகளுக்கிடையில் உறவினை கட்டியெழுப்புதல்
- சமுதாய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக சமுதாயத்திலுள்ள வரையறைகள் மற்றும் தடைகளை நீக்குவதற்காக திறன் அபிவிருத்தி செய்தல்
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்வியாளர்களினதும் மாணவர்களினதும் கள அனுபவங்களை முன்னேற்றுதல்

இந்த நீண்டகால நோக்கங்களை உருவாக்குவதற்கு 3 வருட திட்டத்தின் கீழ் இச்செயற்திட்டத்தினை நடாத்துவதற்கு எதிர்பார்த்ததுடன் அதன் முதற்கடடமாக குறித்த துறைக்கு இயைபாக அவர்களின் தேவையை அடிமட்டத்திலிருந்து அடையாளம் காண்பதனை நோக்காகக் கொண்டு இவ்வருடத்தினுள் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட தலைவர்களுக்காக இயலளவு அபிவிருத்திக்கான பயிற்சி நடாத்தப்பட்டது.

**அட்டவனை இல 06**

**சமுதாயஞ்சார் பயிற்சி நிகழ்ச்சிகள்**

| திகதி | நிலையம் | பயிற்சி நிகழச்சி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2019.03.29 மற்றும் 30 | ரண்ண, அங்குனுபலான கிராமம் | கிராமிய சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நிகழச்சி (தேவை அடையாளம் காணல்)<br>சமுர்தி நலன்பெறுவோர், சிறுவர் நிகழச்சிகள் மற்றும் ஆசிரியர்களை விழிப்பூட்டல் | 42 |
| 2019.03.25 மற்றும் 26 | தலாவை, குருந்துவெவ கிராமம் | கிராமிய சமுதாய அடிப்படையிலான அமைப்புகள், சிறு குழுக்களுக்கான நிகழ்ச்சி<br>அறநெறிப் பாடசாலை சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கான நிகழ்ச்சி | 25 |
| 2019.04.01 மற்றும் 02 | அம்பாறை சத்தாதிஸ்ஸ ஆரம்ப பாடசாலை | பெற்றோருக்கான விளிப்பூடடல் நிகழச்சி, கிராமிய கிராமிய சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள், மகளிர் சங்கங்களுக்கு விளிப்பூட்டல் | 37 |
| 2019.04.08 மற்றும் 09 | கிளிநொச்சி மருதநகர் கிராமம் | கிராமிய சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் உத்தியோகத்தர்கள், சிறு குழுக்கள், சிறுவர்கள், இளைஞர் சமுதாயத்திற்கு விளிப்பூட்டல் | 41 |

பயிற்சிப் பிரிவின் ஊடாக சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்களுக்கு ரண்ண, கிளிநொச்சி, அம்பாறை மற்றும் தலாவை பிரதேசங்களை மையப்படுத்தி நடாத்திய பயிற்சிகளின் விபரம் அட்டவனை 06 இல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவனை இல 07

**பயிற்சிப் பிரிவினால் 2019ம் ஆண்டு நடாத்தப்பட்ட பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சிகள்**

| | செயற்பாடுகள் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி) | செலவு (ரூ.மி) | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பயனாளிகள் எண்ணிக்கை | | செயற்திட்ட எண்ணிக்கை |
| | | | | பெண் | ஆண் | |
| 01. | தொழில்வாண்மை வழிகாட்டல் தினத்திற்காக காலி சவுத்லன்ட் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட நிகழச்சி (ரண்ண நிலையம்) | 0.45 | | 400 | | 01 |
| | திறன் விருத்தி பயிற்சி – சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனத் தலைவர்கள் (ரண்ண நிலையம்) | | 32,636.00 | 42 | | 01 |
| | திறன் விருத்தி பயிற்சி – சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனத் தலைவர்கள் (தலாவை நிலையம்) | | 26,940.00 | 25 | | 01 |
| | திறன் விருத்தி பயிற்சி – சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனத் தலைவர்கள (அம்பாறை நிலையம்) | | 30,305.00 | 37 | | 01 |
| | திறன் விருத்தி பயிற்சி – சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட நிறுவனத் தலைவர்கள (கிளிநொச்சி நிலையம்) | | 31,565.00 | 41 | | 01 |
| 02 | பயிற்சி நாளேட்டினை தயாரித்தல் | 983,632.00 | 17,825.00 | 12 | | 01 |
| | பயிற்சி நாளேடு | | 491,815.60 | | | 01 |
| 03 | பாடநெறியினை நிறைவுசெய்த மாணவர்கள் தொடர்பாக மேற்கொள்ளும் முன்னேற்றம் பற்றிய நிகழ்ச்சி | 1,000,000.00 | | | | 01 |
| 04 | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி (கொழும்பு) | 0.25 | 46,865.00 | 27 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி (கிளிநொச்சி) – தமிழ் மொழிமூலம் | | 44,172.00 | 19 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி (அம்பாறை) – தமிழ் மொழிமூலம் | | 68,345.00 | 35 | | 01 |

| | செயற்பாடுகள் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி) | செலவு (ரூ.மி) | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பயனாளிகள் எண்ணிக்கை | | செயற்திட்ட எண்ணிக்கை |
| | | | | பெண் | ஆண் | |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி (தலாவை) | | 20,820.00 | 10 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி (அம்பாறை) – சிங்களம் மொழிமூலம் | | 17,415.00 | 11 | | 01 |
| | கள மேற்பார்வையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி (ரண்ண) – சிங்களம் மொழிமூலம் | | 29,039.00 | 14 | | 01 |
| 05 | சமுதாய விளிப்பூட்டல் நிகழ்ச்சி – உளச் சுகாதார தின நிகழ்ச்சி (கிளிநொச்சி) | 0.1 | 22,760.00 | 50 | | 01 |
| | சமுதாய விளிப்பூட்டல் நிகழ்ச்சி – உளச் சுகாதார தின நிகழ்ச்சி (தலாவை) | | 21,903.00 | 55 | | 01 |
| | சமுதாய விளிப்பூட்டல் நிகழ்ச்சி – உளச் சுகாதார தின நிகழ்ச்சி (அம்பாறை) | | 21,050.00 | 76 | | 01 |
| | சமுதாய விளிப்பூட்டல் நிகழ்ச்சி – உளச் சுகாதார தின நிகழ்ச்சி (ரண்ண) | | 22,081.00 | 100 | | 01 |

பயிற்சிப் பிரிவின் நிகழ்ச்சிகள் நாவலை அலுவலகத்தினை மையமாகக்கொண்டு நடாத்தப்பட்டு வருவதோடு மேலதிகமாக 04 பிரதேச வள நிலையங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன. அப் பிரதேச வள நிலையத்தினுள் பாடநெறிகளும் பயிற்சி நிகழ்ச்சிகள் அப்பிரதேச வளநிலையங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அது அட்டவனை 07 இல் காட்டப்பட்டுள்ளது.

## அம்பாறை பிரதேச வள நிலையம்

**01.** மேற்கொள்ளப்படும் நீண்டகால பயிற்சி பாடநெறிகள்

**அட்டவனை இல 08**

**நடாத்தப்பட்டுவரும் நீண்டகால பாடநெறிகள்**

| தொ.இ | பாநெறி/நிகழ்ச்சி | காலம் | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி 2017/19 சிங்கள மொழிமூலம் | 21 மாதங்கள் | 31 மாணவர்கள் |
| 02 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி 2017/19 தமிழ் மொழிமூலம் | 21 மாதங்கள் | குழு ஏ. 46 மாணவர்கள்<br>குழு பீ. 53 மாணவர்கள் |
| 03 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி 2019/20 சிங்கள மொழிமூலம் | 21 மாதங்கள் | 42 மாணவர்கள் |

**2.** அம்பாறை பிரதேச வள நிலையத்தினால் வருடாந்த திட்டத்திற்கமைய 2019ம் ஆண்டில் நடாத்தப்பட்ட குறுங்கால பயிற்சி

**அட்டவனை இல 09**

| செயற்பாடுகள் / நிகழச்சி தலைப்பு | பங்குபற்றுனர் | நடாத்தப் பட்ட திகதி | நிலையம் | செலவு (ரூ.மி) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அனுசரிப்பு | காகிதாதி | சான்றிதழ் | வளவாளர் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து செலவு | மொத்தம் |
| 01. அம்பாறை பிரதேச செயலகத்தில் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்தி 2 நாள் பயிற்சி | கிராமிய மகளிர் சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 39 பேர் | 2019.04. 01 மற்றும் 02 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அம்பாறை பிரதேச வள நிலையம் | 24365.00 | 1790.00 | 4000.00 | ....... | 30155.00 |
| 02. கள ஆலோசகர்களை விளிப்பூட்டும் ஒருநாள் பயிற்சி | 15 கள ஆலோசகர்கள் | 2019.11.29 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அம்பாறை பிரதேச வள நிலையம் | 6415.00 | - | - | 11000.00 | 17415.00 |

அம்பாறை பயிற்சிநிலையத்தினை மையமாகக்கொண்டு நடாத்தப்படுகின்ற நீண்டகால மற்றும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகள் பற்றிய விரபம் அட்டவனை 09ல் காட்டப்பட்டுள்ளது.

03. பிரதேசத்தின் அரச சார்பற்ற மற்றும் சமுதாய அமைப்புக்களின் வேண்டுகோளின்படி 24 நிகழச்சிகளுக்காக வளவாளராக பங்களிப்பு செய்தல்
04. 21 சேவைநாடிகளுக்கு உளவியல் உளவளத்துணை சேவையினை வழங்குதல்

## வருடத்தின் வரவு மற்றும் செலவு விபரம்

**அட்டவனை இல 10**

**அம்பாறையின் வருமான செலவு விரபரம்**

| வருமான விபரம் | பெருமதி (ரூபா) |
|---|---|
| 2018/19 உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியின் பாடநெறிக் கட்டனம் மற்றும் பதிவுக் கட்டனம் | 1,600,000.00 |
| 2019 /20 உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியின் பாடநெறிக் கட்டனம் மற்றும் பதிவுக் கட்டனம் | 2,040,000.00 |
| **மொத்தம்** | **3,640,000.00** |
| | |
| கட்டனம் அரவிடாது வழங்கப்பட்ட சேவைகளின் பெறுமதி (தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்காக)<br>தங்குமிட வசதி வழங்கள்<br>விரிவுரை மண்டபம் வழங்கள்<br>மல்டிமீடியா உபகரணம் வழங்கள் | 3,900.00<br>144,000.00<br>105,000.00 |
| **மொத்தம்** | **252,900.00** |

| செலவு விபரம் | பெருமதி (ரூபா) |
|---|---|
| நீர் | 17,870.78 |
| மின் | 20,663.05 |
| தொலைபேசி | 26,021.06 |
| நிருவாகம் | 7,086.00 |
| **மொத்தம்** | **71,640.89** |

அம்பாறை வள நிலையத்தில் 2019ம் ஆண்டிற்குறிய வரவு செலவு விரபரம் அட்டவனை 10ல் வழங்கப்பட்டுள்ளது.

**பிரதேச மட்டத்தில் வளப் பங்களிப்பு வழங்கிய நிகழ்ச்சிகள்**

**01.** நிகழ்ச்சி – கர்ப்பிணித் தாய்மார்களின் உளநல மேம்பாடு
ஒழுங்குசெய்தது – உஹனை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்
திகதி – 2019.02.24
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 40 தாய்மார்கள்

நோக்கம்
- கர்ப்பிணித் தாய்மார்களின் உளநல பிரச்சினைகளை அடையாளம் காணல்
- கர்ப்பிணித் தாய்மார்களின் உளநலத்தினை மேம்படுத்தல்

**02.** நிகழ்ச்சி – சமுதாய பொலிஸ் உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு மாற்றம்
ஒழுங்குசெய்தது – கிழக்கு மாகாண பொலிஸாருக்கான கடமையின் போதான பயிற்சி நிலையம்
திகதி – 2019.03.25
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 40 சமுதாய பொலிஸ் உத்தியோகத்தர்கள்

**நோக்கங்கள்**

- சமுதாய பொலிஸ் உத்தியோகத்தர்களின் தொழில்வாண்மை விருத்தி
- அவர்களின் சேவை வழங்கும் மனப்பாங்கினை விருத்தி செய்தல்
- சமுதாய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான உறவை விருத்தி செய்தல்

**03.** நிகழ்ச்சி – உளவியல் உளவளத்துணையும் அதன் முக்கியத்துவமும்
ஒழுங்குசெய்தது – கொண்டுவட்டுவான் யுத்தப் பயிற்சி பாடசாலை
திகதி – 2019.01.28
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 35 தரைப்படை, வான்படை, கடற்படை உத்தியோகத்தர்கள்

**நோக்கங்கள்**

- தரைப்படை, வான்படை, கடற்படை உத்தியோகத்தர்களின் உளவளத்துணை தெளிவை ஏற்படுத்தல்
- அவர்களின் தொழில்வாண்மை உறவை விருத்தி செய்ய உளவளத்துணையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல்

**04.** நிகழ்ச்சி – சமுதாய அபிவிருத்திக்காக சமுதாய தேவை மதிப்பீடு
ஒழுங்குசெய்தது – தெகியத்தகண்டிய பிரதேச செயலகம்/கிராம சக்தி செயற்திட்டம்
திகதி – 2019.03.06
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 40 கள உத்தியோகத்தர்கள்

**நோக்கங்கள்**

- தெகியத்தகண்டிய பிரதேச செயலக சமுதாயத்தின் தேவைகளை அடையாளம் காணல் அப்பகுதியில் உள்ள உத்தியோகத்தர்களின் பணிகள் திருப்திகரமாக உள்ளதா? ஏன் கலந்துரையாடல் கள உத்தியோகத்தர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடுவதும் பிரயோக ரீதியான தீர்வுகளுக்கு செல்லல்

**05.** நிகழ்ச்சி – முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்களின் மனவெழுச்சி முகாமைத்துவம்
ஒழுங்குசெய்தது – மகஓய பிரதேச செயலகம்
திகதி – 2019.02.07

**நோக்கங்கள்**

- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்கள் எதிர்நோக்கும் மனவெழுச்சி சார் பிரச்சினைகளை அடையாளம் காணல்
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்களின் மனவெழுச்சி சார் பிரச்சினைகளை முகாமை செய்ய முன் பள்ளி ஆசிரியைகளின் வகிபங்கை விளக்குதல்

பங்குபற்றுனர் எண்ணிக்கை – 46 முன்பள்ளி ஆசிரியைகள்

**06.** நிகழ்ச்சி – விடய முகாமைத்துவமும் விடய மாநாடும்
ஒழுங்குசெய்தது – அம்பாறை மாவட்ட செயலகம்
திகதி – 2019.01.24
பங்குபற்றுனர் எண்ணிக்கை – அம்பாறை பிரதேச செயலகங்கள் 22ல் சிறுவர்களுடன் பணிபுரியும் 46 கள உத்தியோகத்தர்கள்

**நோக்கங்கள்**

- அம்பாறை பிரதேச செயலகங்கள் 22ல் சிறுவர்களுடன் பணிபுரியும் கள உத்தியோகத்தர்களின் விடய முகாமைத்துவமும் விடய மாநாடு தொடர்பான அறிவை விருத்தி செய்தல்

**07.** நிகழ்ச்சி – கிராமிய சிறுவர் பராமரிப்பு கள உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்தி
ஒழுங்குசெய்தது – சியம்பலாண்டுவ பிரதேச செயலகம்
திகதி – 2019.03.07
பங்குபற்றுனர் எண்ணிக்கை – சிறுவர்களுடன் பணிபுரியும் கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய சிறுவர் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 68 பேர்

**நோக்கங்கள்**

சிறுவர்களுடன் பணிபுரியும் கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய சிறுவர் பாதுகாப்பு குழு உறுப்பினர்களின் ஆற்றல் விருத்தி செய்தல்

**08.** நிகழ்ச்சி – முன்பள்ளி மாணவர்களின் மனவெழுச்சி முகாமைத்துவ திறன்
ஒழுங்குசெய்தது – சியம்பலாண்டுவை பிரதேச செயலகமும் பிரதேச சபையும்
திகதி – 2019.03.15
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 58 முன்பள்ளி ஆசிரியர் சங்க உறுப்பினர்கள்

**நோக்கங்கள்**

- சியம்பலாண்டுவை முன்பள்ளி ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழக்கையில் முகங்கொடுக்கும் உளப்பிரச்சினைகளை அடையாளம் காணல்
- உளப் பிரச்சினைகளை தீர்க்க கலந்துரையாடுதல்
- முன்பள்ளி ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் மனவெழுச்சி மகாமை பற்றிய விழிப்புணர்

**09.** நிகழ்ச்சி – சேவைநாடிகளுக்கு பயனுள்ள சேவையினை வழங்குவதற்காக சிறந்த தொடர்பாடல் திறன்
ஒழுங்குசெய்தது – அம்பாறை நகரசபை உத்தியோகத்தர்கள்
திகதி – 2019.09.12
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 26

**நோக்கங்கள்**

அம்பாறை நகரசபை உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் திறனை விருத்தி செய்தல்
அம்பாறை நகரசபை உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தல்

**10.** நிகழ்ச்சி – விடயப்பணி முகாமைத்துவ திறன் (சிறுவர்களுடன் பணி புரிகின்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை விளிப்பூட்டும் நிகழ்ச்சி
திகதி – 2019.07.29
நிலையம் - சியம்பலாண்டுவை கலாச்சார நிலையம்
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 44

**நோக்கங்கள்**

- சிறுவர்களுடன் பணி புரிகின்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை விடயப்பணி முகாமைத்துவ திறனை மேம்படுத்தல்

**11.** நிகழ்ச்சி – ஊவா மாகாண முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு மாற்றமும் நெருக்கீட்டு முகாமைத்துவம் பற்றிய ஒரு நாள் பயிற்சி
திகதி – 2019.12.03.
நிலையம் - மொனராகலை மாவட்ட செயலகக் காரியாலயம்
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 26 ஊவா மாகாண முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

**நோக்கங்கள்**

- ஊவா மாகாண முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு மாற்றத்தை விருத்தி செய்தல்
- ஊவா மாகாண முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நெருக்கீட்டு முகாமைத்துவத்தை விருத்தி செய்தல்

**12.** நிகழ்ச்சி – மனப்பாங்கு மாற்றமும் உளச் சுகாதார மேம்படுத்துதலும் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழச்சி
திகதி – 2019.08.06
நிலையம் - திஸ்ஸபுர விகாரை
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 79 சிவில் பாதுகாப்பு செயலணி உத்தியோகத்தர்கள்

**நோக்கங்கள்**

- சிவில் பாதுகாப்பு செயலணி உத்தியோகத்தர்கள் மனப்பாங்கினை விருத்தி செய்தல்
- ஊவா மாகாண சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் உளச் சுகாதார மேம்படுதுதல்

**13.** நிகழ்ச்சி – குழு உளவளத்துணை திறன்கள்
திகதி – 2019.05.13
நிலையம் - மொனராகலை கூட்டுறவு பயிற்சி நிலையம்
பங்குபற்றுனர் எண்ணிக்கை –தொண்டு சமூக அணிதிரட்டளாலர்கள்

**நோக்கங்கள்**

- தொண்டு சமூக அணிதிரட்டளாலர்களின் உளவளத்துணை அறிவை விருத்தி செய்தல்
- தொண்டு சமூக அணிதிரட்டளாலர்களின் உளவளத்துணை திறனை விருத்தி செய்தல்

**14.** நிகழ்ச்சி – சிறுவர் உளவியல்
திகதி – 2019.06.14
நிலையம் - சியம்பலாண்டுவ பிரதேச செயலகம்
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 69 முன்பள்ளி ஆசிரியர்கள்

**நோக்கங்கள்**

- முன்பள்ளி ஆசிரியர்களின் சிறுவர் உளவியல் பற்றிய அறிவை விருத்தி செய்தல்
- முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில்வாண்மை வகிபங்கு தொடர்பாக சிறுவர் உளவியல் பற்றிய அறிவின் முக்கியத்துவத்தை விளக்குதல்

**15.** நிகழ்ச்சி – நெருக்கீட்டு முகாமைத்துவம்
திகதி – 2019.11.08
நிலையம் - அம்பாறை தள வைத்தியசாலை
பங்குபற்றுனர் எண்ணிக்கை – வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் 22 பேர்

**நோக்கங்கள்**

- அம்பாறை தள வைத்தியசாலை அலுவலர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணல்
- அவர்களுக்கான நெருக்கீட்டு முகாமைத்துவம்

**16.** நிகழ்ச்சி – இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான முறைமைகளை அறிமுகம் செய்தல்
திகதி – 2019.07.24
நிலையம் - புத்தள பிரதேச செயலகம்
பங்குபற்றுனர் எண்ணிக்கை – இளைஞர் அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் 28 பேர்

**நோக்கங்கள்**

- இளைஞர் அமைப்புக்களின் உத்தியோகத்தர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் அடையாளம் காணல்
- இளைஞர் அமைப்புக்களின் உத்தியோகத்தர்களை சமூகமயபடுத்துவதற்காக அவர்களை வலுவூட்டல்

**17.** நிகழ்ச்சி – பாடசாலை மாணவத் தலைவர்களின் திறன் அபிவிருத்தி பயிற்சி
திகதி – 2019.07.24
நிலையம் - பதியதலாவை தேசிய பாடசாலை
பங்குபற்றுனர் எண்ணிக்கை – 280 பாடசாலை மாணவர்கள்

**நோக்கங்கள்**

- பாடசாலை மாணவத் தலைவர்களின் திறன்களை அடையாளம் காணல்
- அத்திறன்களை மேம்படுத்த நுட்பங்களை கண்டறிதல்
- திறன்களை பயன்படுத்தவதற்காக சுய தெளிவை ஏற்படுத்தல்

## ரண்ண பிரதேச வள நிலையம்

**அட்டவனை இல 11**

டிப்ளோமா பாடநெறி மற்றும் குறுங்கால பயிற்சி நிகழ்சி தொடர்பான விளக்கம்.

| தொ.இ | நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தபபட்ட திகதி | பங்குபற்றுனர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (சமுர்தி திணைக்களம்) | 2018/2019 | 40 |
| 02 | சமுதாயமைய சங்கத் தலைவர்களுக்கான 2 நாள் ஆற்றல் விருத்தி பயிற்சி | 2019.03.29 மற்றும் 30 | 42 |
| 03 | அந்துபலான கிராமசேவகர் பிரிவில் சமுதாயமைய சங்கத் தலைவர்களை சந்தித்து பயிற்சித் தேவையினை அடையாளம் காணல் | 2019.09.04 | 27 |
| 04 | ஹ/கட்டக்காடு மகா வித்தியாலய மாணவர்களுக்கான கல்வி இலக்குகளை வெற்றிகொள்வதற்கான ஊக்குவிப்புத் தலைப்புக்களின் ஊடாக சிறு பயிற்சி | 2019.10.10 | 51 |
| 05 | ஹ/கட்டக்காடு மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கான சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணலும் உளவளததுணை தொடர்பான சிறு பயிற்சியும் | 2019.10.10 | 35 |
| 06 | சுகுரு கம்மான எண்ணக்கருவிற்கேற்ப அந்துபலான கிராம சேவகர் பிரிவில் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சி | 2019.10.10 | 100 |
| 07 | உளச் சுகாதார தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களின் உளச்சுகாதார அபிவிருத்தியும் தற்கொலையை தவிர்த்தலும் தடுப்பு | 2019.11.04 | 100 |
| 08 | கள மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி | 2019.12.10 | 15 |

**உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி** 2018/2019

சமுர்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் 40 பேருக்காக உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி நடாத்தப்பட்டு தற்போது வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அது தொடர்பான விபரம் அட்டவனை இல 11ல் வழங்கப்பட்டுள்ளது.

**2019ம் ஆண்டு ரண்ண பிரதேச நிலையத்தின் ஊடாக செயற்படதத்தப்படுகின்ற பயிற்சி நிகழச்சி**

1. **சமுதாயமைய சங்கத் தலைவர்களுக்கான 2 நாள் பயிற்சி**

**அறிமுகம் -** ஹம்பாந்தோட்டை மாவட்ட தங்கல்லை பிரதேச செயலக வலயத்திற்கு உட்பட்ட கிாமிய சமுதாய மைய சங்க தலைவர்களை மையமாகக் கொண்டு இந்நிகழ்ச்சி நடாத்தபபட்டது.

**நிகழச்சியின் பெயர்:** கிராமிய சமுதாயமைய தலைவர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சி

**பங்குபற்றியோர் தன்மை** – தங்கல்லை பிரதேச செயலக் காரியாலயத்திற்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவின் சமுதாய மைய சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் 42 பேர் பங்குபற்றினர்

**ஒழுங்கு செய்த நிறுவனம்** - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவு

**கோரிக்கை விடுத்த நிறுவனம்** - தங்கல்லை பிரதேச செயலகம்

பங்குபற்றிய நிறுவனங்கள் - விவசாய சங்கம், சணச சங்கம், சமுர்தி சங்கம், ஈமக் கிரியை சங்கம், ரண்ண வடக்கு சமுர்தி வங்கி

திகதி – 2019.03.29/30

விரிவுரை தலைப்பு – 2019.03.29 – சமுதாய அபிவிருத்திக்கு அறிமுகமும் சமுதாயஞ்சார் நிறுவனங்களின் முக்கியத்துவம்

தலைமைத்துவமும் தொடர்பாடல் திறனும சமுதாய அமைப்புக்களில் மோதல் முகாமைத்துவம்

பயிற்சி முறையியல் - வகுப்பறை விரிவுரை/ குழுக் கலந்துரையாடல்/பிரயோகச் செயற்பாடுகள்

பங்குபற்றுனர் மதிப்பீடு – பயிற்சி நிகழ்ச்சிகளின் மூலம் தமது கிராம மக்களுக்கு மிகச் சிறந்த செயற்திறனான சேவையினை வழங்குவதற்கு தேவையான அறிவு திறனை அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது என தெரிவித்தனர். சமுதாய மைய சங்கங்களுள் எழும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு இப்பயிற்சியின் மூலம் பெற்றுக்கொண்ட அறிவு முக்கியமானது.

**பங்குபற்றுனர் ஆலோசனை** – மிகச் சிறந்த பதில்வினை பெறப்பட்டதுடன் இத்தகைய தலைப்புக்களின் ஊடாக மேலும் பயிற்சிகளை வேண்டிநின்றனர்.

**வளப் பங்களிப்பு** – திரு. பி.சி. ஹெட்டியாரச்சி, திரு. பீ.கே. எஸ். கருணாரத்ன ஹாரன்ன பிதேச நிலையத்தின் உத்தியோகததர்களினாலும் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது

## 2. அந்துபலான கிராமசேவகர் பிரிவில் உள்ள பயிற்சி தேவை மற்றும் பிரச்சினைகளை அடையாளம் காணல்

2109ம் ஆண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவின் செயற்திட்டத்திற்கு அமைய நிறுவனத்தின் பிரதேச வள நிலையமான ரண்ண, அம்பாறை, கிளிநொச்சி ஆகிய 04 நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு சுகுரு கம்மான நிகழச்சி நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டது.

அதற்கேற்ப ரண்ண நிலையத்தை மையமாகக்கொண்டு தங்காலை பிரதேச செயலகப் பிரிவில் சமூகப் பிரச்சினைகள் மற்றும் பின்தங்கிய கிராமமாக அந்துபலான கிராம சேவகர் பிரிவு தெரிவுசெய்யப்பட்டது. அக்கிராமத்தில் 2018ம் ஆண்டு சமுதாயஞ்சார் நிறுவனங்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நடாத்துவதன் ஊடாக பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் தங்காளை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவலின் படியும் இக்கிராமம் பின்தங்கிய கிராமமாக தெரிவுசெய்யப்பட்டது. அதற்கேற்ப 2019ம் ஆண்டு சுகுறு கிராம செயற்திட்டத்தில் பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்படுத்தப்பட்டது.

செயற்திட்டத்தின் நோக்கம்

- சமுதாயத்தின் முற்றுமுழுதான அபிவிருத்திக்கான திறன் அபிவிருத்தி செய்தல்
- ஒருங்கிணைந்த சேவை வழங்களுக்காக சமுதாய பிரதிநிதிகள் மற்றும் சேவை வழங்கள் முறைமைகளுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்தல்.
- சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக சமுதாயத்திலுள்ளவரையறைகளையும் தடைகளையும் நீக்குவதற்கு திறன் அபிவிருத்தி செய்தல்
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனததில் கல்வியாளர்களினதும் மாணவர்களினதும் கள அனுபவத்தினை முன்னேற்றுதல்

இக்கூறப்பட்ட நீண்டகால நோக்கங்களை அடைவதற்காக 3 வருட திட்டத்தின் கீழ் இச் செயற்திட்டத்தினை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் முதற் கட்டமாக உரிய துறையுடன் ஒத்தியங்கி அவர்களின் தேவைகளை அடிமட்டத்திலிருந்து அடையாளம் காண்பதன் நோக்கில் அந்துபலான கிராமசேவகர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்கள் உட்பட கிராமவாசிகளை நேர்கண் அங்கு காணப்படும் பயிற்சித் தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் காண்பதற்கான நிகழச்சி செயற்படுத்தப்பட்டது.

i.அந்துபலான கிராமசேவகர் பிரிவிலுள்ள பயிற்சி தேவை மற்றும் பிரச்சினைகளை அடையாளம் காணும் செயற்பாடு

- நிகழச்சியின் பெயர் - அந்துபலான கிராம சேவகர் பிரிவில் காணப்படும் பயிற்சித் தேவையினை அடையாளம்காணும் நிகழ்ச்சி
- பங்குபற்றியோரின் தன்மை – கிராம சேவகர்களும் சமுதாயஞ்சார் அமைப்புக்களின் உறுப்பினர்கள் 27 பேர் பங்குபற்றினர்
- ஒழுங்குசெய்த நிறுவனம் - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு
- கோரிக்கைவிடுத்த நிறுவனம் -
- பங்குபற்றிய நிறுவனங்கள் - கமநல சங்கங்கள் சணச சங்கம், சமுர்தி சங்கம், ஈமக் கிரியை சங்கம்
- திகதி - 2019.09.04
- விரிவுரை தலைப்பு - அந்துபலான கிராமசேவகர் பிரிவிலுள்ள பயிற்சி தேவை மற்றும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல்
- பயிற்சி முறையியல் - குழுக் கலந்துரையாடல், வினாக்கொத்து முன்வைத்தல், முரண்பாட்டு மரம், மூளைச் சலவை

- **பங்குபற்றுனர் ஆலோசனை** – சுகுறு கம்மான நிகழச்சிக்காக அந்துபலான போன்ற பின்தங்கிய கிராமத்தை தெரிவுசெய்தமைக்கு நன்றி செலுத்தல். மிகச் சிறந்த பதில்வினை பெறப்பட்டதுடன் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சிகள், போதைப்பொருள் தடுத்தல், பாடசாலை மாணவர்களின் கல்விநிலையை உயர்த்துதல், உயர்கல்வி சித்தியடைந்த வேலையற்ற நபர்களுக்கான நிகழச்சி, இளைஞர்களை மையப்படுத்திய நிகழ்ச்சி, ஆண்மீகம், போன்ற தலைப்புக்களின் ஊடாக மேலும் பயிற்சிகளை வேண்டிநின்றனர்.

- **வளப் பங்களிப்பு –** திரு. பி.சி. ஹெட்டியாரச்சி**,** திருமதி. காஞ்சனா அதிகாரி, திருமதி. பீ.ஜீ.ஐ எம் சமரசிங்க மற்றும் ரண்ண பிதேச நிலையத்தின் உத்தியோகததர்களினாலும் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது

**ii .மாணவர்களுக்கான கல்வி நோக்கங்களை வெற்றிகொள்வதற்கான நிகழ்ச்சி**

**அறிமுகம்**

சுகுறு கம்மான நிகழ்ச்சிக்காக தங்காலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அந்துபலான கிராமத்திலுள்ள அதிகளவு மாணவர்கள் கல்விகற்கும் ஹ/சித்தார்த்த மகா வித்தியாலயத்தில் குடும்பம் எனும் அலகினுள் சமூக பொருளாதார ரீதியில் பிரச்சினைகளுக்கு ஆளான பல்வேறு வயதிற்குட்பட்ட குழுக்களின் (6-11ம் வருடம்) தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்காக கல்வி இலக்கினை வெற்றிகொள்வதற்கான நிகழச்சி நடாத்தப்பட்டது. இதில் 52 மாணவர்களும் பாடசாலை உளவளத்துணை ஆசிரியரும் பங்கேற்றனர்.

**நிகழச்சியின் பெயர்** - மாணவர்களுக்கான கல்வி இலக்கினை வெற்றிகொள்வதற்கான நிகழச்சி

**ஒழுங்குசெய்த நிறுவனம் - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு**

**கோரிக்கைவிடுத்த நிறுவனம்** - சுகுறு கம்மான தேவை மதிப்பீட்டின் அடிப்படையிலும் ஹ/சித்தார்த்த மகா வித்தியாலய ஆசிரியர்களின் வேண்டுகோளின் அடிப்படையிலும்

**பங்குபற்றியவர்கள்** - ஹ/சித்தார்த்த மகா வித்தியாலயத்தில் 6 - 11ம் வருடங்களில் கல்வி கற்கும் 51 பேர்

**திகதி - 2019.10.10**

**விரிவுரை தலைப்பு** - கல்வி இலக்கினை வெற்றிகொள்வதற்கான மாணவர் ஊக்குவித்தல்

**பயிற்சி முறையியல்** - வகுப்பறை விரிவுரை, குழுக் கலந்துரையாடல், வினாக்கொத்து, பிரயோக செயற்பாடுகள்

**பங்குபற்றுனர் ஆலோசனை** - சிறந்த பின்னூட்டல் பெறப்பட்டதுடன் இதுபோன்ற மேலும் பல தலைப்புக்களில் அனைத்து வகுப்பினருக்குமான பயிற்சிகளை வேண்டிநின்றனர்.

**வளப் பங்களிப்பு** - திரு. பி.சி. ஹெட்டியாரச்சி, திருமதி. காஞ்சனா அதிகாரி, திருமதி. பீ.ஜீ.ஐ எம் சமரசிங்க மற்றும் ரண்ண பிதேச நிலையத்தின் உத்தியோகததர்களினாலும் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது

**iii.மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விரீதியான பிரச்சினைகளை அடையாளம் காணலும் உளவளத்துணையும்**

- **அறிமுகம்**
  சுகுறு கம்மான நிகழ்ச்சிக்காக தங்காலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அந்துபலான கிராமத்திலுள்ள அதிகளவு மாணவர்கள் கல்விகற்கும் ஹ/சித்தார்த்த மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களின் கல்வி இலக்குகளை வெற்றிகொள்வதற்கு வழிகாட்டலை வழங்கும் முறை தொடர்பான குறுங்கால பயிற்சி
- **நிகழச்சியின் பெயர்** - மாணவர்களுக்கான கல்வி இலக்கினை வெற்றிகொள்வதற்கான நிகழச்சி
- **ஒழுங்குசெய்த நிறுவனம்** - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு
- **கோரிக்கைவிடுத்த நிறுவனம்** - சுகுறு கம்மான தேவை மதிப்பீட்டின் அடிப்படையிலும் அவவூரிலுள்ள பெற்றோர்களின் வேண்டுகோளுக்கினங்கவும்
- **பங்குபற்றியவர்கள்** -ஹ/சித்தார்த்த மகா வித்தியாலயத்தினர்

- **திகதி** - 2019.10.10
- **பயிற்சி முறையியல்** - வகுப்பறை விரிவுரை, குழுக் கலந்துரையாடல், வினாக்கொத்து,
- **பங்குபற்றுனர் ஆலோசனை** - சிறந்த பின்னூட்டல் பெறப்பட்டதுடன் அநநிகழச்சியின் ஊடாக அவரகள் தமது கற்பித்தல் முறையை சிறந்தமுறையில் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு உந்துதலாக இருந்ததென குறிப்பிட்டனர். இத்தகைய தலைப்புக்களின் உடாக 3 நாள் பயிற்சி நடாத்தவேண்டும் என ஊகிக்கப்பட்டது.
- **வளப் பங்களிப்பு** - திருமதி. காஞ்சனா அதிகாரி, திருமதி. பீ.ஜீ.ஐ எம் சமரசிங்க மற்றும் ரண்ண பிதேச நிலையத்தின் உத்தியோகததர்களினாலும் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது

**iv.சுகுறு கிராமம் எண்ணக்கருவுக்கேற்ப அந்துபலான கிராம சேவகர் பிரிவில் போதைப்பொருள் ஒழிப்பு நிகழச்ச**

- **அறிமுகம்**

சுகுறு கம்மான எண்ணக்கருவுக்கேற்ப தங்காலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அந்துபலான கிராமத்திலுள்ள அந்துபலான கிராமசேவகர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுதாயஞ்சார் அமைப்புக்களின் தலைவர்கள் உட்பட கிராமவாசிகளை நேர்கண் அங்கு காணப்படும் பயிற்சித் தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் காண்பதற்கான நிகழச்சி 2019.09.04 திகதி செயற்படுத்தப்பட்டது. அங்கு போதைப்பொருளுக்கு அடிமையாதல் கிராமத்தில் அதிகம் இருப்பதாக அடையாளம் காணப்பட்டதுடன் கிராமத்திலுள்ளவர்களின் பொரளாதார சமூக ஆண்மீக அபிவிரத்திக்காக மதுபோதை ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

- **நிகழச்சியின் பெயர்** - போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஒருநாள் பயிற்சி
- **ஒழுங்குசெய்த நிறுவனம்** - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு
- **கோரிக்கைவிடுத்த நிறுவனம்** - சுகுறு கம்மான தேவை மதிப்பீட்டின் அடிப்படையிலும் அவவூரிலுள்ள சனசமூக நிலைய தலைவர்கள்
- **பங்குபற்றியவர்களின் தன்மை** சமுர்தி பயனாளிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர் 100
- **பங்குபற்றிய நிறுவனம்** - சமுர்தி அலுவலக உட்பட கிராமத்தின் சனசமூக சங்கங்கள்
- **திகதி** - 2019.10.10
- **விரிவுரை தலைப்பு** - போதைப்பொருள் தடும்பும் அதற்கு அடிமையாதலை தடுத்தலும்
- **பயிற்சி முறையியல்** - விரிவுரை, முன்வைப்பு/ குழுச் செயற்பாடு/ கலந்துரையாடல்
- **பங்குபற்றுனர் ஆலோசனை** - சிறந்த பின்னூட்டல் பெறப்பட்டதுடன் கிராமத்தில் பெரும் அச்சுறுத்தலாக அமைந்த போதைப்பொருள் பயன்பாடு தொடர்பாக நிகழச்சியொன்றினை நடாத்துவதது தொடர்பாக நன்றி செலுத்தினர். மிகவும் பினதங்கிய கிராமமான அந்துபலான போன்ற கிராமப்புரங்களில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்தலும் கிராமவாசிகளின் அறிவு திறன் அபிவிருத்திக்காக இதுபோன்ற பயிற்சிகளை நடாத்துவது உசிதமானது என குறிப்பிடப்பட்டது.
- **வளப் பங்களிப்பு** – திரு.பீ.சி. ஹெட்டியாரச்சி, மற்றும் ரண்ண பிதேச நிலையத்தின் உத்தியோகததர்களினாலும் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது

2. உளச்சுகாதார தினத்தையொட்டி தற்கொலையை தடுத்தல் தொடர்பான நிகழச்சி

அறிமுகம் - உலக உள சுகாதாரத் தினத்தையொட்டி உளச் சுகாதாரத்தினை முன்னேற்றுவதன் ஊடாக தற்கொலை செய்துகொள்வதனை தடுப்பது தொடர்பான பயிற்சியினை நடாத்துதல்.

- **நிகழச்சியின் பெயர்** - உளச்சுகாதாரத்தினை மேம்படுத்துவதன் ஊடாக தற்கொலையை தடுப்பது தொடர்பான ஒரு நாள் பயிற்சி
- **பங்குபற்றியவர்களின் தன்மை** - ஹ/வாடியகொட கனிஷ்ட வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் உட்பட 100 பேர் பங்குபற்றல்
- **ஒழுங்குசெய்த நிறுவனம்** - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு
- **கோரிக்கைவிடுத்த நிறுவனம்** - வாடியகொட ஆரம்பப் பாடசாலை
- **பங்குபற்றிய நிறுவனம்** - ஹ/வாடியகொட கனிஷ்ட வித்தியாலய மாணவர்களும் ஹம்பாந்தோட்டை சமுதாய சுகாதாரப் பிரிவு
- **திகதி** - **2019.11.04**
- **விரிவுரை தலைப்பு** - உளச் சுகாதாரத்தினை முன்னேற்றுவதன் ஊடாக தற்கொலையை தடுத்தல் (பாடசாலை மாணவர்களுக்கான விசேட நிகழ்ச்சியாக நடாத்தப்பட்டது.
- **பயிற்சி முறையியல்** - விரிவுரை, முன்வைப்பு/ குழுச் செயற்பாடு/ ஒளிப்படம்/பிரயோக செயற்பாடு/மூளைச் சலவை
- **பங்குபற்றுனர் ஆலோசனை** - சிறந்த பின்னூட்டல் பெறப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களின் சகாதாரத்துடன தொடர்பான இத்தகைய நிழச்சிகளை மேலும் தமக்கு வழங்குமாறு பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கேட்டுக்கொண்டனர். கிராமத்தில் பெரும் அச்சுறுத்தலாக அமைந்த போதைப்பொருள் பயன்பாடு இத்தகைய தலைப்புக்களின் கீழ் பயிற்சி நிகழச்சியொன்றை நடாத்தவேண்டும் என்பது பாடசாலை ஆசிரியர்களின் கருத்தாக இருந்தது.
- **வளப் பங்களிப்பு** – திரு. பீ.சி. ஹெட்டியாரச்சி, மற்றும் வைத்தியர். திருமதி. திளினி (ஹம்பாந்தோட்டை சமுதாய சுகாதார அலுவலகம்)

### 3. கள மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி

**அறிமுகம்** - பயிற்சிப் பிரிவின் வருடாந்த திட்டத்திற்கேற்ப எமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்து டிப்ளோமா பாடநெறிகளிலுமு கர மேற்பார்வையாளர்களாக செயற்படுகின்ற தென் மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

- **நிகழ்ச்சியின் பெயர்** - கள மேற்பார்வையாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி
- **பங்குபற்றியவர்களின் தன்மை** – சமூகப்பணி, முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் உளவளத்துணைத் துறையில் ஈடுபடும் தொழில்வாண்மையாளர்கள் 15 பேர் பங்குபற்றினர்.
- **ஒழுங்குசெய்த நிறுவனம்** - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு
- **கோரிக்கைவிடுத்த நிறுவனம்** - பயிற்சிப்பிரிவின் வருடாந்த செயற்திட்டத்தின் அடிப்படையில்
- **பங்குபற்றிய நிறுவனம்** - தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன பயிற்சிப் பிரிவு மற்றும் கள மேற்பார்வையாளர்கள் செவை வழங்கும் நிறுவன பிரதிநிதிகள்
- **திகதி** - **2019.12.10**

- **விரிவுரை தலைப்பு** - மாணவர்கள் மேலும் செயற்திரணாக களச் செயற்பாடுகளில் ஈடுபடுததும முறை, கள மேற்பார்வையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் குறிப்பாக பயிற்சிப் பிரிவின் மூலம் பாடநெறிகளுடன் தொடர்பாக தயாரிக்கப்பட்ட களக் கைநூலின் அடிப்படையில் மாணவர்களை மேற்பார்வை செய்யும் முறை கலந்துரையாடப்பட்டது.
- **பயிற்சி முறையியல்** - விரிவுரை/ குழுச் செயற்பாடு/ ஒளிப்படம்/முன்வைப்புக்கள்
- **பங்குபற்றுனர் ஆலோசனை** - வருடாந்தம் இத்தகைய விளிப்பூட்டல்களை செய்வதன் முக்கியத்துவமும் களத்திலுள்ள புதியவர்களுக்கு மேலும் பயிற்சி வழங்க முடியுமாயின் சமநிலையாக தமது சேவையினை வெற்றிகரமான மேற்கொள்ள முடியும் எனவும் தென் மாகாணத்திற்கான அவர்களின் சங்கத்தினை நிறுவிக்கொள்வதன் முக்கியத்துவமும் கலந்துரையாடப்பட்டது.
- **வளப் பங்களிப்பு** – திரு. பீ.சி. ஹெட்டியாரச்சி, திருமதி. காஞ்சனா அதிகாரி மற்றும் ரண்ண பிதேச நிலையத்தின் உத்தியோகததர்களினாலும் வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது

**4. வளப் பங்களிப்பு**

தங்காலை பிரதேச செயலகத்தினால் சமுர்த்தி பிரிவின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட போதைப்பொருள் தடுப்பும் உளச் சுகாதார மேம்படுத்தலுக்காக நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் இரண்டிற்கு வளப் பங்களிப்பு வழங்கப்பட்டது. இதற்காக தங்காலை பிரதேச செயலகத்தின் சனசமூக சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 100 உறுப்பினர்களுக்கு மேற்பட்டோர் பங்குபற்றினர்.

**2019 ம் ஆண்டு வரவுசெலவு விபரம்**

**அட்டவனை இல 12**

ரண்ண நிறுவனத்தின் வரவு செலவு விபரம்

| தொ.இ | விபரம | பணம் (ரூ) |
|---|---|---|
| 01 | மின் கட்டனம் | 14,683.50 |
| 02 | நீர் கட்டனம் | 21,066.95 |
| 03 | நிருவாகச் செலவு | 15,000.00 |
| | **முழுச் செலவு** | **50,750.45** |

| தொ.இ | விபரம் | பணம் (ரூ) |
|---|---|---|
| 1. | வெளிவாரி நபர்களுக்கான தங்குமிட வசதிகள் வழங்கியதன் ஊடாக | 33,600.00 |
| 2. | உள்வாரி உத்தியோகத்தர்கள்/விரிவுரையாளர்களுக்கான தங்குமிட வசதி வழங்குவதன் ஊடாக | 1,600.00 |
| 3. | பாடநெறி/பயிற்சிப்பட்டறை வழங்குவதன் ஊடாக | 273,000.00 |
| | **மொத்தம்** | **308,200.00** |

மேற்குறித்த அட்டவனை 12 இன் ஊடாக தொடரிலக்கம் 2 மற்றும் 3 இன் ஊடாக காட்டப்பட்டுள்ள பெறுமதி பணத்தினாலோ காசோலையினாலோ அரவிடப்படவில்லை என்பதுடன் வழங்கப்பட்ட சேவையின் பெறுமதி மாத்திரம் காட்டப்பட்டுள்ளது

## தலாவை பிரதேச வள நிலையம்

**அட்டவனை இல 13**

**2019 மேற்கொள்ளப்பட்ட டிப்ளோமா பயிற்சி பாடநெறிகள்**

| | பாடநெறி | கல்வியாண்டு | பயனாளிகள் | நடாத்திய திகதி | ஒருவருக்கான பாடநெறிக் கட்டனம் (ரூ.) | பாடநெறியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|
| 01. | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி | 2019 -2021 | 47 | வார இறுதி | 51,000.00 | வகுப்பறை விரிவுரை நடாத்துதல் |
| 02. | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி | 2018 -2020 | 35 | வார இறுதி | 51,000.00 | இறுதி களப்பரீட்சயத்தில் இணைக்கப்பட்டுள் ளனர் |
| 03. | சமுர்தி உத்தியோகத்தர்களு க்கான உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி | 2018 -2019 | 40 | வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில் | 51,000.00 | இறுதி களப்பரீட்சயத்தில் இணைக்கப்பட்டுள் ளனர் |

### 01. உளவளத்துணை டிப்ளோமா பாநெறி 2018 /2020

இப்பாடநெறியானது இரு வருட பாடநெறியாக இருப்பதுடன் 2018.05.05ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரை டிப்ளோமாவை எதிர்பார்த்து 37 மாணவர்கள் கல்வி நடவக்கையினை வெற்றிகரமான தொடர்கின்றனர். அநுராதபுரம், குருநாகல், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் அரச, தனியார் துறைகளில் பணியாற்றும் மற்றும் தொழில் புரியாதவர்களும் இதில் பங்குபற்றுகின்றனர். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உள்ளகக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வெளிவாரி விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் இது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இது கட்டனம் அரவிட்டு நடாத்தப்படுவதோடு ஒரு மாணவரிடமிருந்து 51,000.00 ரூபா பணம் அரவிடப்படுகிறது. மாதாந்தம் தெரிவுசெய்யப்பட் வார இறுதி நாட்களில் பாடநெறி நடாத்தப்பட்டுவருகின்றது. இது தொடர்பான விளக்கம் அட்டவனை 13ல் காட்டப்பட்டுள்ளது.

### 02. சமுர்தி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி 2018/2019

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்படுத்துகையின் கீழ் சமுர்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட சமுர்தி உத்தியோகத்தர்களுக்கான இப்பாடநெறி நடாத்தப்பட்டுவருகின்றது. ஒரு வருட பாடநெறியான இது மாதாந்தம் தெரிவுசெய்யப்பட் வெள்ளி, சனி ஞாயிறு ஆகிய தினங்களில் பாடநெறி நடாத்தப்பட்டுவருகின்றது. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உள்ளகக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வெளிவாரி விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் இது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இம் மாணவர்களிடையே சிறந்த வருகையினையும் காணலாம்.

### 03..உளவளத்துணை டிப்ளோமா பாநெறி 2019 /2021

இப்பாடநெறியானது இரு வருட பாடநெறியாக இருப்பதுடன் 2019.08.24ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரை டிப்ளோமாவை எதிர்பார்த்து 47 மாணவர்கள் கல்வி நடவக்கையினை வெற்றிகரமான

தொடர்கின்றனர். அநுராதபுரம், குருநாகல், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் அரச, தனியார் துறைகளில் பணியாற்றும் மற்றும் தொழில் புரியாதவர்களும் இதில் பங்குபற்றுகின்றனர். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உள்ளகக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வெளிவாரி விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் இது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இது கட்டனம் அரவிட்டு நடாத்தப்படுவதோடு ஒரு மாணவரிடமிருந்து 51,000.00 ரூபா பணம் அரவிடப்படுகிறது. மாதாந்தம் தெரிவுசெய்யப்பட் வார இறுதி நாட்களில் பாடநெறி நடாத்தப்பட்டுவருகின்றது.

**அட்டவனை இல 14**

**2019ம் ஆண்டு தலாவை பிரதேச வள நிலையத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிகள்**

| | குறுங்கால பயிற்சிகள் | நடாத்தப்பட்ட திகதி | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | கிராமி சமுதாய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி | 2019.03.25/26 | 25 |
| 02. | உளச் சுகாதார தின நிகழ்ச்சி | 2019.11.20 | 55 |
| 03. | கள மேற்பார்வையாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி | 2019.12.10 | 10 |

**1. கிராமி சமுதாய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் தலாவை பிரதேச செயலகத்தில் சமுதாயஞ்சார் அமைப்புக்களின் உத்தியோகத்தர்களுக்காக தலைமைத்துவ பயிற்சி 2019.03.25/26ம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதற்காக 26 பேர் பங்குபற்றினர். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் ஆலோசனை வழங்கப்பட்டது.

**2. உளச் சுகாதார தின நிகழச்சி**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலாவை பிரதேச வள நிலையத்தினை மையமாகக்கொண்டு நடாத்தப்படுகின்ற உளச்சுகாதார தின நிகழ்ச்சி 2019.11.20ம் திகதி பிரதேச வாழ் இளைஞர் யுவதிகள் மற்றும் சமுதாய அமைப்புக்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. இதில் 55 பேர் பங்கேற்றனர்.

**3. கள ஆலோசகர்களுக்காக நடாத்தப்படும் குறுங்கால பயிற்சி**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலாவை பிரதேச பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படும் டிப்ளோமா பாடநெறி, உயர் டிப்ளோமா பாடநெறிகளுக்காக கள ஆலோசகர்களை பயிற்றுவிக்கும் நோக்கில் இந்நிகழச்சி 2018.12.10ம் திகதி நடாத்தப்பட்டது. இதற்காக எமது நிறுவனத்தில் சமூகப்பணி, உளவயில் உளவளத்துணை, முதுமையியல், சிறுவர் பராமரிப்பு ஆகிய டிப்ளோமாக்களை வெற்றிகரமான நிறைவேற்றிய டிப்ளோமாதாரிகள் 30 போர் இதில் பங்குபற்றினர். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் ஆலோசனை வழிகாட்டல் வழங்கப்பட்ட விபரங்கள் அட்டவனை 14 இன் ஊடாக காட்டப்பட்டுள்ளது..

**அட்டவனை இல 15**

**2019ம் ஆண்டு நடாத்தப்பட்ட வெளிவாரி பயிற்சிகள்**

| | நிறுவனம் | திகதி |
|---|---|---|
| 01. | பிரகத்தி சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி | 2019.05.14/15/16 |
| 02. | ஹரிட்டாஸ் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி | 2019.07 24/25 |
| 03. | வடமத்திய மாகாணத்தில் சிறு தொழில் அபிவிருத்திப் பிரிவினால் நடாத்தப்பட்ட தொழில்முயற்சிகளை கட்டியெழுப்பும் பயிற்சி | வருடம் பூராகவும் |
| 04 | கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி | 2019.10.04/05 |

**தலாவை கிளையை தங்குமிட நிலையமாக பயன்படுத்தல்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலாவை பிரதேச பயிற்சி நிலையம் தங்குமிட வசதிகளை வழங்கும் நிலையமாக பயன்படுத்தப்படுகின்றது. பிரதான கட்டிடத்தில் VIP அறை ஒன்றும் (குளிரூட்டப்பட்ட)மற்றும் சிறு அறைகளும் (02 கட்டில்கள்) உள்ளன. இது தவிற 37 பேர் தங்குமிட வசதிகளை வழங்கவும் முடியும். அவ்வாறே 80 ஆசனங்களுடன்கூடிய பிரதான விரிவுரை மண்டபம் (60x30) ஒன்றும் உள்ளது.

நிறுவனத்தினால் குறிப்பிடப்படும் விலையின் கீழ் அரச மற்றும் தனியார் துறைகளில் பயிற்சிகளுக்காகவும் தங்குமிட வசதிகளுக்காகவும் நிலையத்தின் தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் நிறுவனத்திற்கு மேலதிக வருமானம் கிடைப்பதுடன் தேசிய மட்டத்தில் பாரியதொரு சேவையும் வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் களப்பரீட்சயத்தில் ஈடுபடும் மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளும் களச் சுற்றுலாக்களுக்காகவும், பயிற்சி நிகழ்ச்சிகளுக்காகவும் வழங்கக்கூடிய நிறுவனத்திற்கு உரித்தான ஒரேயொரு நிலையம் தலாவை பிதேச களக் கற்கைக்கான நிலையமாகும். மேலும் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா, உயர் டிப்ளோமாக்களுக்காக தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தரும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதன் ஊடாக மாணவர்களுக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் மாபெரும் வளமாகவும் காணப்படுகிறது.

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப்பணிக் கல்லூரி/பயிற்சிப் பிரிவின் ஊடாக நிலையத்தினை மையமாகக்கொண்டு நடாத்தப்படும் நிகழச்சிகள்**

**01.** சமூகப்பணி உயர் டிப்ளோமா பாடநெறி 2018/2019 கல்வியாண்டுக்கான பாடநெறித் தேவையின் அடிப்படையில் ஒழுங்குசெய்யப்படுகின்ற களக் கற்கைக்கான விஜயம் தலாவை பிரதேச நிலையத்தினை மையமாகக்கொண்டு ஒழுங்குசெய்யப்பட்டதுடன் அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள நலன்ரிநிலையங்களுக்கு மாணவர்கள் விஜயம் செய்தனர். 2019.10.06-11ம் திகதிவரை அந்நிகழ்ச்சிகளுக்கு தேவையான தங்குமிட வசதிகளும் சேவைகளை ஒழுங்குசெய்யும் நடவடிக்கைகள் பிரதேச நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**02.** பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற தமிழ்மொழிமூலமான உளவளத்துணை (அம்பாறை) மாணவர்களின் கல்வித் தேவைக்காக ஒழுங்குசெய்யப்பட்ட கள விஜயம் அநுராதபுரம் மற்றும்

வவுனியா மாவட்டங்களை மையமாகக்கொண்டு நடாத்தப்பட்டது. 2019.03.28ம் திகதி அதற்கு தேவையான தங்குமிட வசதிகள் மற்றும் சேவை வழங்கள் தலாவை பிரதேச வள நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

**03.** தேசிய சமூக அபிவிருத்தி நிறுவுனத்தின் பயிற்சிப்பிரிவினால் நடாத்தப்படுகின்ற உலக உளச் சுகாதார தின நிகழ்ச்சி 2019.11.20ம் திகதி அநுராதபுர இளைஞர் மன்றத்தில் நடாத்தப்பட்டது. அதற்குத் தேவையான சேவைகளை தலாவை பிரதேச வள நிலையத்தினால் ஒழுங்குசெய்து கொடுக்கப்பட்டது.

**வரவு செலவு விபரம்**

**அட்டவனை இல 16**

**2015ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு டிசம்பர் வரை தலாவை பிரதேச நிலையத்தின் வருமான விபரம்**

| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|
| **பண வருமானம் (ரூ.)** | 93,560.00 | 258,619.00 | 155,160.00 | 510,800.00 | 232,000.00 |
| **பணரீதியற்ற வருமானம் (ரூ.)** | 337,000.00 | 420,650.00 | 657,900.00 | 1,120,020.00 | 705,700.00 |

துலாவை பிரதேச வள நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட பாடநெறிகள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் மற்றும் பண ரீதியற்ற பெருமதியுடனான வருமான விரபரம் அட்டவனை இல 15 இன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

**வரைபட இலக்கம் 01**



**அட்டவனை இல 17**

**2019** ம் ஆண்டு மதாந்த வருமான விபரம்

| மாதம் | ஜன | பெப் | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஓகஸ்ட் | செப்ட் | ஒக்டோ | நவ | டிசம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டன அடிப்படை | 18,400 | 17,700 | 12,400 | 22,850 | 30,950 | 16,500 | 13,700 | 33,250 | 7,000 | 39,550 | 13,700 | 6,000 |
| இலவசமாக | 79,050 | 29,000 | 77,250 | 42,000 | 35,000 | 70,700 | 71,100 | 77,000 | 67,700 | 37,350 | 73,850 | 45,700 |

**வுரைபட இலக்கம் 02**




**அட்டவனை இல 18**

2019 ம் ஆண்டு தலாவை வள நிலையத்தின் செலவு விபரம்

| நீர் | மின்சாரம் | தொலைபேசி | ஏனைய | முழு செலவு |
|---|---|---|---|---|
| ரூ. 73,723 | ரூ.120,072 | ரூ. 36,840 | ரூ.48,662 | ரூ.279,297.00 |

மேலே குறித்த வரைபட இல. 02 இன் ஊடாகவும் அட்டவனை இல. 18 இன் ஊடாக தலாவை நிலைய செலவு விபரங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

<u>**2019** ம் ஆண்டு தலாவை வள நிலையத்தின் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள்</u>

01 புதிதாக கட்டில்கள் 25 கொள்வனவு செய்தல்

02 சொகுசு இருக்கை கொள்வனவு செய்தல்

03 புதிதாக கணிணியினை வழங்குதல்

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலாவை பிரதேச வள நிலையத்தில் இவ்வருடத்திற்குள் நடாத்தப்பட்ட குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன**

2019ம் ஆண்டு உளச்சுகாதார தினத்திற்காக இளைஞர் யுதவிகளுக்காக நடாத்தப்படட் குறுங்கால பயிற்சி

| | | |
|---|---|---|
| திகதி | : | 2019 நவம்பர் 20ம் திகதி |
| பாடநெறியின் பெயர் | : | உளச்சுகாதார தினத்திற்காக இளைஞர் யுவதிகளுக்கான குறுங்கால பயிற்சி |
| பங்குபற்றுனர் | : | இளைஞர் யுவதிகள் |
| வளவாளர்கள் | : | வைத்தியர் பிரனாந்து, திரு. இரோன் ஜயசேக்கர, நிலைய பொறுப்பதிகாரி சகன் பிரேமரத்ன |
| எண்ணிக்கை | : | **60** |
| சான்றிதழ் | | 55 |
| எதிர்பார்த்த எண்ணிக்கை | : | **80** |
| வழங்கப்பட்ட வசதி | : | நிறுவனத்தினால் சான்றிதழ் வழங்கியதோடு சிற்றுண்டியும் தேனீரும் பொறுப்பேற்றல் |

**2019ம் ஆண்டு நடாத்தப்பட்ட சுஹுரு கம்மான நிகழச்சி**

| | | |
|---|---|---|
| திகதி | : | 2019 நவம்பர் 27 மற்றும் 28ம் திகதிகள் |
| பாடநெறியின் பெயர் | : | பங்குபற்றல் கிராமிய கணிப்பு |
| பங்குபற்றுனர் | : | கிராமவாசிகளுக்காக |
| வளவாளர்கள் | : | திரு. ஏம்.எஸ்.எம்.அஸ்மியாஸ், திரு. ஹரிஹரதாமோதரன், திரு. உபைதுல்லாஹ், திரு. இரோன் ஜயசேக்கர, திரு. பீ.கே.எஸ் கருணாரத்ன, திரு. பிரியான ஹெட்டியாரச்சி, திருமதி. நிரோசனி, திருமதி சந்திமா, நிலைய பொறுப்பதிகாரி சகன் பிரேமரத்ன |
| புங்குபற்றியோர் | : | 25 |
| சான்றிதழ் எதிர்பார்க்கப்பட்டோர் | : | 50 |
| வழங்கப்பட்ட வசதி | : | நிறுவனத்தினால் சிற்றுண்டியும் தேனீரும் பொறுப்பேற்றல் |
| திகதி | : | 2019 டிசம்பர் 10ம் திகதி |
| பாடநெறியின் பெயர் | : | பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கான பயிற்சி |
| பங்குபற்றுனர் | : | சிறுவர்களுக்கும் பெற்றோருக்கும் வெவ்வேறாக பயிற்சி நடாத்தப்பட்டது |
| வளவாளர்கள் | : | திருமதி. தீப்தி நிரோசிக்கா, திரு. இரோன் ஜயசேக்கர, நிலைய பொறுப்பதிகாரி சகன் பிரேமரத்ன |
| எண்ணிக்கை | : | 25 |
| எதிர்பார்த்த எண்ணிக்கை | : | 50 |

| | | |
|---|---|---|
| திகதி | : | 2019 செப்டம்பர் 15ம் திகதி |
| பாடநெறியின் பெயர் | : | சிறுவர்களுக்கான பயிற்சி, ஓவிய சிகிச்சைமுறைமை |
| பங்குபற்றுனர் | : | வயதடிப்படையில் சிறுவர்களை வகுத்தல் |

| | | |
|---|---|---|
| வளவாளர்கள் | : | திருமதி. தீப்தி நிரோசிக்கா, திரு. பி.கே.எஸ் கரணாரத்ன, நிலைய பொறுப்பதிகாரி சகன் பிரேமரத்ன, பிரகீத் லஸன்த்த |
| எண்ணிக்கை | : | 100 |
| எதிர்பார்த்த எண்ணிக்கை | : | 120 |
| வழங்கப்பட்ட வசதி | : | சிற்றுண்டி தேனீர் பகலுணவு நிறுவத்தினால் பொறுப்பேற்றல் |

2019 **ஆண்டு கள மேற்பார்வையாளர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி**

| | | |
|---|---|---|
| திகதி | : | 2019 டிசம்பர் 10ம் திகதி |
| பாடநெறியின் பெயர் | : | கள மேற்பார்வையாளர்களுக்கு நடாத்திய குறுங்கால பயிற்சி |
| பங்குபற்றுனர் | : | கள மேற்பார்வையாளர்கள் |
| வளவாளர்கள் | : | திருமதி. தீப்தி நிரோசிக்கா, திரு. இரோன் ஜயசேக்கர, நிலைய பொறுப்பதிகாரி சகன் பிரேமரத்ன |
| எண்ணிக்கை | : | 09 |
| எதிர்பார்த்த எண்ணிக்கை | : | 15 |
| வழங்கப்பட்ட வசதி | : | பகலுணவு நிறுவத்தினால் பொறுப்பேற்றல் |

# சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவு

**பிரிவின் நோக்கு**

சமூகப்பணி, சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தி பாடத்துறை மற்றும் அதனுடன் தொடர்பான பல்வேறு ஆய்வுகளையும் கற்றல்களையும் மேற்கொள்வதற்கும், அதனுடன் தொடர்பான ஆய்வறிக்கை மற்றும் கல்வி வெளியீடுகளை வெளியிடுவதற்கும், பரந்தளவில் இலங்கையில் சமூக நலன்புரி மற்றும் அபிவிருத்தி பாடத்துறையுடன் தொடர்பான சமூக கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பதற்கு நடவடிக்கை மேறகொள்வதுமாகும்.

**ஆய்வுப் பிரிவின் செயற்பாடுகள்**

- சமூக ஆய்வு மற்றும் கருத்தாய்வு துறைகளை அடையாளம் காணலும் சமூகப்பணி மற்றும் சமூகப்பணி மற்றும் சமூக கொள்கைகளை தயாரிப்பதற்கு தேவையான திட்டங்களை உருவாக்குதலும்
- சமூக ஆய்வுகளில் ஈடுபட்டு, நிலவுகின்ற சமூக பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தி அரச கொள்கை மற்றும் பல்வேறு துறைகளுக்கு தேவையான தகவல்களை ஏற்படுத்திக்கொடுத்தல்
- உரிய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி புறக்கணிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் ஒன்றினைத்து பண்புசார் மற்றும் எண்ணிக்கை சார் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- ஆய்வு முன்மொழிவுப் பத்திரத்தினை தயாரித்தல், முன்வைத்தல், தரவுபகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆய்வறிக்கை தயாரித்தல்
- களத்திற்கு சென்று தகவல்களை சேகரித்தல் மற்றும் அவற்றின் இரகசியத்தன்மையை பாதுகாத்தல்
- சமூக ஆய்வுகளுடன் தொடர்பான தரவு வங்கியினை பேணுதல்

**ஆய்வுப்பிரிவின் வெளியீடுகள்**

**இலங்கை சமூகப்பணி சஞ்சிகை (Sri Lanka Journal of Social Work)**

சமூகப்பணிப் பாடமானது இந்நாட்டில் இதுவரை பிரபல்யமடையாத ஒன்றாக இருப்பினும் இன்றளவில் அப்பாடத்திற்கான தேவை உருவாகி வருகின்றது. அதனால் சமூகப்பணி பாடத்துறை சார்ந்த அறிவினை கல்வியியலாளர்கள் மத்தியில் பரவச் செய்வதற்காக தேசிய சமூக அபிவிருத்த நிறுவனத்தின் சமூக அபிவிருத்திக் கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் வருடாந்தம் "சமூகப்பணி சஞ்சிகை" வெளியிடப்படுகிறது. இச்சஞ்சிகை ஊடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் இலக்கிய மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடப்படுவதோடு அது கல்வியியலாளர்கள் மற்றும் சமூகப்பணி பாடத்துறையில் நுழையும் புதியவர்களுக்கு வழிகாட்டியாகும்.

2019ம் ஆண்டு வெளியிடப்பட்ட இச்சஞ்சிகையின் பிரதான தொணிப்பொருள் உலக சூழல் தொடர்பான சவால்களுக்கு சமூகப் பணி இடையீடு "Social Work Interventions for Global Environmental Challenges" என்பதாகும். மும்மொழியிலும் 08 சமூகப்பணி ஆய்வு ஆக்கங்கள் இதில் உள்ளடக்கப்பட்டன. இம்முறை சகபாடிகளின் மீளாய்வாக (Peer Reviewed) வெளியிடப்பட்ட இச் சஞ்சிகையில் சர்வதேச தரத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. சமூகப்பணித் துறைக்கு ஏற்ற மீளாய்வுக்குழுவினால் இரு தரம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை சமூக அபிவிருத்தி சஞ்சிகை** (Sri Lanka Journal of Social Development)

இலங்கையில் கல்வித்துறை தொடர்பான பெருமளவு உரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. சுயாதீனமான கல்விக் கொள்கையினை அடிப்படையாகக்கொண்டு நவீன கல்வி முறை கட்டியெழுப்பப்படுவதனால் அதன் செயற்திறன், கல்வியியலாளர்களின் அறிவுத்திறன், தற்போதுள்ள சமூக முறைமைக்கு அதன்மூலம் கிடைக்கப்பெறும் நலன் தொடர்பாக ஆழமாக கவனம் செலுத்தப்படுகின்றன. இந்த இடைவெளியை நிறப்ப தேசிய சமூக அபிவிருத்த நிறுவனத்தின் சமூக அபிவிருத்திக் கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த வகையில் இலங்கை சமூக அபிவிருத்தி சஞ்சிகையில் 2019 ஆம் ஆண்டுக்காக **சிறுவர் பாதுகாப்புக்கான சமூக பணி இடையீட்டு முறைகள்** என்ற தொணிபொருளில் சஞ்சிகை வெளிடப்பட்டுள்ளது. இதன் கீழ் பல கல்விசார் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கல்வி சார் எண்ணங்களை உருவாக்குதல் அவரவர்கள் தங்களுக்கேயுரிய விடயதானங்களை தொடர்புபடுத்தி கருத்துக்களை பரிமாரிக்கொள்வதும். இலங்கை சமூகத்தில் சமூக கட்டமைப்புக்குள் பல்வேறு அறிவியல் செயற்பாடுகளை கட்டியெழுப்புவதை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்ட இந்த கல்விசார் வெளியீடுகள் பொதுவாக மொத்த சமுதாயத்தினதும் அவிருத்தி செய்வதை மையமாகக்கொண்டுள்ளது.



### 03. மின்னியல் சஞ்சிகை E-Journal of Social Work (EJSW) *(Biannual – Peer Reviewed)*

**January – June (2019) – Volume(3) – 1st Issue**
**June – November (2019) – Volume(3) – 2nd Issu**

வருடம் இருமுறை சமூகப்பணி மின்னியல் சஞ்சிகை **"மனித உறவுகளின் முக்கியத்துவத்தை விருத்தி செய்தல்"** எனும் தொனிப்பொருளில் மும்மொழிக் கொள்கையினை அடிப்படையாகக்கொண்டு ஆக்கங்களை வெளியிடுகின்றன. இலங்கையில் காணப்படும் தற்கால சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவதற்காக சமூகப்பணி இடையீட்டின் தேவையினை அரசாங்க பிரிவினால் சிபாரிசு செய்திருப்பதனால் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டோடு உலகலாவிய ரீதியிலான கருத்தாடலை மேற்கொள்வது சாத்தியமானதொரு விடயமாகியுள்ளது.

அது தொடர்பாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இம்மின்னியல் சஞ்சிகை ஊடாக சமூகப் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களை வழங்குதவன் ஊடாக சமூகப்பணிக் கல்வி தொடர்பான பரந்த அறிவினை பரவலடையச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### 04. சமூக அபிவிருத்தி தொடர்பான மாணவர் சஞ்சிகை

சுமூகப்பணி அறிவினை மாணவர்களிடையே விருத்தி செய்வதற்கு தேசிய சமூக அபிவிருத்த நிறுவனத்தின் சமூக அபிவிருத்திக் கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் நடவடிக்கை வருடாந்தம் "Student Journal of Social Development" சஞ்சிகை வெளியீடப்படுகிறது. 2019 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட சஞ்சிகையின் தொணிப்பொருளாக "Scope of Social Work Education and Research". சமூகப்பணி பாடத்தை மையமாகக்கொண்டு ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் எழுதப்பட்ட கல்விசார் கட்டுரைகள் இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது. சுமூகப்பணி துறைக்கு உட்பட்ட பகுப்பாய்வு செய்யும் சபையின் மூலம் ஒவ்வொரு கட்டுரையும் இரண்டு முறை பரிசிலனை செய்யப்படும். இந்த சஞ்சிகை மூலம் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மாணவர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்படுவதுடன் அந்த மாணவர்களுக்கும் சமூகப்பணியில் புதிதாக உள்வாங்கப்படுபவர்களுக்கும் இது நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

### 05. செய்தித்தாள் (Newsletter)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வருடாந்தம் செய்தித்தாளினை வெளியிடுகின்றனர். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தொடர்பாக 2019ம் ஆண்டு குறித்த விபரங்கள் உள்ளடக்கி இவ்வெளியீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 2019ம் ஆண்டு 3காலாண்டுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இச்செய்தித்தாள் வெளியிடப்பட்டது. செய்தித்தாளில் பிரதானமாக நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் தற்போதைய தகவல்கள் ஒன்றுதிரட்டப்படுவதுடன் நிறுவனத்தின் கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பாக சமுதாயத்தை தெளிவூட்டுவதும் முக்கிய நோக்கங்களாக அமைகின்றன.

**ஆய்வுப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்.**

**01. மே மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பான ஆய்வு**

தேசிய கொள்கை, பொருளாதார, மிஞ்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நட்டஈட்டு அலுவலகத்தினால் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீடுகள் பிரிவுக்கு மே மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பான ஆய்வு செய்வதற்னான வாய்ப்பு கிடைத்தது.

ஆடிப்படையாக இந்த ஆய்வின் ஊடாக எதிர்பார்கப்பட்டது என்னவெனில் மே மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உள சமூகப்பிரச்சினைகள் எவை என அடையாளம் காண்பதாகும். ஆந்தவகையில் தாக்குதலினால் நேரடியாக ஏற்பட்ட சேதங்களாக சொத்துக்கள் இழந்தமை, சொத்துக்கள் அழிந்தமை, காயமடைதல், உயிர்சேதம் என்பன ஏற்பட்டது, மறைமுகமாக பார்க்கும்போது உயிர்சேதத்தால் குடும்ப அங்கத்தவர்களிடையே ஆளிடை தொடர்புகள் முறிவடைந்தமை, வருமான உழைப்பு இழக்கப்பட்டமை, வர்த்தக நடவடிக்கைகள் நிராகரிக்கப்பட்டமை என்பனவாகும். விசேடமாக இந்த தாக்குதலால் பாதிகப்பட்டவர்களின் தற்போதைய உள சமூக பிரச்சினைகளுக்கு குறுங்கால மற்றும் நீண்டகால நிறுவன ரீதியான இடையீடுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு இந்த ஆய்வு உறுதுணையாக இருந்தது.

**02. 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்கான ஆய்வு**

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் கத்தோலிக்க தேவாலயங்களில் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து தீவிரவாத முஸ்லிம் அமைப்பினால் தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட சமுதாயத்தை மையமாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு பிரதேசங்களாக 13 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. ஆவை அனுராதபுரம், பதுல்லை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, களுதரை, கண்டி, மொனராகலை, நுவரஎலிய, புத்தளம் மற்றும் வவுனியா என்பனவாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் நட்டஈடு பெற வேண்டிய தகுதியான பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணல். ஆவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் அவர்களுக்கு தேவையான சேவைகள் எவை என்பனவற்றை அடையாளம் கண்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கான இடையீட்டு பொறிமுறையொன்றை தயாரிக்க தேவையான விதந்துரைகள் செய்தல் மற்றும் நட்டஈட்டு செயன்முறையின் கீழ் நடைமுறைபடுத்த முடியுமான செயற்திட்டங்கள் அடையாளம் காண்பது முக்கியமாக உள்ளது. இதற்காக குறுங்கால நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த தேவையான செயற்பாடுகளை அடையாளம் கண்டு அந்த நிலைமைகளை அடைய பின்னணியொன்றை உருவாக்குதல் இந்த ஆய்வின் நோக்கமாகும். புாதிக்கப்பட்ட குடும்பங்களின் உள நெருக்கீட்டினை புரிந்து கொள்வதும் இந்த ஆய்வின் இன்னொரு முக்கியததுவமாக குறிப்பிட முடியும். அதுபோலவே பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், சவால்கள் அடையாளம் கண்டு தேவையான சேவைகளை வழங்க செயற்திட்டங்களை வகுக்க பாதிக்கப்பட்ட மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக அரசாங்க மட்டத்தில் சேவைகள் வழங்கப்படுகிறதா என்ற புரிதலை ஏற்படுத்தவும் இந்த ஆய்வு உதவியாக இருக்கின்றது.

### 03. பராமரிப்பாளர்களின் பயிற்சி தேவைகள் தொடர்பான ஆரம்ப ஆய்வு-2019

இலங்கையில் வேகமாக இடம்பெறும் முதியோர் சனத்தொகை கட்டமைப்பு மற்றும் அவர்களுக்கான பராமரிப்பு என்பனவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி சமூக, பொருளாதார, பராமரிப்பு பிரச்சினைகள், முதுயோர் இல்லங்களை அதிகரித்தல் பராமரிப்பாளர்களுக்கு தொழில்வாண்மை பயிற்சிகளை வழங்குதல். இந்த ஆய்வின் நோக்கம் என்னவெனில் நிறுவன பராமரிப்பில் முதியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இலங்கையில் நிறுவன ரீதியாக முதியோரை பராமரிப்பது தொடர்பாக தொழில்வாண்மையான அறிவை பகுப்பாய்வு செய்வதாகும். இந்த ஆய்வானது மேல்மாகாணம் மற்றும் தென்மாகாணம் என்பனவற்றில் தெரிவு செய்யப்பட்ட முதியோர் இல்லங்களை மையாகக்கொண்டது. இது தவிர மன்பு செய்யப்பட்ட ஆய்வுகள், பல்வேறு அறிக்கைகள், ஆய்வுகள் நோக்கத்தை அடைய பயன்படுத்தப்பட்டது.

இந்த இல்லங்களில் பராமரிப்பாளர் எண்ணிக்கை குறைவாக இருந்தமை, தவரான நிதி பிரயோகம், குறைந்த அலுவலர்கள், பயிற்சிக்கான வாய்ப்புகள் இல்லாமை, முதுமை பற்றி தேசிய கொள்கையொன்று இல்லாமை போக்குவரத்து வசதிகள் இல்லாமை, தகவல் பரமாற்றும் தொழில்நுட்பங்கள் இல்லாமை போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. இதனான் இந்த சவால்களை குறைப்பதற்கு ஏனைய பங்காளர்களின் பங்குபற்றல் அவசியமாக இருப்பதால் அரசாங்க மற்றும் ஏனைய பங்காளர்களின் ஊடாக சிறப்பாக செயற்படுத்துவதற்கு முன்னேற்றகரமான சேவைகளை, பராமரிப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

### 04. இலங்கையின் வறுமை நிலவுவதற்கான காரணகாரியங்களை அடையாளம் காணும் ஆய்வு (சமுர்தி அபிவிருத்தி நிகழ்ச்சி அடிப்படையாகக் கொண்டு)

இலங்கையில் வறுமையை குறைக்குமுகமாக பல்வேறு நிகழச்சிகள் நடாத்தப்பட்டதுடன் சமுர்தி அபிவிருத்தி நிகழச்சி அத்தகைய நிகழச்சிகளுள் முக்கியம் பெறுகின்றது. பொருளாதார சமூக மற்றும் கலாச்சார ரீதியில் சமூகத்தினுள் நபர், குடும்பம், குழு மற்றும் சமுதாயத்தினை வலுவூட்டுவதனை மைய இலக்காகக் கொண்டு அதன் ஊடாக வறுமைக்கான காரண காரியங்களை அடையாளம்கண்டு சமூக ஒருங்கிணைப்புடன் தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன சமுர்தி அபிவிருத்தி நிகழச்சிகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

வருடாந்தம் சமுர்த்தி அபிவிருத்தி நிதியத்தினை பெற்றுக்கொள்வதற்கான நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும் சமுர்த்தி அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக எதிர்பார்த்த இலக்கினை நோக்கி செல்வதற்கு பயனாளிகளுக்கு ஆற்றல் கிடைத்துள்ளதா என்பது தொடர்பான ஆய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்டது. பதியதலாவை, மொரவெவ, எல்பிட்டிய மற்றம் தனமல்வில ஆகிய பிரசெ செயலகப் பிரிவுகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சமுர்திப் பயனளிகளிகள் அதிகம் வாழும் பிரதேச செயலகங்களாக இவை காணப்பட்டமையினாலேயே இப்பிரதேச செயலகங்கள் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் பயனாளிகள் 10 வீதத்தினை ஆய்வுக்கு உட்படுத்தினர். அதற்கேற்ப முழு மாதிரிகளாக 500 பேர் தெரிவுசெய்யப்பட்டன. சமுர்தி அபிவிரத்தி நிகழச்சிகள் ஊடாக பெண்களுக்கு சமூகரீதியான வரப்பிரசாதங்கள் கிடைத்தலும் குடும்பத்தின் பொருளாதாரத்தினை வலுப்படுத்த தேவையான கடமைப் பொறுப்புக்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு வாய்ப்பு கிடைப்பதும் சிறு குழு கடண் ஊடாக சுயதொழில் ஆரம்பிப்பதற்கும் சுயதொழில்

அபிவிருத்திசெய்து கொள்வதற்கும் தலைமைத்துவ ஆற்றல் மற்றும் பல்வேறு பயிற்சித் தேவைகளை பெற்றுக்கொள்வதன் ஊடாக சமூகத்தில் செயற்பாட்டுக் குழுவாக வலுப்படுத்துவதற்கு தேவையான நேர்மயமான தாக்கத்தினை சமுர்தி அபிவிருத்தி நிகழ்ச்சியின் ஊடாக பயனாளிகளுக்கு பெற்றுக்கொள்ள முடிந்ததாக ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்டது. அவ்வாறே மிருகங்களின் தாக்கம் குறிப்பாக யானை மனித மோதல், பயனாளிகளின் தேவையை சரிவர அடையாளம் காணப்படாமை, கிடைக்கவேண்டிய பயன்களை உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமை, அரசியல் அதிகாரத்தின் தலையீடு, உத்தியோகத்தர் கட்டமைப்பின் குறைபாடுகள், தேசிய வறுமை ஒழிப்புக்காக நிலையான கொள்கை இல்லாமலிருத்தல் என்பவற்றோடு நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் தொடர்ச்சியாக மாற்றத்திற்கு உட்படுவதும் உரிய காலத்தில் தேவையான நிகழச்சியின் பிரதிபலன் கிட்டாமை சமுர்தி நிகழச்சியினுள் உள்ளடங்கப்பட்டிருக்கும் குறைபாடுகளாக ஆய்வின் மூலம் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.



## 05. ரண்ண கற்றல், பயிற்சி மற்றும் ஆய்விற்கான பிரதேச நிலையத்தினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட தேவை மதிப்பீட்டு ஆய்வு

சாத்தியக்கூறு ஆய்வு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கற்றல், ஆய்வு மற்றும் பயிற்சித் தேவைகள் அனைத்து இலங்கைவாழ் ஒவ்வொரு பிரஜைக்கும் பெற்றுக்கொடுக்கும் அடிப்படை ரோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு கற்றல், ஆய்வு மற்றும் பயிற்சி நிலையங்கள் 04 ஐ நிறுவியுள்ளனர். அவை, அம்பாறை, தலாவை மற்றும் கிளிநொச்சி ஆகிய நிலையங்களாகும். இக் கற்றல், ஆய்வு மற்றும் பயிற்சி நிலையங்களில் உளவளத்துணை, சமூகப்பணி டிப்ளோமா பாடநெறி, முதுமையீயல் மற்றும் முதியோர் பராமரிப்பு பாடநெறி மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான டிப்ளோமா பாடநெறிகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. இதன் ஊடாக சமுதாயத்துடன் பணிபுரிவதற்கு தேவையான கோட்பாட்டு ரீதியான மற்றும் பிரயோக அறிவினை பெற்றுக்கொடுப்பத்றதகு தேவையான பயிற்சி மற்றும் சமூக அணிதிரட்டலுக்கு தேவையான வழியாகட்டல்களை வழங்குவதும் இதன் நோக்கமாக இருந்தது. அரச சார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிகின்ற மற்றும் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு தேவையான இயலளவு மட்டத்தினை முன்னேற்றுவதும் அதற்கு மனித வளத்தினை ஒன்றுதிரட்டுவதனையும் அடிப்படையாகக் கொண்டு பாடநெறி மற்றும் நிகழ்ச்சகளை நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ரண்ண சமுதாய கற்றல், ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தினை ஹம்பாந்தோட்டையை மையப்படுத்தி நிறுவப்பட்டுள்ளதுடன் அங்கு பயிற்சி, ஆய்வு மற்றும் கற்றல் நிகழச்சிகளை முன்னேற்றுவதற்கும் இப் பிரதான நிலையத்தினை மையமாகக் கொண்டு தென் மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களில் குறித்த நிகழச்சியினை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான நிகழச்சிகளை ஒழுங்குபடுத்துவம் முக்கியமானதாகும். இதன் ஊடாக எதிர்பார்க்கபடும் முக்கிய நோக்கமாக ரண்ண நிலையத்தினை பிரதான மையத் தளமாகக்க கொண்டு தெண் மாகாணத்தில் பிரதான நகரங்களில் எமது நிறுவனச் சேவைகளை விரிவுபடுத்துவதும் தமது சேவைகள், பய்றிச மற்றும் கற்பித்தல் என்பவற்றை உரிய துறைகளுக்கு ஏற்ப நிகழச்சிகளை தயாரிது சேவைநாடிகளுக்கு வழங்குவதுமாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

- நிறுவனத்தின் கற்றல், ஆய்வு மற்றும் பயிற்சி தேவைகள் தொடர்பாக தென் மாகாணத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் விளக்கமளித்தல்
- சேவைநாடிகளுக்கு தமது போக்குவரத்து தொடர்பாக அல்லது ஏனைய பிரச்சினைகளை குறைப்பதன் ஊடாக நிறுவனத்தின சேவைகளை முறைப்படி வழங்குவதற்கு தேவையான சேவையை வழங்கக்கூடிய சூழலை உருவாக்குதல்.
- புதிய பாடநெறி, பயிற்சி, ஆய்வுத் தேவைகளை அடையாளம் கண்டு அதற்கு தேவையான நிகழச்சிகளை உருவாக்குதல்.

**06 கொட்டாவை நகரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சாதாரண போக்குவரத்து பேரூந்துகள் சிலவற்றை மாகும்புற பல்வித போக்குவரத்து நிலையத்திற்கு கொண்டுசெல்வதன் காரணமாக கொட்டாவை பிரயாணிகளும் வியபாரிகளுக்கும் ஏற்படக்கூடிய சமூக பொருளாதார தாக்கங்கள் பற்றிய ஆய்வு.**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்த்த சமூக பாடத்துறையை இலக்கக்காகக் கொண்டு கொட்டாவை நகரத்தில் செயற்படுத்தப்படும் சாதாரண போக்குவரத்து பேரூந்துகள் சிலவற்றை மாகும்புற பல்வித போக்குவரத்து நிலையத்திற்கு கொண்டுசெல்வதன் காரணமாக கொட்டாவை பிரயாணிகளும் வியபாரிகளுக்கும் ஏற்படக்கூடிய சமூக பொருளாதார தாக்கங்கள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட சாதாரண போக்குவரத்து பேரூந்துகள் சிலவற்றை மாகும்புற பல்வித போக்குவரத்து நிலையத்திற்கு கொண்டுசெல்வதன் காரணமாக கொட்டாவை பிரயாணிகளும் வியபாரிகளுக்கும் ஏற்படக்கூடிய சமூக பொருளாதார தாக்கங்கள் எத்தகையது என்பதனை அடையளம் காணும் நோக்கில் குறித்த ஆய்வு நடாத்தப்பட்டது. இங்கு பயணிகளினதும் வியாபாரச் சமூகத்தினைதும் கருத்துக்களை கருத்திற்கொள்வது முக்கியம் என்பதனால் ஆய்வு மாதிரகளாக சாதாரண போக்குவரத்தினை பயன்படுத்தும் பயணிகள் மற்றும் வியாபார சமூகத்தினர்களை உள்ளடக்கியவாறு எளிய எழுமாற்று மாதிரித் தெரிவு முறையின் கீழ் எழுமாற்று மாதிரிகளின் கீழ் 100 பேரை மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வுடன் தொடர்பான தரவுகளை திரட்டுவதற்கு வினாக்கொத்தும் அவதாணிப்பு முறையும் பயன்படுத்தப்பட்டது.

**ஆய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள்**

**01. ஆய்வு அறிக்கை வெளியிடுதல்**

## SCHEDULE - 05 FIXED DEPOSITS

| | | 2019 | 2018 |
|---|---|---|---|
| M.M.M.Nazeer & Family Fund | 143-6001-0000-3306-9 | 69,906 | 69,906 |
| Daniel Sanders | 20001-17-85290 | 30,000 | 30,000 |
| Daniel Sanders | 20001-17-31696 | 30,000 | 30,000 |
| Daniel Sanders | 20001-16-06930 | 65,000 | 65,000 |
| Daniel Sanders | 20001-05-39449 | 90,000 | 90,000 |
| Daniel Sanders | 20001-05-41842 | 29,514 | 29,514 |
| Daniel Sanders | 143-6001-0000-2693-2 | 30,000 | 30,000 |
| Swarna Jayalath | 20001-16-06956 | 15,000 | 15,000 |
| People's bank | 143-6001-0000-1780-8 | 250,000 | 250,000 |
| People's bank | 143-6001-0000-1779-1 | 250,000 | 250,000 |
| People's bank | 143-6001-0000-1781-7 | 250,000 | 250,000 |
| People's bank | 143-6001-0000-2419-5 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2421-1 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2152-6 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2153-5 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2026-0 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2024-2 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2027-9 | 500,000 | 500,000 |
| People's bank | 143-6001-0000-2025-1 | 500,000 | 500,000 |
| Rasanayagam peoples bank MSW | 143-6001-0000-2701-2 | 30,000 | 30,000 |
| R. Jayasingha Imandi Ronali | 143-6001-0000-2153-3 | 25,000 | 25,000 |
| TG & MG Peoples bank MSW | 143-6001-0000-2352-4 | 50,000 | 50,000 |
| People's bank | 1436001000037289 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037270 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037261 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037252 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037243 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037234 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037225 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037216 | 1,000,000 | 1,000,000 |

NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT
NOTES TO THE FINANCIAL STATEMENTS
FOR THE YEAR ENDED 31 ST DECEMBER
*(All amounts are in Sri Lankan Rupees)*

| | | 2019 | 2018 |
|---|---|---|---|
| **(SCHEDULE - 05 FIXED DEPOSITS Contd...)** | | | |
| People's bank | 1436001000037207 | 1,000,000 | 1,000,000 |
| People's bank | 1436001000037190 | 1,000,000 | 1,000,000 |
| | | 15,214,420 | 15,214,420 |

**SCHEDULE - 06 EMPLOYEE BENEFITS**

| | 2019 | 2018 |
|---|---|---|
| **Non Current** | | |
| Mr. K. M. Y. Karunarathna | 1,109,399 | 633,107 |
| Mrs. M.T.R.S. Attanayaka | 1,166,968 | 635,096 |
| Mrs. V. Gowry Vasudeven | 1,066,643 | 407,233 |
| Mrs. E.A.M.S.P. Wijesekara | 551,961 | 179,721 |
| Mr. Varatharajah Jeyaruban | 551,961 | 188,510 |
| Mr. G karunakaran | 44,879 | 9,982 |
| Mr. U. L. M. Ashker | 398,890 | 93,620 |
| Mr. S. Hariharathamotharan | 488,946 | 127,425 |
| Mrs. M.K.G.I.U. Gunarathna | 199,989 | 38,119 |
| Mrs. C.M. Munasingharachchi | 199,989 | 36,813 |
| Miss. W.B.H. Jayawardena | - | - |
| Mrs.A.P.L.B.Nirukshi | 30,787 | 5,189 |
| Miss. V. Balamathy | 199,989 | 42,601 |
| Mrs. S. Sivakumaran | 199,989 | 44,312 |
| Mrs. L R Abewickrama | 166,658 | 28,238 |
| Miss H.M.D. Subodini Herath | 166,658 | 29,194 |
| Mrs. H.M.S. Niroshani | 166,658 | 36,474 |
| Mrs Y.H.S. Silva | 129,254 | 23,083 |
| Mrs. L.C.I. Silva | 129,254 | 31,321 |
| Mrs. L.K. Pushpakanthi | 682,591 | 243,692 |
| Mr. M.S.M. Asmiyas | 682,591 | 356,236 |
| Mrs. K. P. D. Niroshika | 499,224 | 141,671 |
| Mrs. K.S. Wadisingha | 279,223 | 49,092 |
| Mr. P.C. Hettiarachchi | 199,989 | 42,573 |
| Mrs. A.M.K.L. Adikari | 199,989 | 38,012 |
| Mr. A.H. Ubaidullah | 199,989 | 48,202 |
| Mr. B.K.S. Karunarathna | 199,989 | 42,573 |
| Mr. J.H.I. Prasad | 199,989 | 40,948 |
| Mr. T. Tharshan | 199,989 | 36,685 |
| Rev.O.Somananda Thero | - | - |
| Mr. J.K.P.U. Keerthi | 244,473 | 64,709 |
| Mr. H.M.S.B. Herath | | - |
| Mrs. H.K.S.K. Sirikumara | 196,935 | 36,257 |
| Dr. P.P.G.C. Siriwardena | - | - |
| Mrs. B.A. N.P. Wijebandara | 572,481 | 135,401 |
| Mrs. A.M. Manamudali | 184,719 | 28,934 |
| Miss S.H.N. Madushani Silva | 116,188 | 15,767 |
| Mrs A.E.Jayawarne | 116,188 | 16,303 |
| Mrs. K.C.K.Thabrew | 116,188 | 16,303 |
| Mr.A.H.Indika Sanjeeva | 116,188 | 19,584 |
| Mr.D.M. Wasanatha Kumara | 459,515 | 131,616 |
| Miss. K.N. Samanthi | - | - |
| Mr. S A S N Premarathna | 22,440 | 2,807 |
| Mr. K.S.W.Wickramasinghe | 133,934 | 34,021 |
| Mrs.C.H.D.Hettiarachchi | 424,248 | 193,360 |
| Mrs. Danushka Ussetti | 292,808 | 66,878 |
| Mrs. M.K. Palihakkara | 445,641 | - |
| Mrs. Nilupa Manathunga | 621,611 | 158,536 |
| Mrs. R.M. Renuka Damayathi | 562,410 | 136,574 |
| Mr. D.K.I. Wijerathna | 220,152 | 47,961 |
| Mr. H.C.B.Sumanapala | 132,518 | 37,867 |
| Mr. Y.M. Nimsath | 156,478 | 56,174 |
| Mr. P.L.Munasinghe | 116,188 | 38,791 |
| Miss. H.K.F. Rameeza | 159,021 | 35,011 |
| Mr. D.C.S. Gunawardhana | | - |
| Mrs. D. M. Pushpa Dissanayaka | 505,742 | 125,309 |
| Mrs. P. Deepika Damayanthi | 389,715 | 80,264 |
| Mrs. M. I. S. Neelakanthi | 483,417 | 209,321 |
| Mrs. G.L.Chamila Nilmini | | - |
| Mrs. Seetha Rathnayake | 483,417 | 183,989 |

**NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT**
**NOTES TO THE FINANCIAL STATEMENTS**
**FOR THE YEAR ENDED 31 ST DECEMBER**
*(All amounts are in Sri Lankan Rupees)*

| (SCHEDULE - 06 EMPLOYEE BENEFITS Contd...) | 2019 | 2018 |
|---|---|---|
| Miss K.kitnasamy | - | - |
| Mr. H. M. Upali Herath | 295,632 | 138,041 |
| Mrs. H. L. Nayana Liyanage | 453,132 | 105,762 |
| Mrs. Champika Gunasekara | 326,074 | 90,553 |
| Mrs. Yasanthika Madawalage | 274,920 | 48,853 |
| Mrs Nadika Priyadarshani.Silva | 248,556 | 53,139 |
| Mrs. M. S. A. Fathima Fareeha | 248,556 | 50,663 |
| Mr. W. Wimal Ranjith Silva | 300,895 | 53,054 |
| Mrs. R.Darshani | 171,940 | 25,420 |
| Mr. S. Eranga Mendis | 235,499 | 40,018 |
| Mrs. G.M. Dilani Kaushalya | 149,863 | 16,107 |
| Mrs. A.D. Jayasinghe | 149,863 | 22,642 |
| Mrs. R.S.K. Pinto | 149,863 | 18,526 |
| Mrs.W.A.S.V. Lakmali | 149,863 | 18,526 |
| Mr. W.I.N.Madusanka Silva | 149,863 | 17,860 |
| Miss. N.H. Hewapathirana | 127,953 | 18,526 |
| Miss. H. Seelawathi | 438,460 | 109,195 |
| Mrs. T.M.Kmalawathi | 106,628 | 26,329 |
| Mr.U.N.Samitha Silva | 106,628 | 13,368 |
| Miss.U.Thasila Banu | 106,628 | 15,965 |
| Mr.H K D Wijeyantha | 149,279 | 19,669 |
| Mrs. I.D.R. Maduwanthi | 106,628 | 14,306 |
| Miss. D.M.R. Charitha | 84,970 | 11,012 |
| Miss R.P.D. Arunodhi | 84,970 | 9,992 |
| Mr.T.D. Ariyadasa | 84,970 | 10,311 |
| Mr.S.M.T.B.Samarakoon | 84,970 | 17,989 |
| Mr. P. R. Dayananda | 483,546 | 288,175 |
| Mr. Pandula Widdanapathirana | 332,070 | 109,548 |
| Mr. A. A. Upali Rupasinghe | 284,414 | 100,253 |
| Mr. Janaka Kumara | 238,953 | 48,281 |
| Mr. J. A. Samantha | 238,953 | 69,919 |
| Mr. Ruwan Chandana | 170,468 | 43,481 |
| Mr.A.D.I. Pushpakumara | 125,454 | 26,246 |
| Mr.W.M.A. Bandara | 125,454 | 43,657 |
| Mr.Y.G.S.K. Jayalath | 103,050 | 13,141 |
| Mr. Jazooli Jeffry | 490,875 | 148,522 |
| Mr. D. M. D. Dissanayake | 465,455 | 186,795 |
| Mr. Amila Sampath | 396,540 | 88,320 |
| Mr. S. N. G. Premarathna | 232,909 | 92,809 |
| Mr. Dilanka Gunawardana | 137,081 | 25,730 |
| Mr. S.M. Asanka Jayaranga | 143,626 | 17,532 |
| Mr. Amila Prasad | | - |
| Mr.Y.M.B. Gayan | 122,694 | 21,734 |
| Mr.D.D.M. Jayasinghe | 101,900 | 11,656 |
| Mr.A.S.K.Alankara | 101,900 | 16,105 |
| Mrs. A.V. Nishali Silva | 101,900 | 16,105 |
| Miss.U.R.R.L. Madushani | 101,900 | 12,432 |
| Mr.W.G.Inika Prasad | 81,236 | 15,285 |
| Mrs.K.P.C. Nimalika | 101,555 | 15,285 |
| Mr. D.M.Samarasena | 97,265 | 63,273 |
| Mrs.B.G.M.Samarasinghe | 62,591 | 10,563 |
| Mrs.K.W.T.K.Karandawala | - | 10,563 |
| Mr. N.W.T.Chinthaka | | 6,599 |
| Miss. M.D.J.S.Gamage | 41,156 | 4,955 |
| Miss. M.H.L.C.Dayarathne | 41,156 | 5,281 |
| Mr. V.Kajendran | 41,156 | 7,420 |
| Mr. M.L.M.Sathsara | 42,151 | 7,420 |
| Mrs. H.P.S.Jayathilake | 42,151 | 9,369 |
| Mr.G.Karunakaran | | 9,982 |
| Mrs. K. M. Samalatha | 483,417 | 351,638 |
| Mr. Riddley Jayasinghe | | 337,056 |
| Mr.J.David | 40,346 | 6,117 |
| | **27,944,963** | **8,708,536** |

**NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT**
**NOTES TO THE FINANCIAL STATEMENTS**
**FOR THE YEAR ENDED 31 ST DECEMBER**
*(All amounts are in Sri Lankan Rupees)*

**SCHEDULE - 07 PAID COURSE FEE INCOME**

| | 2019 | 2018 |
|---|---|---|
| Hi. Dip in Psycho. Pro 19/20 | 26,000 | - |
| High Dip. in Social Work | 45,000 | - |
| High Dip. in Social Work 18/20 | 601,400 | 1,132,752 |
| Higher Dip in Counselling Pro | 120,000 | - |
| Hi. Dip. In Cou. 19/21 Col. | 358,000 | - |
| Hi. Dip in Cou. 14/16 | 128,000 | - |
| Dip in Social Work- Ranna 18/20 | 40,500 | 725,000 |
| Dip in Coun. 19/21 Jaf. - T | 918,000 | - |
| Dip in co. 17/19 Ampara-S | 931,450 | 867,000 |
| Dip in co. 17/19 Ampara - T | 1,925,926 | 2,422,500 |
| Dip in co. 19/21 Ampara - T | 161,000 | - |
| Dip Coun 19/21 Batti - T | 1,144,000.00 | 1,239,300 |
| Dip in co. 18/20 Thalawa | 974,000 | 1,071,000 |
| DCBC ( Kuru/Rat/Matara) | 2,736,000 | - |
| Dip in Coun 16/18 Thalawa | 45,000 | 1,224,000 |
| Dip. in Cou. 19/21 Thalawa | 618,000 | 1,224,000 |
| Course in child focused 17/18 | - | 247,500 |
| Dip in co. 18/20 Trinco. -T | 1,852,850 | 1,122,000 |
| Dip in cou. 18/20 Kili - T | 959,000 | 204,000 |
| Dip in cou. 17/19 Kili - T | 514,000 | 1,027,000 |
| Dip in Coun 16/18 Killi -T | 1,650,000 | 1,224,000 |
| Dip. in Cou. Kili. 19/21 | 420,000 | - |
| Dip. in Cou. 19/21 Kandy - T | 547,500 | - |
| Dip in co. 18/20 Kandy | | 1,377,000 |
| Dip in co. 18/20 Colo - S | 1,576,000 | - |
| Dip in co. 18/20 Colo - T | 795,000 | 1,020,000 |
| Dip in co. 16/18 Colo - T | 111,000 | 1,020,000 |
| Dip in co. 18/20 Colo- E | 443,050 | 1,020,000 |
| Dip. in Coun. 19/21 Col - T | 1,069,000 | 688,500 |
| Dip. in Coun. 19/21 Col -E | 823,000 | - |
| Dip in Coun 16/18 Colo - S | 50,000 | 892,500 |
| Dip.in.Counseling 2013/15 Tamil | 500 | 1,275,000 |
| Dip. in Coun. 19/21 Col - S | 1,070,224 | - |
| DCBC ( Kuru/Rat/Matara) | 722,500 | - |
| 3K Project | - | 194,700 |
| Certificate co.in coun 17/18-I | - | 352,000 |
| MSW 15/17 | 31,000 | 1,000 |
| MSW 16/18 | 1,722,250 | 1,876,250 |
| MSW 18/20 | 3,517,075 | 2,043,000 |
| DSW 18/19 | - | 20,700 |
| Women Empowerment Programme | - | 156,808 |
| Asia Fundation Programme | 6,045,795 | - |
| Dip in Community Correction16/18 | 2,750 | - |
| Dip in Community Corr. 18/20 | 858,672 | 1,701,000 |
| Dip. in co. 18/19 Samurdhi | 3,108,500 | 3,255,000 |
| Dip Child Pro 16/18(Anuradhapura) | - | 1,071,000 |
| Dip Child Pro16/18(Kilinochchi)T | - | 102,000 |
| Dip Child Pro 16/18(Monaragala) | - | 127,500 |
| Dip Child Pro 16/18(Ampara) | - | 107,100 |
| Dip Child Pro 16/18(Batticaloa) | - | 111,000 |
| Child Focused Com D(Killi 16) | - | 102,000 |
| Social Development Officers Programme | 85,200 | 26,260 |
| | **38,747,142** | **32,270,370** |

NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT
NOTES TO THE FINANCIAL STATEMENTS
FOR THE YEAR ENDED 31 ST DECEMBER
*(All amounts are in Sri Lankan Rupees)*

**SCHEDULE - 08 INTEREST FROM FIXED DEPOSITS**

| | | 2019 | 2018 |
|---|---|---|---|
| M.M.M.Nazeer & Family Fund | 143-6001-0000-3306-9 | 7,129 | 7,129 |
| Daniel Sanders Fund | | 27,618 | 28,143 |
| Swarna Jayalath Fund | 20001-16-06956 | 1,496 | 1,519 |
| People's bank F/D's | | 1,474,249 | 1,513,624 |
| Rasanayagam MSW Fund | 143-6001-0000-2701-2 | 3,248 | 3,248 |
| Imandi Ronali Fund | 143-6001-0000-2153-3 | 2,733 | 2,733 |
| TG & MG MSW Fund | 143-6001-0000-2352-4 | 5,375 | 5,440 |
| | | 1,521,847 | 1,561,836 |

**SCHEDULE - 09 DEFERRED INCOME**

| | 2019 | 2018 |
|---|---|---|
| Dip in co. 18/20 Colo - E | - | 688,500 |
| Dip in co. Trinco 18/20- T | - | 1,122,000 |
| Dip in co. 18/20 Colo - T | - | 1,020,000 |
| Dip in co. 18/20 Colo - S | 939,000 | 1,020,000 |
| Dip in co. 18/20 Kandy - T | - | 1,377,000 |
| Dip in cou. 18/20 Kili - T | - | 1,027,000 |
| Dip in co. 17/19 Ampara - T | 210,000 | 2,422,500 |
| Dip. in co. 18/19 Samurdhi | - | 3,255,000 |
| Dip in co. 18/20 Thalawa | - | 714,000 |
| Dip in co. 17/19 Ampara-S | - | 867,000 |
| Dip in co. 19/21 Thalawa | 1,320,000 | - |
| Dip in cou. 19/21 Kili - T | 800,000 | - |
| Dip in cou. 19/21 Batti - T | 813,000 | - |
| Dip in cou. 19/21 Jaffna - T | 1,299,000 | - |
| Dip in co. 19/21 Ampara-T | 743,000 | - |
| Dip in co. 19/21 Colo - S | 1,025,000 | - |
| Dip in co. 19/21 Colo - T | 1,035,000 | - |
| Dip in co. 19/21 Colo - E | 848,000 | - |
| MSW 19/2021 | 2,062,500 | - |
| MSW 17/19 | 703,000 | - |
| MSW 18/20 | 720,000 | 2,043,000 |
| | 12,517,500 | 15,556,000 |

**SCHEDULE - 10 COURSE FEES RECEIVABLE**

| | 2019 | 2018 |
|---|---|---|
| Dip:in Child Protection 16/18 | - | 480,500 |
| Dip in Coun Thalawa 2016/18 | - | 223,000 |
| Dip in coun.16/18 Colo - T | - | 253,450 |
| Higher Dip.in Co. 18/20 - S | 1,477,000 | - |
| Dip in Coun 16/18 Sinhala-Colo | - | 893,925 |
| Dip in coun 16/18 Thalawa-(sin) | - | 248,000 |
| Dip in coun. Kili-2016/18 Tamil | - | 63,000 |
| Certi.co.in child focused 17/18 | - | 30,000 |
| Dip In Child Prot - Batt 16/18 | - | 64,825 |
| Dip In child Prot - Amp16/18 | - | 1,250 |
| Dip In Child Prot - Anu 16/18 | - | 190,000 |
| Dip In Coun - killino - 16/18 | - | 12,000 |
| Dip In Coun - Puttalam - 16/18 | - | 29,500 |
| Dip In Coun - Batti - 16/18 | - | 991,600 |
| MSW 2016/18 | 2,631,000 | 336,000 |
| Diploma in Sign Language | | 75,150 |
| MSW 18/20 | 6,231,150 | 1,337,050 |
| Dip in co. 17/19 Ampara-S | 311,975 | 954,000 |
| Dip in co. 18/20 Thalawa | 350,000 | 3,448,500 |
| Dip. in co. 18/19 Samurdhi | - | 2,383,000 |
| Dip in co. 17/19 Ampara - T | 1,181,000 | 313,000 |
| Dip in cou. 18/20 Kili - T | 336,000 | 817,000 |
| Dip in co. 18/20 Kandy - T | 343,000 | 923,000 |
| Dip in co. 18/20 Colo - S | 176,000 | 379,000 |
| Dip in co. 18/20 Colo - T | - | 1,649,000 |
| Dip in co. Trinco 18/20 Tamil | - | 765,500 |
| Dip in co. 19/21 Kilino. - T | 800,000 | - |
| Dip in co. 17/19 Kilino. - T | 737,000 | - |
| Dip in co. 19/21 Thalawa - S | 1,444,000 | - |

NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT
NOTES TO THE FINANCIAL STATEMENTS
FOR THE YEAR ENDED 31 ST DECEMBER
*(All amounts are in Sri Lankan Rupees)*

| | 2019 | 2018 |
|---|---|---|
| (SCHEDULE - 10 COURSE FEES RECEIVABLE Contd...) | | |
| Dip in co. 19/21 Ampara B - T | 915,000 | - |
| Dip in co. 19/21 Colo. - S | 1,123,000 | - |
| Dip in co. 19/21 Colo. - T | 1,214,000 | - |
| Dip in co. 19/21 Jaffna - T | 1,350,000 | - |
| Dip in co. 19/21 Colo. - E | 863,000 | - |
| Dip In Coun - Batti - 19/21 | 1,181,000 | - |
| Dip in co. 18/20 Colo - E | 215,000 | - |
| | **22,879,125** | **16,861,250** |

SCHEDULE - 11 SPECIAL ADVANCE

| | 2019 | 2018 |
|---|---|---|
| K.P.C. Nimalika | (400) | - |
| Amila Prasad | 1,600 | 1,600 |
| K K Wimal Ranjith Silva | - | 2,000 |
| Y.Madawalage | - | 2,000 |
| H.M.Upali Herath | - | 2,000 |
| | **1,200** | **7,600** |

LEW/C/NISD/1/19/10 11 ஜனவரி 2021

**தலைவர்**

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று மற்றும் வேறு சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தற் தேவைகள் குறித்த 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 படி கணக்காய்வு அறிக்கை தொடர்பாக கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

---- ---- -------- ---- -------- ---- -------- ---- -------- ---- -------- ---- -------- ---- -------- ---- -------- ---- -------- ---- -------

**குறித்த அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது**

**டப். பீ. சீ. விக்ரமரத்ன**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

பிரதி 1. செயலாளர், சமுர்த்தி, வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய. சுயதொழில் மற்றம் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

2. செயலாளர், நிதி அமைச்சு

**தலைவர்**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று மற்றும் வேறு சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தற் தேவைகள் குறித்த 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12படி கணக்காய்வு அறிக்கை தொடர்பாக கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

1. <u>நிதிக் கூற்று</u>

1.1. <u>வரையறுக்கப்பட்ட அபிப்பிராயம்</u>

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுடன் தொடர்பான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டு கொள்கை பொழிப்புக்கள் உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் ஒன்றுசேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் 38ம் இலக்க நிதி அதிரச்சட்டத்திற்கேற்பவும் எனது எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) பிரிவின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் வரையறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விளக்கமளிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிற, நிறுவனத்தின் 2019 டிசம்பர் 31ம் திகதியிலமைந்த நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் நிதிப் பிரவாகம் இலங்கை அரச துறை கணக்காய்வின் தராதரங்களுக்கு ஏற்ப உண்மைத் தன்மையினையும் நியாயமான நிலையையும் எடுத்துக்காட்டுவது என்பது எனது கருத்தாகும்.

1.2. வரையறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்

(அ) கடந்த வருடங்களில் நடாத்தி முடிக்கப்பட்டிருந்த 16 பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக செலவழிக்கப்பட்டிருந்த. 2,962,450 ரூபாவையும் 2014 – 2016 மற்றும் 2016-2018 ஆகிய காலப்பகுதியில் நடாத்திமுடிக்கப்பட்டுள்ள 07 பாடநெறிகளுக்காக கிடைக்கப்பெற்ற 3737,250 ரூபாவினை பாடநெறி வருமானம் முன்னைய ஆண்டு செம்மையாக்கலாக திரட்டிய மிகைக்கு செம்மையாக்கப்படாது மீளாய்வாண்டின் நிதி செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டின் மிகையில் 774,800 ரூபா மேலதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகள் 13 இற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெறவேண்டிய 8,806,825 ரூபாவினை பாடநெறி வருமாண கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டில் வருமானம் அதன் அளவிலும் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக (இ.க.நி) நான் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். கணக்காய்வு நியமங்களின் கீழமைந்த எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விரிவாக் விளக்கப்பட்டுள்ளன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3. நிதிக்கூற்று தொடர்பான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கும் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் திறனை மதிப்பீடு செய்வது முகாமையின் பொறுப்பாக இருப்பதுடன், நிறுவனத்தை கலைப்பதோ அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதோ முகாமையின் நோக்கமாக இல்லாத போது அல்லது வேறு உண்மையான பதிலீடுகள் இல்லாத போது தொடர்ந்து இயங்குதலை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைத்தலும் நிறுவனத்தை தொடந்து இயங்கச்செய்தல் என்பதனை அடிப்படையாகக் கொண்டு உரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதிக்கூற்றுச் செயற்பாடுகளுடன் தொடர்பான பொறுப்புக்கள் அதன் அதிகாரப்பொறுப்புடையவர்களுக்குறியது.

2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உறுப்புரையின் படி அத்தகைய உருவகம் தொடர்பிலான வருடாந்த மற்றும் காலாகால நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கப் படுவதனை இயல்செய்வதற்கு அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் எல்லாம் பற்றிய தகுந்த புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் முழுவதிலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இடம்பெறவில்லை என்பதற்கான நியாயமான சான்றுறுதியியையும் எனது அபிப்பிராயத்தினையும் உள்ளடக்கிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் வெளியிடுவது எனது நோக்கமாகும், நியாயமான சான்றுறுதி என்பது உயர் மட்டத்தினலான சான்றுப்படுத்தலான போதிலும், அது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வினை முன்னெடுக்கும்போது அது எப்பொழுதும்

**பொருண்மையமான போலியான அறிக்கைகளை அற்றது என உறுதிப்படுத்தப்பட்டதாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறுகள் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குசெலுத்துவதன் காரணமாக போதுமான போலியான அறிக்கைகள் உருவாகக்கூடும் என்பதோடு, இந்நிதிக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளியல் தீர்மானங்களில் பாதிப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

இக் கணக்காய்வு என்னால் தொழில்வாண்மை நடுநிலைமை மற்றும் சந்தேகமின்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- நிதிக்கூற்றுக்களில் பொருள் தவறான கூற்றுக்கள் இருப்பின் அவை தொடர்பான அபாயங்களை கண்டறிந்து மதிப்பீடு செய்து, அவை மோசடிகள் அல்லது பிழைகள் மூலமானவையா எனக் கண்டறிந்து, அந்த அபாயங்களுக்குப் பொறுப்பாக பதிலளிக்கக் கூடிய வகையிலான கணக்காய்வு நடவடிக்கைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எமது அபிப்பிராயத்திற்கான அடிப்படைகளை வழங்கக்கூடிய பொருத்தமான மற்றும் போதுமான கணக்காய்விற்கான சாண்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். தவறுகளில் இருந்து வரும் பொருள் தவறான கூற்றுக்களினால் ஏற்படும் அபாயத்தை விட மோசடிகளில் இருந்து வரும் அபாயகரமானது பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதுடன் போலியான ஒன்றுகூடல், போலி ஆவணங்கள் தயாரித்தல், உள்நோக்கத்துடனான கைவிடல்கள் அல்லது உள்ளக நிர்வாக கைவிடல்கள் ஆகியன மோசடிகள் ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளை திட்மிடுவதற்காக நிருவனத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பான விளக்கத்தினை பெற்றுக்கொண்ட போதிலும் உள்ளக நிருவாகத்தன் வினைத்திறன் தொடர்பில் கருத்துக்களை வெளியிடவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீடு மதிப்பீடுகளில் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களில் உள்ள பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாடு தொடர்பில் ஏதேனும் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதாக என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் என்பதன் அடிப்படையினை பயன்படுத்துவதற்குள்ள பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறான நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் அபிப்பிராயப்படும்போது, நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையில் அவதானத்தை செலுத்த வேண்டும் என்பதுடன் அல்லது இத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எமது அபிப்பிராயத்தினை மாற்றுவது பற்றி கருத்திற்கொள்ள வேண்டும். எவ்வாறிருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிறுவனத்தின் தொடர்ச்சியான இயங்குதலை நிறுத்த காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்புக்கள் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பன மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்கு ஏதுவாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுக்ள பொருத்தமான நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தது.

எனது கணக்காய்வினால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகளாக பிரதான உள்ளக நிர்வாக குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிருவகிக்கும் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்த்தின் பிரகாரம் கீழ் காணப்படும் விடயங்கள் தொடர்பில் விசேட நிதி ஒதுக்கீடு உள்ளடங்குகிறது

- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்த்தின் 12 (ஆ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப, எனது அறிக்கைக்கான அபிப்பிராயத்திற்கான அடிப்பபடை பகுதியில் விளக்கப்படுத்தியுள்ள விடயங்களிலிருந்து வரும் தாக்கத்தினை தவிற, கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல் மற்றும் விளக்கங்களையும் பெற்றுக் கொண்டேன் என்பதுடன் எனது பரிசீலனையிலிருந்து இதுவரை சரியான கணக்குப்பதிவுகளை நிறுவனம் பேணுவதாக தோன்றுகின்றது.

- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்த்தின் 6(1) ஈ(iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் நிதிநிலைக்கூற்றுக்கள் முற்போந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்த்தின் 6(1) ஈ(iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்னைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் நிதிநிலை அறிக்கையில் உள்ளடங்குகிறது.

பின்பற்றப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுப்பதற்கும், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துமளவிற்கு ஏதேனும் எனது கவனத்திற்கு வரவில்லை.

- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்த்தின் 12 (ஈ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் ஆளும் சபையின் எவரேனும் ஒரு உறுப்பினர் நிறுவனத்தினால் செய்துகொள்ளப்பட்ட யாதாயினும் ஒரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தொழில்களும் பொறுப்பு முயற்சிகளுக்கு அப்பால் அக்கறை கொண்டிருக்கிறார் என்பது தொர்பாக அறியப்படவில்லை,

- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்த்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிற ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்துடன் அல்லது கணக்காய்வு

செய்யப்பட்ட உருவகத்தின் ஆளும் சபையினால் வழங்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட பணிப்புக்களுக்கு இணங்கியொழுகியிருப்பதாக அறியப்படவில்லை

| | சட்டதிட்டங்கள்/விதிவிதான துறைகள் | விளக்கம் |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமானம் 770 | நிறுவனத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத பொருட்களை அரசின் வெறு நிறுவனத்திற்கு பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதென கருதும்போது அல்லாது அதனை விற்பதற்கோ அழிப்பதற்கு சிபாரிசு செய்யக்கூடாது. எவ்வாறாயினும் இந்நிறுவனத்தினால் 4,077,000 ரூபா முழுப் பெருமதியைக் கொண்ட 42 அலுவலக உபகரண வகைகள் தொடர்பிலும் 22 குளிரூட்டி இயந்திரங்கள் தொடர்பிலும் பொருள் மதிப்பீடு செய்யாது ஏலமிடப்பட்டிருந்தது |
| (ஆ) | இலங்கை சோஸலிச குடியரசின் தாபனக் கோவையின் ii பந்தியில் 13.3 உறுப்புரை | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி 2018 யூலை 07ம் திகதிமுதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் 2020 நவம்பர் 30 வரை அதற்கான நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்காதிருந்தது. |

- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் தத்துவம், பணிகள் மற்றும் கடமைகளுக்கிணங்காத வித்தில் செயலாற்றியிருந்தது.
- 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் காலவரையறையினுள் ஏற்புடையற்பாலான சட்டதிடடங்களுக்கு இணங்கியொழுகி பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(3). வேறு கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) சமூகப்பணிக் கல்லூரியினர்ல நடாத்தப்படும் சமூகப்பணி நான்கு வருட பட்டப் பாடநெறிக்காக 2016ம் ஆண்டு முதல் 04 குழுக்களுக்காக 355 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பரிசீலனை வருடத்தினுள் மாணவர்கள் வகுப்பறை பகிஸ்கரிப்பு காரணமாக வகுப்பறை விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பரீசிலிக்கப்படும் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி ஆகும்போது பாடநெறிகளுக்கான மாணவர்களின் எண்ணிக்கை 282 ஆக குறைந்திருந்தது.

(ஆ)) நிறுவனத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் பதவிகள் 02உம், விரிவுரையாளர் பதவி (I மற்றும் II) 07உம், சிரேஸ்ட பயிற்சி உத்தியோகத்தர் பதவிகள் 01ம் ஆய்வு உத்தியோகத்தர் (I மற்றும் II)

பதிவிகள் 04உம் ஆய்வு உதவி உத்தியோகத்தர் பதவிகள் 03உம், ஆங்கில போதனாசிரியர் பதவி 02உம் என்ற வகையில் கல்விசார் நடவடிக்கைகளுடன் தொடர்பான பதவிக்ள 19இற்கான வெற்றிடங்கள் 2020 நவம்பர் 30 திகதியில் காணப்பட்டது. அதன் காரணமாக நிறுவனத்தின் பிரதான நோக்கமான பயிற்சி பாடநறிகளை நடாத்துவதற்கு தடையாக இருந்துள்ளது.

(இ) நிறுவனத்தின் நிதி மற்றும் நிருவாகத்துடன் தொடர்பான பதவிகள் 19இல் 09 பதவிகளுக்கான வெற்றிடம் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் கற்புல செவிப்புல நுட்பவியலாளர் பதவிகள் 02 உம் 10 வருடகாலமாக வெற்றிடமாக இருந்துள்ளது.

(ஈ) பரிசீலனை ஆண்டினுள் சமூகப்பணிக் கல்லூரியின் 06 சமூகப்பணி பட்டப் பாடநெறிகளுக்காக 16,798,000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 04 பாடநெறிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப 12,334,944 ரூபாவாகிய நூற்றுக்கு 73 வீதம் குறை பயன்பாடாக காணப்பட்டது.

(உ) சமூகப்பணிக் கல்லூரியில் கல்வி பயிலும் 140 மாணவர்களது மாணவர்நிதி வழங்குவதற்காக 132,800 ரூபாவும் 500 மாணவர்களுக்கா தொழில்வாண்மையாயன அபிவிருத்தி கற்றல் பயிற்சிக்காக வழங்குவதற்கு 750,000 ரூபாவும் சமூக நிகழ்ச்சித்திட்ட பாடவிதானத்தை பொழிப்புரை செய்வதற்கு 5,141,600 ரூபாவும் மற்றும் பாடநெறியினை நிறைவுசெய்த மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பாக பின்னூட்டலைப் பெறும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 1,000,000 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதனால் அந்நிகழச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்து மொத்த நிதியான 7,024,400 ரூபா எஞ்சியிருந்தது.

(ஊ) பரிசீலனை ஆண்டில் கிளிநொச்சி, தலாவை, புத்தளம் மற்றம் இரத்திரனபுரி ஆகிய பிரதேச பயிற்சி நிலையங்கள் மற்றும் கொழும்பு பயிற்சிப் பிரிவின் 2019/2020 உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகள் 06 இனை நடத்துவதற்கு 4,875,375 ரூபா நிதியினை ஒதுக்கியிருந்தாலும் அப்பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கேற்ப முழு நிதியும் குறை பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. போதியளவு மற்றும் முறையான விழிப்பூட்டல் நிகழச்சிகள் ஊடாக விழிப்பூட்டல்களை மேற்கொள்ளாதிருந்தமையால் போதியளவு எண்ணிக்கையான மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு முடியாதிருந்தமை இதற்கு காரணமாக இருந்தது.

டப்.பீ.சீ. விக்ரமரத்ண

கணக்காளர் நாயகம்

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று மற்றும் வேறு சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தற் தேவைகளும் குறித்த 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12படி கணக்காய்வு அறிக்கை தொடர்பான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கள் உள்ளடங்கிய அறிக்கை.**

**1.2** வரையறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்

(அ) 2020 கணக்காண்டிற்கான நிதி அறிக்கை தயாரிக்கும்போது இவ்வழுக்கள் மீண்டும் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நிறுவனவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் பட்டம் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளுக்காக அறவிடப்படும் கட்டனங்கள் பல நிதியாண்டுகளுடன் தொடர்புபடுவதனால் பாடநெறி வருமானம் அறவிடப்படக்கூடியது என்ற அடிப்படையில் பாடநெறி பூர்த்தியாவதற்கு எடுக்கும் காலத்தின் வீதாசாரமாக கணக்குவைக்கும் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. எனினும் வங்கியினால் பாடநெறி கட்டனத்தினை சேகரிக்கும்போது மாணவர்களினதும் நிதி பரிமாற்றும் வங்கிக் கிளைகள் மூலம் கட்டனம் செலுத்துபவரின் பெயர், பாடநெறிப் பெயர், வருடம் ஆகிய தரவுகளை வழங்காதையினால் மாதாந்த வங்கிக் கூற்றின் வருமானக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு திருத்தமாக கணக்குவைப்பதற்கு முடியாமையே இந்த கணக்கீட்டு குறைக்கு காரணமாக அமைந்துள்ளது.

தற்போது இவ் அசௌகரியத்தினை நீக்கிக்கொள்வதற்காக மக்கள் வங்கியின் உதவியுடன் கட்டனம் அறவிடுவதற்கு பரிமாற்றப்படும் பத்திரத்தின் மாதிரியினை முன்னேற்றி, பொறிமுறையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக வங்கிக் கூற்று குறித்த மாதத்தின் அடுத்துவரும் மாதத்திற்கான கட்டன வருமானத்தினை திருத்தமாக கணக்கு வைப்பதற்கு இயலுமானதாக இருக்கும்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

(அ) மாதாந்தம் 1,585,000/= ரூபா வாடகை அடிப்படையில் ராஜகிரியவில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்றில் நடாத்தப்பட்டு வந்த இந் நிறுவனம் 2019/12/31ம் திகதிவரை மாத்திரம் குத்தகை அடிப்படையில் தங்கியிருப்பதற்கு திரைசேரி மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு வருடத்தினுள் சீதுவை புதிய கட்டிடத் தொகுதிக்கு கொண்டு செல்லப் படவேண்டும் என அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமையியனால் சீதுவையில் நிர்மாணிக்கப்பட்டு வந்த கட்டிடத்திற்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை கொண்டு செல்வதற்கு எடுத்த தீர்மானத்தின் காரணமாக இப்புதிய கட்டிடத்தின் தன்மைக்கேற்ப பொருத்துவதற்கு பொருத்தமற்ற அல்லது பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத பண்டங்களை விசேட மதிப்பீட்டுக் குழுவினால் ஏலமிடப்பட்டது.

கட்டுமானப் பணி தொடர்பான நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்ப 80% மான பணிகள் முடியும் தருவாயில் இருந்த B பகுதியில் அலுவலக மற்றும் கற்றல் நடவடிக்கைகளை 2020/01/01ம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு இயலுமான வகையில் நிறுவனத்திற்கு உரித்தான அசையும் சொத்துக்களை ராஜகிரிய நிலையத்திலிருந்து எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இங்கு அச் சொத்துக்களை மதிப்பீடு செய்து புதிய கட்டிடத்திற்கு பொருத்துவதற்கு பொருத்தமான மரத் தளபாடங்களையும் அலுவலக உபகரங்கள் மற்றும் கருவிகள் மாத்திரம் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப ஆயுட் காலம் மற்றும் திருத்த வேலைகளின்றி பொருத்தக்கூடிய தன்மையை அடிப்படையாகக் கொண்டு இயங்கு நிலையில் இருந்த 09 குளிரூட்டல் இயந்திரங்கள் புதிய கட்டிடத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த அவதானிப்புக்களுக்கு ஏற்ப ராஜகிரிய நிலையத்திலிருந்த புதிய கட்டிடத்திற்கு பொருத்தமற்ற அலுவலக உபகரங்கள் 42உம் குளிரூட்டல் இயந்திரங்கள் 22 இனதும் செலவு 4,077,00/= ஆக இருப்பினும் இச் சொத்துக்கள் 2015ம் ஆண்டிற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பதனால் கணக்கீட்டுக் கொள்கை 3.2.4. (2)ற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டை கழிக்கும்போது புத்தகத்தில் அதன் பெறுமதி சூனியமாக ஆகிவிடக்கூடும். மேலும் இப்பொருட்களை ஏலமிடுவதற்கு முன்னர் 3 உத்தியோகாத்தர்களால் ஆராய்ந்து பார்த்து குறைந்தபட்ச ஏல விலை விதிக்கப்பட்டிருந்தது. ஏலத்தின்போது அதைவிட அதிக ஏலப் பெருமதிக்கு இப்பொருட்கள் நீக்கப்பட்டிருந்தன.

(ஆ) இணை அமைச்சுக்கள் ஊடாக பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்காக 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வின்னப்பங்கோரப்பட்டிருந்தாலும் அரசின் அனைத்துவித ஆட்சேர்ப்பும் இடைநிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்க முடியாதிருந்தது.

**3.** ஏனைய கணக்கீட்டு அவதானிப்புக்கள்

(அ) மாணவர்கள் வகுப்பறை விரிவுரைகளில் பங்கேற்காது தொடர்ச்சியாக வகுப்பறை பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதனால் பாடநெறியினை குறித்தவாறு கல்வி நாட்காட்டிக்கு ஏற்ப பூர்த்திசெய்ய முடியாமலாகி இருந்தது. மாணர்கள் தமது சமூகப்பணி பட்டப்பாடநெறிக்காக உரிய வரவேற்பு இல்லை எனக் கூறி முன்னெடுத்துச்சென்ற தொடர்ச்சியான வகுப்பரை பகிஸ்கரிப்பு இதில் நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது. சில மாணவர்கள் பாடநெறியினை விட்டு விலகியமை பாடநெறியில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்கான காரணமாகயுள்ளது

(ஆ) நிறுவனத்தில் பதவி வெற்றிடங்களுக்கு இணைத்துக்கொள்வதற்கு 2019ம் ஆண்டு செப்டம்பர் 12ம் திகதி விண்ணப்பங்கோரப்பட்டாலும் அரசின் அனைத்துவித ஆட்சேர்ப்பும் இடைநிறத்தப்பட்டிருந்த காரணத்தினால் நியமனங்கள் வழங்க முடியாதிருந்தது. அவ்வாறே 2020 மே மாதம் ஆளும் சபையின் ஆலோசனையின்படி அனைத்துவித நியமனங்களையும் புதிய ஆட்சேரப்பிற்கு ஏற்ப ஏற்பாடு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கேற்ப மீண்டும் ஆட்சேர்ப்புதிட்டத்தினை தயாரித்து முகாமைத்துவச் சேவை திணைக்களத்திற்கு அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(இ) நிறுவனத்தின் நிதி மற்றும் நிருவாக பதவிகள் அனைத்திற்கும் புதிய ஆட்சேரப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) மீளாய்வு ஆண்டினுள் சமூகப்பணிக் கல்லூரியின் 05 சமூகப்பணி முதுமாணி பாடநெறிகள் என திருத்தியமைக்கப்படவேண்டும். சமூகப்பணி முதுமாணி பாடநெறி 2018/19, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பாடநெறிகள் 03 உம், 2019/2020 ஆங்கில பாடநெறி என 04 பாடநெறிகள் நடாத்தப்பட்டு வந்ததுடன் 2020/2021 எனும் கல்வியாண்டில் மாணவர்கள் இணைத்துக்கொள்வதற்கு வின்னபங்கள் கோரப்பட்டிருந்தாலும் போதியளவு விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் அப்பாடநெறியினை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் அதன் பின்னர் அப்பாடநெறியினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) சமூகப்பணிக் கல்லூரில் கல்விபயிலும் 140 மாணவர்களுக்கு புலமைப்பரிசிலுக்காக ஒதுக்கப்பட்டிருந்து நிதி செலவிடப்படாமைக்கு மாணவர்கள் தொடரச்சியான வகுப்பறை பகிஸ்கரிப்பில் ஈடுபட்டமையினால் புலமைசப்பரிசில் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த காரணத்தினாலாகும். அவ்வாறே மாணவர்களின் தொழில்வாண்மையான கற்றல் பயிற்சியினை வழங்குவதற்க ஒதுக்கப்பட்ட நிதியும் பயன்படுத்தப்படவில்லை. சமூகப்பணி பாடவிதானத்தின் மீள் திருத்தத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி 1,500,000/= என திருத்தப்படுதல் வேண்டும். சமூப்பணி பாடவிதானத்தினை முன்னேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றதனால் இந்நிதியம் செலவிடப்படவில்லை. இச்செற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ளது. மாணவர்களின் வகுப்பறை பகிஸ்கரிப்பின் காரணமாக முன்னேற்றம் தொடர்பான பின்னூட்டலை மேற்கொள்வதற்கு ஒதுக்கியிருந்த நிதியும் பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஊ) 2019/2020 ஆண்டிற்காக 06 உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகளை பயிற்சிப் பிரிவினால் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் அப்பாடநெறிக்காக போதுமான மாணவர்கள் காணப்படாமையே அவ்வாண்டினுள் அக்குறித்த பயிற்சிப் பாடநெறியினை நடாத்தமுடியாமைக்கு காரணமாகும். மாணவர்கள் கட்டனம் செலுத்தி இப்பாடநெறியில் கலந்துகொள்வதுடன் அப்பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்கு குறைந்தது 40 மாணவர்களாவது இருத்தல் வேண்டும் என்பது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கொள்கையாகும். எனினும் போதியளவு மாணரவ்கள் இல்லாமையினால் அக்குறித்த 06 பாடநெறிகளை அதற்குறிய ஆண்டினுள் நடாத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும் 2019ம் ஆண்டு நடாத்த முடியாமற் போன அப்பாடநெறிகள் 2020.01.09ம் திகதி அரச வர்த்தமாணி அறிவிற்புக்கு ஏற்ப 2020ம் ஆண்டு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப,

1. கிளிநொச்சியில் நடாத்தப்படும் பாநெறிக்கான விண்ணப்பதாரிகள் 43 பேர் இருந்தமையால் இப்பாடநெறி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
2. தலாவையில் நடாத்தப்படும் பாடநெறிக்காக நேர்காணல் நடாத்தப்பட்டுள்ளதுடன் அப்பாடநெறிகளை ஆரம்பிப்பதற்குறிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது
3. புத்தளத்தில் நடாத்தபடும் பாடநெறிக்கு 42 மாணவர்கள் காணப்படுவதனால் தற்போது இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
4. ரத்னபுரியில் நடாத்தப்படும் பாடநெறிக்கு 49 மாணவர்கள் இருந்தமையினால் காணப்படுவதனால் தற்போது இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
5. 2019/2020 யாழ்ப்பாண உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிக்கு 51 மாணவர்க்ள இருந்தமையினால் தற்போது பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
6. 2019/2020 தலாவை உளவளத்துணை பாடநெறி மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆக இருந்தமையினால் இன்றளவில் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பாடநெறிகள் அனைத்தும் தற்போது இணையவழிக் கற்கையின் கீழ் விரிவுரைகளை நடாத்திவருகிறது.

எம்.ரீ.ஆர். சாமினி அத்தனாயக்க
பணிப்பாளர் நாயகம் (ப.க)
மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வி)
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.